பக்கங்கள்: இருபத்து எட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 17 வியாழக்கிழமை (03.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 342




14 காதற்ற ஊசியும் வராது கடைவழிக்கு



21 கோவை மாநாட்டுக்கு அணிதிரளுங்கள்



25 லெப்டினண்ட் கேணல் டோனி

# ஐ.நா உதவிச் செயலருடனேயே தமிழ்க் கூட்டமைப்பு சந்திப்பு

## பான் கீ-மூனுடனான பேச்சு ரத்து

நியூயோர்க், நவம்பர் 3

இலங்கை அரசு வழங்கிய கடுமையான இராஜ தந்திர அழுத்தத்தையடுத்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கும், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ-மூனுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடை பெறவிருந்த சந்திப்பு நடைபெறவில்லையெனத் தெரிகிறது.

இதனையடுத்து, ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் அந்தஸ்திலுள்ள உயரதிகாரியான லிங் பாஸ்கோவைச் சந்தித்த தமிழ்க் கூட்டமைப் பினர் அவருடன் பேச்சுகளை நடத்திய பின்னர் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பான மகஜர் ஒன்றையும் கையளித்திருக்கின்றனர்.

முன்னதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஐ.நா. செயலாளர் நாயகத்தை சந்தித்துப் பேசுவதற்குப் பூர்வாங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக கனடாவுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு அவசரமாக மீண்டும் அமெரிக்கா திரும்பியிருந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐ.நா. செயலாளர்

பக் 04

## சிறுநீரக நோயாளியான தமிழ் கைதிக்குப் பிணை

கொழும்பு, நவ.3

இரு சிறுநீரகங்களும் பாதிக் கப்பட்ட நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அரசியல் கைதியான இராசரத்தினம் ஜெகதீஸ்வரன் (வயது - 32) நேற்று பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார்.

கொழும்பு புதுக் கடை நீதி வான் நீதிமன்றின் உத்தரவின் பேரில் நேற்று புதன்கிழமை அவர் பிணையில்.

பக் 04

## கூட்டமைப்புக்கு சர்வதேசத் தோல்வி

### நியூயோர்க்கில் இருந்து சவேந்திர சில்வா

நியூயோர்க், நவ.3

ஐ.நா. செயலர் பான் கீ-மூனைச் சந் திக்கவுள்ளனர் என பெருமை கூறித் திரிந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னருக்கு, அவரைச் சந்திக்க முடியாமல் போனது சர்வதேச ரீதியில் ஏற்பட்ட படு தோல்வியாகும். இந்தத் தோல்வியை கூட் டமைப்பினர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

- இவ்வாறு நியூயோர்க்கிலிருந்து நேற்று இரவு 'உதயனு'க்குத் தெரிவித்தார் ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜென ரல் சவேந்திர சில்வா.

வெளிநாடுகளுக்கு விஜயம்

பக் 26

## லண்டன் செல்லும் கூட்டமைப்பினர் முக்கிய அதிகாரிகளுடன் சந்திப்பு

### மூன்று தினங்கள் அங்கு தங்கியிருப்பர்

லண்டன், நவ.3

அமெரிக்கா, கனடா ஆகிய நாடு களுக்குச் சென்று அங்குள்ள இராஜதந் திரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், நாளை மறுதினம் 5 ஆம் திகதி லண்ட னில் களமிறங்குகின்றனர்.

லண்டனில் மூன்று தினங்கள் தங் கியிருக்கும் இவர்களுக்கு நெருக் கமான நிகழ்ச்சிநிரலைத் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் பிரிட்டன் கிளை தயாரித்துள்ளது.

நாளைமறுதினம் 5 ஆம் திகதி காலை லண்டன் செல்லும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், செய லர் மாவை சேனாதிராசா, சுமந் திரன், சுரேஸ் பிரமச்சந்திரன் ஆகியோரை தமிழ்த் தேசியக்

பக் 27

## வடக்கு, கிழக்குக் காணிப்பதிவு வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, நவ.3

வடக்கு, கிழக்கில் காணி உரிமையாளர்கள் தமது விவ ரங்களைப் பதிவுசெய்யக்கோரி காணி ஆணையாளர் திணைக் களத்தினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைக்கு எதிராக தாக் கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு மேன்முறை யீட்டு நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

நீதிபதி டபிள்யூ.பி. ரஞ் சித் சில்வா முன்னிலையில் இவ்வழக்கு நேற்று விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. அப்போது வழக்கின் வாதிகள், பிரதிவாதிகள் ஆகிய இரு தரப்பினரும் சுற்ற றிக்கையின் ஆங்கில மொழிபெயர்ப்பை கருத்திற்கொள்ள

பக் 27

### மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இலவசமாக

## பஸில் வழங்கினார் மின்சாரம் நிறுத்தினார் அமைச்சர் சம்பிக்க

யாழ்ப்பாணம், நவ.3

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வால் 'வடக்கின் வசந்தம்' திட் டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரத்தை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம் பிக்க ரணவக்க நிறுத்தியுள் ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் தமது வாழ்விடங்களில் மீளக்குடியமர்ந்த பின்னர் அவர் களது மின்சார இணைப்புகளை 'வடக்கின் வசந்தம்' திட்டத் தின் கீழ் இலங்கை மின்சார சபை இலவசமாக வழங்கி வந்தது. அத் துடன் அவர்களுக்கு ஒரு வருடத் துக்கு இலவசமாக மின்சார விநியோகமும் அந்த திட்டத் தின் கீழேயே செயற்படுத்தப்பட் டது.

இருப்பினும் தற்போது மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் செயலா ளரினால் 01.10.2011

பக் 26

## முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கையில் நோர்வே

### கொழும்பில் நேற்று உடன்படிக்கை கைச்சாத்து

கொழும்பு, நவ.3

முன்னாள் புலிப் போராளி கள் வீடு திரும்புவதற்கும், புது வாழ்வை தொடங்குவதற்கும் அவர்களுக்கு உதவிபுரிய வேண்டும். இது மிகமிக அவசி யமாகும். அவர்களின் அவசரத் தேவைகளை நிறைவுசெய் வதற்கான பணியை குடியேற் றத் திட்ட நிறுவனம் முடுக்கி விட்டுள்ளது. முன்னாள் போரா ளிகள் தங்கள் வாழ் வாதாரங்களை மேற் கொள்வதற்கும், வாழ்க்கையைக் கட்டி யெழுப்

பக் 27



முன்னாள் போராளிகளின் மறுவாழ்வுக்கான உதவி ஒப்பந்தத்தில் நோர்வே தூதுவர் ஹில்டி ஹெரல்ட் ஸ்டெட்டும், குடியேற்றத் திட்ட நிறுவனத் தலைவர் ரிச்சார்ட் டென்ஜிக்கரும் கைச்சாத்திட்டனர்.

## 50 ஆயிரம் வீட்டுத் திட்டம் தாமதமாவதால் ஈழத்தமிழருக்கு இந்திய நேரடி நிதியுதவி

### ஒவ்வொருவருக்கும் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கத் தீர்மானம்

புதுடில்லி, நவ.3

50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருவதால் இலங்கைத் தமிழர் களுக்கு நேரடியாக நிதியுதவி வழங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி இலங்கை ரூபா மதிப்பில் ஒவ் வொருவருக்கும் தலா ரூபா 5 இலட்சத்து 50 ஆயி ரம் (இந்திய ரூபா மதிப்பில் 2 லட்சத்து 45 ஆயி ரம்) வழங்கப்படும் என்று தெரிகிறது.

இதற்காக ரூபா 1,000 கோடி ஒதுக்கப்பட்ட உள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்க ளுக்கு 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்க இந்திய அரசு உறுதியளித்தது. இதன்படி தமிழர் பகுதிகளான மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வீடுகளைக் கட்டத் திட்டமிடப்பட்டிருந்தது. கடந்த ஆண்டில் யாழ்ப்பாணம் பகுதி யில் 1,000 வீடுகளைக் கட்டிக் கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஓராண்டில் அங்கு 52 வீடுகள்

பக் 04

## பாடசாலை நேரம் 3 மணி வரை நீடிப்பது குறித்து விரைவில் முடிவு

### கல்வி அமைச்சர் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, நவ.3

பாடசாலை நேரத்தைப் பிற் பகல் மூன்று மணிவரை நீடிப் பதற்கான தீர்மானம் விரைவில் எடுக்கப்படும். தற்போதும்கூட நாட்டிலுள்ள சில அரச பாட சாலைகளில் 3 மணிவரை கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படுகின்றன - என்று கல்வி யமைச்சர் பந்துல குணவர்தன நேற்றுத் தெரிவித்தார்.

அவர் இதுதொடர் பாக மேலும் கூறியவை வருமாறு:-

காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை பாடசாலை

பக் 26

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/பக்கங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் அவ்வப்போது மழைபெய்யும் சாத்தியம்

COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
கார்த்திகை 02 2011
பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,452.28↑
மிலங்கா(MPI) 5,743.55↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,545.48Mn
பங்குகளின் அளவு(No.) 122.75Mn
வியாபாரம்(No.) 16,889
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
செலான் மேச்சன்(w) 0.30
மடுசீமா 19.90
இன்டஸ்ரியல் அஸ்போஸ்ஸ் 600.00
ஆஷா சென்றல் 226.00
லங்கா அலுமினியம் 44.50
குறைவு(Top 5 losers) - விலை. Rs.
ஈ.பி கிரேசி 1810.40
சாம்ஷன் இன்ரநஷனல் 149.90
உடபுசலாவ 35.00
ரான்ஸ் ஏசியா 75.00
கடுகஸ்தென்ன 56.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை பகிரங்கப்படுத்துவார் ஜனாதிபதி மஹிந்த

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 3

தேசிய நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை ஜனாதிபதி பகிரங்கப்படுத்துவார் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

'த ஹிந்து' இணையத்தளம் இச் செய்தியை நேற்று வெளியிட்டிருந்தது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கை மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மையை அறிந்து கருத்துக் கூறுவதற்காக நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்படும்வரை பொறுமையாக இருத்தல் என்ற நிலைப்பாட்டை அமெரிக்காவும் சில மேற்கு நாடுகளும் எடுத்தன.

இந்த அறிக்கை இம்மாதம் 15 ஆம் திகதியளவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அவ்வாறு கையளிக்கப்பட்ட பின் ஜனாதிபதி அதனைப் பகிரங்கப்படுத்துவார். அதை ஜனாதிபதியே கூறியுள்ளார்.



நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் இன்னும் கையளிக்கப்படாததால் அந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் திகதியை என்னால் இப்போது கூறமுடியாது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவந்ததும் இலங்கை மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானவை என்பதை சர்வதேசம் புரிந்துகொள்ளும்.

ஆனால், அதிகமான நாடுகள் இலங்கை மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானவை என்பதை ஏற்றுக் கொண்டுள்ளன. ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் நாம் இதை உணர்ந்தோம்.

அந்த மாநாட்டில் எமக்கு எதிராகப் பிரச்சினையைக் கிளப்புவதற்கு கனடா முற்பட்டபோது ஏனைய நாடுகள் அதைத் தடுத்து நிறுத்தின. இலங்கை மீதான குற்றச்சாட்டை அந்த நாடுகள் ஏற்கவில்லை என்பதை இதன்மூலம் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆகவே, நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை வெளிவந்ததும் எம்மைக் குற்றவாளிகளாகப் பார்க்கும் ஒருசில நாடுகளும் உண்மையைப் புரிந்து கொள்ளும் - என்றார். (த-சி)

# இன்று இடியுடன் மழை பெய்யும்

யாழ்ப்பாணம், நவ. 3

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

வடக்கு, மேற்கு, வடமேற்குப் பிரதேசங்களில் இடையிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் கொழும்பு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மழை அல்லது இடியுடன் கூடியமழையின்போது கடும் காற்று வீசக்கூடும். இடிமின்னல் சேதங்களைக் குறைத்துக் கொள்வதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கையாளுமாறு திணைக்களம் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

தென்.மேற்கு திசையில் காற்று வீசுவதுடன் தென் கிழக்கு கடற் பிரதேசங்களில் மணிக்கு 20-40 கிலோமீற்றர் வேகத்திலும் ஏனைய பிரதேசங்களில் 20-30 கிலோ மீற்றர் வேகத்திலும் காற்று வீசும் கடல் கொந்தளிப்பும் காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

# பல்கலைக்கழக ஊழியர்கள் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 3

பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்குச் சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஒரு மாத கால அவகாசம் முடிவுற்றுள்ளபோதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததையடுத்து அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று ஒருநாள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக ஊழியர்களும் நேற்று ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய சகல ஊழியர்களும் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர். (த-4)

# யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் விஞ்ஞான மாநாடு நாளை

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் விஞ்ஞான மகாநாடு நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி நினைவு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மருத்துவ பட்டப்பின் கற்கைகளுக்கான நிறுவனத்தின் பணிப்பாளரும் தேசமான்ய பேராசிரியர் றிஸ்வி ஷெரிப், கௌரவ விருந்தினராக என்பு முறிவு சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ஏ.பானகலவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பேராசிரியர் றிஸ்வி ஷெரிப், தொடர்ச்சியான மருத்துவக் கல்வி என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். தொடர்ந்து இரண்டாம் மற்றும் மூன்றாம் நாள் நிகழ்வு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த அமர்வுகளின்போது சுகாதார மேம்பாடு, பாலியல் ஆரோக்கியம், போதைப்பொருள் பாவனை, வாய்ச் சுகாதாரம் தொடர்பான நான்கு குழு நிலை அளிக்கைகளும் இடம்பெறவுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ள மூன்றாம் நாள் நிகழ்வில் பேராசிரியர் சிவஞான சுந்தரம் நினைவுப் பேருரையை "ஒரு காத்திரமான பராமரிப்பை நோக்கி ஒரு மனிதன் என்ற வகையில் நோயாளி" என்னும் தலைப்பில் உளநல, மனநோயியல் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சி.சிவயோகன் நிகழ்த்தவுள்ளார். (எ-15)

# சிகிச்சைக்காக சிங்கப்பூர் பயணமானார் துமிந்த

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூர் நோக்கிப் பயணமானார் என அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், துமிந்தசில்வா உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது என ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் விசேட வைத்தியர் மஹேசி விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையிலிருந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு 9.15 மணியளவில் துமிந்த சில்வாவின் உறவினர்கள் அவரை அழைத்துச் சென்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# வேலணை, புங்குடுதீவு வைத்தியசாலைகளுக்கு நிரந்தர வைத்தியர்களை உடன் நியமிக்குக

## பிரதேச சபைத் தலைவர் அவசர வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ.3

வேலணை மற்றும் புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைகளுக்கு உடன் நிரந்தர (எம்.பி. பி.எஸ்) வைத்தியர்களை நியமியுங்கள். வைத்தியர்கள் இன்மையால் தீவக வைத்தியசாலை முற்றாகச் செயலிழந்துள்ளது. ஒரு வாரத்துக்குள் தீர்வு கிடைக்க வேண்டும்.

வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா (போல்) இந்த அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நேற்று வடக்கு மாகாண ஆளுநருக்கும் சுகாதார அமைச்சருக்கும் இது தொடர்பான கடிதத்தை தொலைநகல் மூலம் அவர் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்.நகரில் இருந்து தீவகம் கடலால் பிரிக்கப்பட்ட பெரும் பிரதேசம் ஆகும். நீண்ட தூரங்களைக் கொண்டது இந்தப் பிரதேசம். இங்கு வாழும் மக்கள் வேலணை, புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைகளையே நம்பியுள்ளனர்.

இந்த வைத்தியசாலைகளுக்கு நிரந்தர எம்.பி.பி.எஸ். வைத்தியர்கள் இன்மையால் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியும் உள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் 11 வயதுச் சிறுமி ஒருவர் அவசர சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டவேளை அங்கு வைத்தியர்கள் இல்லை. அதனால் அந்தச் சிறுமியின் உயிர் பிரிந்தது.

இதனால் தீவக மக்கள் பெரும் துயர் அடைந்தனர். நாமும் இவ்வாறான சம்பவங்களால் வேதனை அடைகின்றோம்.

எனவே தீவகத்துக்கென பிரத்தியேகமான வைத்திய அதிகாரிகள், அம்புலன்ஸ் மற்றும் டாக்டர் விடுதிகள், மருத்துவ மாதுகள், தாதியர்கள் மற்றும் சேவைகள் வழங்கப்பட வேண்டும்.- என்றுள்ளது.

இந்த விடயம் குறித்து வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி டாக்டர் எஸ்.ஆர்.ஜூட் ஆகியோரின் கவனத்துக்கும் பிரதேச சபைத் தலைவர் கொண்டு வந்துள்ளார். (ஒ-302)

# நிகழ்வுகள்

**ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்**

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (ஒ-7)

**அபிவிருத்திச் சங்கப்பதிவு நிகழ்வு**

மக்கள் வங்கி சுன்னாகம் கிளையினால் உருவாக்கப்பட்ட அளவெட்டி விநாயகர் அபிவிருத்திச் சங்கத்தை பதிவு செய்வதற்கான நிகழ்வு இன்று முற்பகல் 10.30 மணிக்கு அளவெட்டி மத்தி மகாஜன மண்டபத்தில் திருமதி இ.தெய்வநாயகி தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன் கலந்துகொள்வார். (ஒ-313)

**மருத்துவம் தொடர்பான விரிவுரை**

யாழ். விஞ்ஞான சங்க "சி" பிரிவின் ஏற்பாட்டில் "ஆரோக்கிய வாழ்வுக்கான கொழுப்புணவுகள்" எனும் தலைப்பிலான விரிவுரை நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி முரளி வல்லிபுரநாதன் கலந்து கருத்துரை வழங்குவார். (ஒ-313)

**கல்விக்கான உதவி**

வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேசத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு கியூடெக் கரிதாஸ் நிறுவன அனுசரணையில் கல்விக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டாம் கட்டமாக வழங்கப்படும் இந்தக் கொடுப்பனவுக்கு 41 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுடன் வந்து கல்விக்கான நிதி உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த-10)

**முதியோர் இல்லத்தில் கலந்துரையாடல்**

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் யுனிசெவ் நிதியின் உதவித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு கைதடி முதியோர் இல்ல பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-121)

# வலி.வடக்கு பாதுகாப்பு வலயத்தைப் பார்வையிட்டனர் ஜனாதிபதி விசேட செயலணியின் உறுப்பினர்கள்

### மீளக்குடியமர்ந்த மக்களைச் சந்தித்து நிலைமைகளை கேட்டறிந்தனர்

யாழ்ப்பாணம், நவ.3

வலி.வடக்கில் அமைந்துள்ள உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகள் மற்றும் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஜனாதிபதி விசேட செயலணியின் உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று நேற்று முன்தினம் பார்வையிட்டனர்.

ஜனாதிபதியின் விசேட செயலணியைச் சேர்ந்த ரட்ண கேபி, விக்கிரமசிங்க ஆகியோரே நேற்றுமுன்தினம் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்தவர்களாவர். இவர்களுடன் பலாலி இராணுவ படைத்தளத்தைச் சேர்ந்த உயரதிகாரிகளும் இணைந்தே உயர் பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிட்டுள்ளனர்.

மக்கள் மீள்குடியமர்வுக்கு இதுவரையிலும் அனுமதிக்கப்படாத பிரதேசங்களையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் அவை அகற்றப்படாமைக்கான காரணங்கள் தொடர்பிலும் ஆராய்ந்துள்ளனர்.

மேலும் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளையும் அவர்கள் சென்று பார்வையிட்டுள்ளனர். அங்குள்ள மக்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்ததுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராய்ந்தனர். அத்துடன் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் மீளக்குடியமர விண்ணப்பத்திருப்பவர்களின் எண்ணிக்கை போன்ற விவரங்களையும் அவர்கள் திரட்டியுள்ளனர்.

இந்த வருட முடிவுக்குள் மக்கள் சகலரையும் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும் என்ற நோக்கிலேயே இந்த விவரங்கள் திரட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி விசேட செயலணியைச் சேர்ந்தவர்கள் இன்றைய தினம் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரையும், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஓ-15)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முதன்முறையாக கிளிநொச்சியில்

### அடுத்த மாதம் 29ஆம் திகதி நடக்கும்

யாழ்ப்பாணம், நவ.3

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் அந்த மாவட்டத்திலேயே நடத்தப்பட வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கிளிநொச்சி மாவட்டம் தொடர்பிலான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் கிளிநொச்சியில் ஆராய்வதே பொருத்தமானதாக இருக்கும். எனவே உடனடியாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக்கூட்ட நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா பதிலளிக்கையில், நாடாளுமன்றவரவு - செலவுக் கூட்டத்தொடர் முடிவடைந்தபின்னர் அதனை நடத்த முடியும் என்று தெரிவித்தார். அதனடிப்படையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி கிளிநொச்சியில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படும் என்று தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

(ஓ-15)

# பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதான இளைஞர் விடுதலை

யாழ்ப்பாணம்,நவ.3

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த ஒருவர் அவரது குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டதை அடுத்து யாழ். மேல் நீதிமன்றினால் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த நவரத்தினம் பாலசிறி என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டார்.

1998 ஆம் ஆண்டு ஜனவரி-டிசெம்பர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், மாங்குளம் மூன்று முறிப்பு என்ற இடத்தில் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்திருந்து ராணுவத்தினரின் 'ஜெயசிக்குறு' தாக்குதல் நடவடிக்கையின் போது இராணுவத்தினருக்கு எதிராக யுத்தம் புரிந்தார் என்று குற்றஞ் சாட்டில் இவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இவர் காலி மற்றும் மகசின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார். பின்னர் இவர் தொடர்பான வழக்கு கடந்த மார்ச் மாதம் யாழ். மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டிருந்தது. மேலதிக நீதிவான் எஸ்.பரமராஜா முன்னிலையில் இந்த வழக்கு நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் சந்தேக நபர் மீதான குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்டது. இது சட்டமா அதிபர் திணைக்களத்துக்குப் பரிசீலனைக்காக அனுப்பிவைக்கப்பட்டது. பின்னர் நேற்று முன்தினம் அவர் யாழ். மேல் நீதிமன்றினால் நிரபராதி என விடுதலை செய்யப்பட்டார்.

(த-4)

# பதினொரு பிரதேச செயலர்களுக்கு ஜனவரி மாதம் முதல் இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ.3

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டுக்கான இடமாற்றங்களின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தின் 11 பிரதேச செயலர்கள் எதிர்வரும் 2012 ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.அபயகோனினால் 20.10.2011 அன்று திகதியிடப்பட்ட இடமாற்றக் கடிதங்கள் சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதம செயலாளர்கள், ஆணைக்குழுக்களின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இடமாற்ற சபையால் வகுக்கப்பட்ட இடமாற்ற நடைமுறைகள் ஏற்கனவே பொது நிர்வாக அமைச்சின் சுற்று நிருபம் 16/2011 மூலம் 08.09.2011 திகதியிடப்பட்டதும், 16/2011(ii) மூலம் 10.10.2011 திகதியிடப்பட்டதுமான கடிதம் மூலம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இலங்கை முழுவதுமாக 131 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 11 பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் இந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

கரவெட்டி பிரதேச செயலராகக் கடைமையாற்றிய எஸ். சத்தியசீலன் யாழ். பிரதேச செயலராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். சங்கானை பிரதேச செயலாரகக் கடைமையாற்றிய திருமதி பி. தேவநந்தினி காரைநகர் உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலராகக் கடைமையாற்றிய ஆர். வரதீஸ்வரன் கரவெட்டி பிரதேச செயலராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். நல்லூர் உதவிப் பிரதேச செயலராகக் கடைமையாற்றிய ஏ. சோதிநாதன் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்கு பிரதேச செயலராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபராகக் கடைமையாற்றிய ரி. ஜெயசீலன் பருத்தித்துறை பிரதேச செயலராகக் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ். பிரதேச செயலராகக் கடைமையாற்றிய திருமதி ரி. சுகுணரதி நல்லூர் பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உடுவில் பிரதேச செயலராகக்கடைமையாற்றிய திருமதி எஸ். மஞ்சுளாதேவி வேலணைப் பிரதேச செயலராகவும், வேலணைப் பிரதேச செயலராக கடைமையாற்றிய எம். நந்தகோபாலன் உடுவில் பிரதேச .செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலராகக் கடைமையாற்றிய எஸ். முரளிதரன் சண்டிலிப்பாய் பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். சண்டிலிப்பாய் பிரதேச செயலராகக் கடைமையாற்றிய திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்கஅதிபராகவும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராகக் கடைமையாற்றிய கே.ஸ்ரீமோகனன் தெல்லிப்பழை பிரதேச செயலராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலராகக் கடைமையாற்றிய பா. செந்தில்நந்தனன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளபோதிலும் எங்கு இடமாற்றம் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடப்படவில்லை.

மேலும் கோப்பாய் பிரதேச செயலர், தென்மராட்சிப் பிரதேசசெயலர், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் இடமாற்றம் செய்யப்படவில்லை.

இந்த இடமாற்றங்கள் தொடர்பான மேன்முறையீடுகளை இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டடுள்ளது. (த-15)

# மகஸின் பெண்கள் சிறைப்பிரிவில் கையடக்கத் தொலைபேசிகள் மீட்பு

### திடீர் சோதனை நடவடிக்கையில் சிக்கின

கொழும்பு, நவ.3

கொழும்பு மகஸின் சிறைச்சாலையின் பெண் கைதிகளைத் தடுத்து வைத்துள்ள பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின் போது மறைத்துவைக்கப்பட்டிருந்த 9 கையடக்கத் தொலைபேசிகளும், பல பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு சிறைச்சாலை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளும், அதன் சிம் கார்ட்டுகளும் சிறைச்சாலைத் தலைமையகத்துக்கு நேற்று வந்த புலனாய்வுப்பிரிவு அதிகாரிகளிடம் விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டன.

- இவ்வாறு மேலதிக சிறைச்சாலைகள் ஆணையாளர் அசோக்க ஹப்புஆராய்ச்சி நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது தொலைபேசி சார்ஜர்கள், மீள்நிரப்பு அட்டைகள் ஆகியனவும் பெறப்பட்டன என்றார்.

சிறைச்சாலையின் பெண் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள பகுதிகளில் இரவு நேரங்களில் தொலைபேசி பயன்படுத்தப்படுவதாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே மேற்படி தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சிறைச்சாலைக்குள் கையடக்கத் தொலைபேசிப் பாவனையைத் தடுப்பதற்கு எதிர்காலத்தில் உகந்த நடவடிக்கை ஒன்று எடுக்கப்படும் என மேலதிக சிறைச்சாலைகள் ஆணையாளர் கூறினார்.

இதேவேளை, மகஸின் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவும், கைதிகளைக் கண்காணிக்கவும், இதர வேலைகளுக்கும் ஆள்பற்றாக்குறை நிலவுகிறது என அவர் தெரிவித்தார்.

சிறைச்சாலையில் தொலைபேசிப் பாவனை ஊடுருவலுக்கு அதிகாரிகள் பற்றாக் குறையும் ஒரு காரணம் என அவர் சுட்டிக்காட்டினார். (த-சி)

# வைத்தியர் படுகொலை தொடர்பில் இராணுவக் கப்டன் நீதிமன்றில் ஆஜர்

கொழும்பு, நவ.3

காலி, கரந்தெனிய பகுதியிலுள்ள வைத்தியசாலைக்கு முன்பாக வைத்தியர் பிரசாத் ஜயசிங்கவை திட்டம் தீட்டிக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட இராணுவக் கப்டன் ஒருவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தியுள்ளனர்.

குறித்த வைத்தியரை கொலை செய்தவதற்கு கரந்தெனியவைச் சேர்ந்த சிந்தன ருவான் ஜயசேகர என்ற நபரும் உடந்தையாக இருந்தார் என விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது எனவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதில் சம்பந்தப்பட்டுள்ள ஏனைய சந்தேக நபர்களையும் கைது செய்வதற்கான விசாரணை நடத்துவதற்காக இச்சந்தேக நபரை தடுத்துவைப்பதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அனுமதி கோரியுள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி வைத்தியர் படுகொலை இடம்பெற்றது என்பது குறிப்பித்தக்கது.

(த-சி)

# இந்திய இராணுவ அதிகாரிகள் வடக்குக்கு விஜயம்

கொழும்பு, நவ.3

இந்திய இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவொன்று இலங்கை வந்துள்ளது. இவர்கள் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல மாவட்டங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளனர் என இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்பு ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

கல்வி நடவடிக்கைகளுக்காகவே இந்திய இராணுவத்தின் 17 பேர் கொண்ட சிரேஷ்ட அதிகாரிகள் குழு இலங்கை வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

(த-சி)

# மரண அறிவித்தல்கள்

## பரமானந்தம் பிரேமவாசன் (ராசா)



தொண்டமானாறைப் பிறப்பிடமாகவும் பளையை வசிப்பிடமாகவும் தற்சமயம் சுவிஸில் வாழ்ந்து வந்தவருமான பரமானந்தம் பிரேமவாசன் (ராசா) நேற்று முன்தினம் (01.11.2011) செவ்வாய்க்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் கிராமசேவையாளர் பரமானந்தம்-வள்ளிநாயகி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், கோமதி பாலசிங்கம் (பளை), அகில்மதி முரளிதரன் (கனடா), சுமதி அருந்தவராசா (கொழும்பு), குலமதி ராதாகிருஷ்ணன் (லண்டன்), கோபிவாசன் (சுவிஸ்), மதனவாசன் (ஆசிரியர்-தமிழ்மிரர்) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2011) வியாழக்கிழமை சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஏ.பி.மதன் (தம்பி, ஆசிரியர்-தமிழ்மிரர்)**

## தம்பிமுத்து சிவராஜா

(கொழும்பு வரையறுக்கப்பட்ட N.வைத்திலிங்கம் கம்பனி நிறுவனத்தின் முன்னாள் முகாமையாளர்)

கொழும்பு-வரையறுக்கப்பட்ட N.வைத்திலிங்கம் கம்பனி நிறுவனத்தின் முன்னாள் முகாமையாளர் தம்பிமுத்து சிவராஜா 31.10.2011 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் 'தங்கத்தாத்தா' நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் தாய்வழி மருமகனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராஜா சபாநாயகம் மற்றும் தியாகலிங்கம் (கொழும்பு), சுந்தரலிங்கம் (அமெரிக்கா), அன்னலிங்கம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெகதீஸ்வரி (கனடா), Dr.பாலச்சந்திரன் (லண்டன்), சரோஜினிதேவி (கனடா), மங்கனேஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரன் (கொழும்பு), தவனேஸ்வரி (கொழும்பு), சாவித்திரிதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பஞ்சலிங்கம் (கனடா), வசந்தவதி (லண்டன்), குணசிங்கம் (கனடா), மகேஸ்வரி (கொழும்பு), சிவலிங்கம் (கனடா), ஸ்ரீநிவாசன் (B.O.C-Pan Asia Bank), சுபாஸ்காந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், பத்மாவதி (அமெரிக்கா), தனலட்சுமி (கொழும்பு), கனகம்மா (யாழ்ப்பாணம்), பத்மலீலா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், யோகா-மஞ்சு (கனடா), ரவி-தெய்வசித்தி (கனடா), சிவா-வாணி (கனடா), கஜன்-அனு (கனடா), Dr.சசிரூபன் (லண்டன்), பிரகாஷ்-அனுஜா (கனடா), சுரேந்திரன்-அனுஜா (ஜேர்மனி), Dr.ஸ்ரீஹரன்-பிரியங்கா (அமெரிக்கா), திலீபன்-ஷேர்லி (கனடா), சுதர்ஸன்-மதனிகா (கனடா), பிரசாந்-காயத்திரி (கனடா), பிரதீபன்-தர்ஷிகா (கொழும்பு), லொயித்-நிஷா (கனடா), ஷர்மிளா (கனடா), சுபா (கனடா) ஆகியோரின் அருமைப் பேரனும், நிமேஷ், அபர்ணா, ரோஹித், சுஜன், வைஸ்ணவி, கீர்த்தனா, ஆகாஷ், திவ்வியா, ஜெய்ஷன், டிறேன், ஜெரோமி, லேலா, அதீதன், ஹெலப் நிகேலா, இவஞ்சலீன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு-05, ஹவலொக் வீதி, 173 ஆம் இலக்க இல்லத்தில் 02.11.2011 (புதன்கிழமை) முற்பகல் 10.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (03.11.2011) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3.00 மணியளவில் பொறளை (கனத்தை) இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

173, ஹவலொக் வீதி,
கொழும்பு-05.

தகவல்:
**Dr.சி.பாலச்சந்திரன் (மகன்),**
**ச.ஸ்ரீநிவாசன் (மருமகன்).**

## வடமாகாண ப.நோ.கூ.சங்கங்களின் சமாசம் (வரையுள்ளது)
## வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல்

பதவி: **எழுதுநர்** (302-13(66/2006படி))

1. சம்பள அளவுத்திட்டம்: 9950-11700 / 85x10-90x10
2. ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் (66/2006படி)
3. வயதெல்லை: 18-45
4. கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழுவால் பதவி உறுதிப்படுத்திய கூட்டுறவு சங்க பணியாளரின் வயது கருத்தில் கொள்ளப்படமாட்டாது. அவர்கள் அச்சங்கங்களினூடாக விண்ணப்பங்களை மேற்கொள்ளலாம்.
5. கல்வித் தகைமை:
   1. கூட்டுறவு பணியாளர் 12ஆவது சம்பள அலகில் எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 2 வருட அனுபவம் அல்லது இது போன்ற தொடர்புடைய கூட்டுறவு பணியாளர் 14 ஆவது சம்பள அலகில் 4 வருட அனுபவம். அல்லது
   2. க.பொ.த. சா/தர பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 6 பாடங்கள் சித்தியுடன் கணிதம்/வர்த்தக எண்கணிதத்துடன் தமிழ் உட்பட 5 திறமை சித்திகளுடன், கூட்டுறவு சங்கங்களின் எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 2 வருட அனுபவம்.

பதவி: **அலுவலக உதவியாளர்** (317-16(66/2006படி))

1. சம்பள அளவுத்திட்டம்: 9200-10650 / 70x10-75x10
2. ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் (66/2006படி)
3. வயதெல்லை: 18-45
4. கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழுவால் பதவி உறுதிப்படுத்திய கூட்டுறவு சங்க பணியாளரின் வயது கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.
5. கல்வித் தகைமை:
   1. கூட்டுறவு பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் ஆகக்குறைந்தது ஒரு வருட அனுபவத்துடன் 5ஆம் தர கல்வி சான்றிதழ் அல்லது
   2. 8 ஆம் தர கல்விச் சான்றிதழ்

*சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் தகைமை சான்றிதழ்களின் போட்டோ பிரதி இணைக்கப்பட வேண்டும்.*

முடிவு திகதி: **15.11.2011**

அனுப்ப வேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்,
வடமாகாண ப.நோ.கூ.சங்கங்களின் சமாசம்,
பரந்தன்.

## ஐ.நா உதவி..... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயகத்தை சந்திப்பதற்காக நேற்றுமுன்தினம் சென்றனர். ஆனால், தவிர்க்க முடியாத காரணத்தால் இந்தச் சந்திப்பு நடைபெற மாட்டாதென கூட்டமைப்பி னருக்கு ஐ.நா. செயலாளர் நாயகம் அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனையடுத்தே ஐ.நா. சபையில் அரசியல் துறைக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் லிங் பாஸ் கோவை சந்திக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### அரசின் அழுத்தம்

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐ.நா.செயலாளர் நாயகத்தைச் சந்திக்கும் விடயத்தில் இலங்கை அரசு வழங்கிய கடும் அழுத்தமே இதற்கான காரணமென்று நம்பப்படுகிறது.

முன்னதாக இது விடயம் குறித்து 'உதயனுக்கு' கொஹன்ன, பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் ஐ.நா. செயலாளர் நாயகம், தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களை சந்திக்கமாட்டார் என்று திட்டவட்டமாகக் கூறியிருந்தனர்.

இதேவேளை, இந்தவிடயம் குறித்து தமிழ்க் கூட்டமைப்பின் கருத்தை அறிவதற்காக நாம் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.

அரச அழுத்தத்திற்கு அடிபணிந்து ஐ.நா. செயலாளர் நாயகம் மேற்கொண்ட இந்தத் தீர்மானம் தமிழ்ச் சமூகத்தினரிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

---

## 50 ஆயிரம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமே கட்டப்பட்டு உள்ளன எனக் கூறப்படுகிறது.

இந்தத் திட்டத்தில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருவதால், பயனாளிகளுக்கு நேரடியாகப் பணத்தை வழங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்தத் திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டது என்றும் அதன் ஒப்புதலுக்காக மட்டுமே காத்திருக்கிறோம் என்றும் இந்திய வெளியுறவு அமைச்சக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பணத்தை நேரடியாக வழங்குமாறு இந்திய அரசிடம் இலங்கை அரசு கேட்டுக் கொண்டதால், இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது எனக் கூறப்படுகிறது.

கடந்த ஒக்டோபரில் இலங்கை சென்ற மத்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மத்தாய், இந்திய அரசு சார்பில் தமிழர் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் வீடுகளை ஆய்வு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

---

## சிறுநீரக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்கப்பட்டார்.

குறித்த அரசியல் கைதி 2009 ஆம் ஆண்டு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவராவார். இவர் கடந்த சில காலங்களாகவே சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அவரை விடுவிக்குமாறு கோரி சட்டமா அதிபருக்கு பிணை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதனடிப்படையிலேயே இவர் விடுவிக்கப்பட்டுள்ளார். (ஒ-சி)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3 மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி (16 வருட அனுபவம்) 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி முன்பாக, சண்டிலிப்பாய்.

Tel.: 077-6751649

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சி நகரில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் நிறுவனத்துக்கு புதிய பணியாளர்களை சேவையில் அமர்த்த உள்ளோம்.

1. நிறைவேற்று அதிகாரி 2. அலுவலக உத்தியோகத்தர்கள்
3. பிரதி அலுவலக உத்தியோகத்தர்கள் 4. மேற்பார்வையாளர்கள்

**தகைமை:** க.பொ.த. சாதாரணதரம், க.பொ.த. உயர்தரம்,
ஏனைய டிப்ளோமாக்கள்,
ஏனைய மொழிகள்

குறிப்பு: 1. நிதி நிறுவனம், சேவை நிறுவனம், காப்புறுதி நிறுவனம் என்பவற்றில் பணியாற்றிய, பணியாற்றுகின்ற அனுபவம்.
2. ஏனைய மாவட்ட விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

**ஓர்லிற் நெற்,**
இல.153, குமரபுரம், பரந்தன், கிளிநொச்சி.

## கண்ணீர் அஞ்சலி



பாக்கியரத்தினம் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், சங்கானை, தரன் ரேடர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், JET STEEL (PVT) LTD, Old Moor Street, Colombo-12 எனும் நிறுவனங்களின் உரிமையாளரும், எமது விநியோகஸ்தருமான,

**வேலுப்பிள்ளை பொன்னம்பலம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாணந்துறை.

**கொல்லைத்த ஏஜென்சி பிறைவேட் லிமிட்டட், (ஜெகன் 0772285940)**

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆசிரிய நண்பர்களான நவீந்திரன், நவரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தை

**தம்பையா தர்மலிங்கம்** அவர்கள்

நேற்று (02.11.2011) புதன்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.

**ஆசிரிய நண்பர்கள்.**

## மரண அறிவித்தல்

### தம்பையா தர்மலிங்கம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர், அரியாலை-ஸ்ரீ ஞானவைரவர் கோயில் பரிபாலன சபைத் தலைவர்)



ஓய்வுபெற்ற தபாலதிபர், அரியாலை-ஸ்ரீ ஞானவைரவர் கோயில் பரிபாலன சபைத் தலைவர் தம்பையா தர்மலிங்கம் இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (அதிபர்)-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சுசீலாவின் அன்புக் கணவரும், நவரூபன் (ஆசிரியர், யா/வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம.வி), நவீந்திரன் (ஆசிரியர், யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), பிரதீபன் (விரிவுரையாளர், வவுனியா வளாகம்-யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் ஆசைத் தந்தையும், கோமதியின் அன்பு மாமனும், ஹரிவதனனின் ஆசைப் பேரனும், காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் தங்கராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற கேதீஸ்வரன் மற்றும் பரமேஸ்வரன், குகநேயன், சண்முகலிங்கம், சிவசோதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தவமணி, குகராணி, கமலாம்பிகை, ஜெயந்தி, இரத்தினசிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வைரவர் கோயில் ஒழுங்கை, திருமகள் வீதி என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (03.11.2011) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05 | 19 |
| 07 | 10 |
| 1947 | 2007 |



**அமரர் பாக்கியலட்சுமி குலவீரசிங்கம்**

திதி: அட்டமி - 03.11.2011

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை
விட்டுப்பிரியாது.

சஞ்சாடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

**குடும்பத்தினர்.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வெளிவிவகார அமைச்சரின் வெற்றிக்களிப்பின் பின்னால்

பொதுநலவாய நாடுகளின் 22 ஆவது மாநாட்டில் இலங்கை மூன்று முக்கிய வெற்றிகளைப் பெற்றுள்ளது.

இவ்வாறு அரசாங்கத்தின் சார்பில் புளகாங்கிதம் அடைந்து கருத்து வெளியிட்டிருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். பொதுநலவாய மாநாட்டில் ஐம்பத்திநான்கு நாடுகள் பங்குபற்றின. அவற்றுள் ஒன்றேனும் இலங்கை அரசுக்கு எதிராகச் செயற்படவில்லை. எந்த ஒரு பிரச்சினையையும் எழுப்பவும் இல்லை என்பதே அமைச்சரின் மட்டற்ற மகிழ்ச்சிக்குக் காரணம்.

● ஜனாதிபதிக்கு எதிராகப் போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட வழக்கு ஆஸ்திரேலியாவில் விசாரணைக்கு எடுக்கப்படாது நிராகரிக்கப்பட்டது; அந்நாட்டு அரசைக் கொண்டே நிராகரிக்க வைத்தமை. ● பொதுநலவாய நாடுகளின் 23 ஆவது மாநாட்டைக் கொழும்பில் நடத்த அனுமதி கிடைத்தமை. பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்றிய எந்த ஒரு நாடும் அடுத்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ● இலங்கை விவகாரத்தை மாநாட்டில் விவாதிக்க வேண்டும் என்ற கனடாவின் யோசனை ரத்துச் செய்யப்பட்டமை – ஆகியனவே அமைச்சர் பீரிஸ் தெரிவித்த மூன்று வெற்றிகளாகும். அதனால் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை பொதுநலவாய நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன என்றும் அமைச்சர் மனம் குளிர்ந்திருக்கிறார்.

ஒட்டுமொத்தத்தில் இலங்கைக்கு – இலங்கை அரசுக்கு – எதிராக மேற்கொள்ளப்படும் பொய்ப் பிரசாரங்கள் தோற்கடிக்கப்பட்டு விட்டன என்றும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் வெற்றிக்களிப்பில் நீந்தியுள்ளார்.

அந்த மெத்தனத்தில், இலங்கை ஒரு குடியேற்ற நாடு அல்ல. அது சுதந்திரமான நாடு. ஆகையால் எந்த ஒரு வெளிநாடும், இனமும் இலங்கை மீது தமது கருத்தைத் திணிக்க முடியாது என்று அவர் அறுத்து உறுத்துச் சொல்லியுள்ளார்.

வெளிநாடுகளின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யவேண்டிய தேவை இலங்கைக்கு இல்லை. இந்நாட்டு மக்களின் அரசியல் மற்றும் பொருளாதார அபிலாசைகளை முன்னிறுத்தியே கொள்கைகள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

அவை மட்டுமன்றி–

எந்த ஒரு நாட்டினது தேவை கருதியோ அல்லது வெளிநாடுகளைத் திருப்திப்படுத்தும் விதத்திலோ உள்நாட்டில் எந்தவகையான விசாரணைகளையும் நடத்த மாட்டோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எந்த நாட்டுக்கும் சென்று எவருடன் பேச்சு நடத்தினாலும் இலங்கை அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட்டே பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சரின் கருத்துக்கள் தர்க்கரீதியாகத் தவறானவை என்று சொல்வதற்கு இல்லை. ஆனால், பல தசாப்தங்களாக இலங்கை அரசியலில் காலத்துக்குக் காலம் பதவிக்கு வந்த சிங்கள அரசுகளின் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத, ஒடுக்குமுறைக் கொள்கைகளால், சீழ் பிடித்த புண்ணாக மாறியுள்ள இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இப்போதைய அரசு தன்னிடம் பலம் இருந்தும் உரிய வகையில், போதிய அக்கறை காட்டவில்லை.

இதற்கு முன்னர் பதவியில் இருந்த மஹிந்த தலைமையிலான ஸ்ரீ.ல.சு. கட்சி அரசு, ஆறு வருடங்களாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அனைத்துக் கட்சி மாநாடு என்ற ''லேபலுடன்'', தனது அமைச்சர் ஒருவரின் தலைமையில் காலத்தைக் கடத்தி, அதில் காணப்பட்ட முடிவுகளின் பிரகாரம் செய்யப்பட்ட சிபாரிசுகளைத் தானும் மக்களுக்குப் பகிரங்கப்படுத்தாமலே பதுக்கிக் கொண்டது.

அதற்கும் ஓர் உள்ளார்ந்த காரணம் உண்டு என்று கொள்ளலாம். இரண்டாவது தடவையாகவும் தாம் ஜனாதிபதி ஆசனத்தில் வீற்றிருப்பதற்கு அது தடையாக வந்துவிடும் என்ற அச்சத்திலோ, என்னவோ அனைத்துக் கட்சி மாநாட்டின் சிபார்சுகள் எவை என்று உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவே வெற்றிவாகை சூடிய பின்னரும், தொடர்ந்து நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமோக வெற்றி பெற்ற பின்னரும், இனப்பிரச்சினைக்கு நீதியான, நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இப்போதைய அரசு எந்தவித இலக்கும் இல்லாமல் காலத்தைக் கழித்து வருகின்றது.

சர்வதேசத்தையும், தமிழர்களையும் ஏய்க்காட்டுவதற்காக, 'சூய்க்' காட்டுவதற்காக, தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகள் என்று அமோக ஆதரவளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ''போசக்கை''க்கு பேச்சுவார்த்தை என்று தொடங்கிவிட்டு–

கொட்டிக் குழப்பும் ஏதுவாக மாறவல்ல தெரிவுக்குழு என்ற போர்வைக்குள் புகுந்து கொள்வதற்கு அரசு கங்கணம் கட்டி நிற்கின்றது; காலத்தை விழுங்குகின்றது.

தமிழ் மக்களின் பிரிக்க முடியாத, பறிக்க முடியாத, அரசியல் உரிமைகளை வழங்குவதற்கு விருப்பம் இன்றி, எதிலும் நிதானமின்றி, நேர்மை இன்றி சாகசம் காட்டும் தோரணையிலேயே அரசு செயற்பட்டு வருகின்றது.

இத்தகைய ஒரு மந்தகாரமான புறநிலையில், ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் இடுக்கண் வரும் என்று அரசு எதிர்பார்த்த மூன்று விடயங்களில் அரசுக்கு வெற்றி கிடைத்ததாக ஆரவாரம் செய்யும் அமைச்சர் பீரிஸ், எந்த ஒரு வெளிநாடும், இனமும் இலங்கை அரசின் மீது தமது கருத்தைத் திணிக்க முடியாது என்று மேளம் தட்டுகிறார்.

உள்விவகாரங்களில் தலையிடுவது வேறு, தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் இனம் ஒன்றின் உரிமைகள் அப்பளுக்கின்றி வழங்கப்படுவது வேறு. தமது தலைக்கு மேல் வெள்ளம் உயர்வதைத் தடுத்தது அமைச்சரின் பக்கத்துக்கு வெற்றியே. அதனைச் சுவைத்த மயக்கத்தில் தமிழர்களின் அரசியல் உரிமைகளை இனியும் கசக்கிப் பிழிய நினைக்கலாகாது.

அந்த வழி நின்று செயற்படுவதற்கு அமைச்சர் பீரிஸும், அவரது அரசும் இதயசுத்தியுடன் செயற்பட முன்வந்ததால், மனம் வைத்தால் சர்வதேசம் மூக்கை நுழைக்க இடமில்லையே...! அத்தகைய ஒரு நிலைப்பாட்டை அரசு கையில் எடுக்காவிடில், இந்த நாடு முன்னேறுவதற்குப் பதிலாக இருளில் காலடி எடுத்து வைக்கும் துர்லபமாகிவிடும்.

# உண்டியலில் தேங்கும் நாணயக் குற்றிகள் வெளியில் வந்தால் மட்டுமே நெருக்கடி தீரும்

## மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர்

யாழ்ப்பாணம், நவ.3

ஆலயங்களின் உண்டியல்களிலும் வீடுகளில் பேணப்படும் சிறுசேமிப்பு உண்டியல்களிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் நீண்ட காலத்துக்கு நாணயக் குற்றிகள் தேங்கிக் கிடக்கின்றன.

இதனை சீரான கால இடைவெளியில் வெளிக்கொண்டு வரும்போது மட்டுமே வடமாகாணத்தில் நாணயக் குற்றிகளின் தட்டுப்பாட்டை நீக்க முடியும்.

இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சி. கௌரிசங்கர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமீபகாலமாக வடமாகாணத்தில் நாணயக் குற்றிகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது. இதனால் நாளாந்த கொடுக்கல் வாங்கல்களில் தேவையற்ற முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இதற்குப் பொதுமக்களும் ஒரு வகையில் காரணமாக இருக்கின்றனர்.

ஆலயங்களில் உள்ள உண்டியல்களிலும் வீடுகளிலும் பேணப்படும் சிறு சேமிப்பு உண்டியல்களிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் நீண்ட காலத்துக்கு நாணயக் குற்றிகள் தேங்கிக் கிடக்கின்றன.

இதனை சீரான கால இடைவெளியில் வெளிக்கொண்டு வரும்போது மட்டுமே வடமாகாணத்தில் நாணயக் குற்றிகளின் தட்டுப்பாட்டை நீக்கமுடியும்.

எனவே பொதுமக்கள் தமது கைகளிலும், சட்டைப் பைகளிலும் நாணயக் குற்றிகளைக் கொண்டு செல்வதன் மூலம் கொடுக்கல் வாங்கல்களை சிரமமின்றி மேற்கொள்ள முடியும். எம்மிடம் ஒன்று சேரும் மேலதிக நாணயக் குற்றிகளை பலசரக்குக் கடைகளில் அல்லது வங்கிகளில் மாற்றிக் கொள்ள வேண்டும்.

உண்டியல்களில் சேரும் நாணயக் குற்றிகளை மாதம் ஒருமுறையாவது வங்கிகளில் வைப்பிலிட்டுக் கொள்ளவேண்டும்.

பலசரக்குக் கடைகளிலும் இவ்வாறு நாணயக் குற்றிகளை வங்கிகளில் பெற்று வைத்து பரிமாற்றத்துக்கு பயன்படுத்துவதன் மூலம் வீண் சிரமங்களை தவிர்த்துக் கொள்ளலாம்- என்றார். (ம-15)

# விசேட சனத்தொகைக் கணக்கெடுப்பில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு மாத இறுதியில் கொடுப்பனவு

## நடவடிக்கைகள் துரித கதியில்

யாழ்ப்பாணம், நவ.3

புள்ளிவிவரத் திணைக்களத்தால் கடந்த ஜூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட விசேட சனத்தொகைக் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித் தன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட புள்ளிவிவரத் திணைக்களத்தால் விசேட சனத்தொகைக் கணக்கெடுப்புப் பணியில் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்ட னர்.

அதற்கான கொடுப்பனவாக பயிற்சிக் கூட்டங்களுக்கு சமுகமளிப்பதற்கு 500 ரூபாவும் ஒவ்வொரு நூறு குடும்பங்களின் தரவு சேகரிப்பதற்கு 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் இதுவரை எந்தவொரு கொடுப்பனவும் வழங்கப்படவில்லை என்று ஆசிரியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாகக் கேட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

விசேட கணக்கெடுப்பு மேற்கொள்ளப் பட்டதற்கான கொடுப்பனவு தற்போது தான் கொழும்பிலுள்ள புள்ளிவிவரத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

விரைவில் எமக்கு அதுதொடர்பான அனுமதி கிடைக்கப்பெற்றதும் பிரதேச செயலாளர்கள் ஊடாக இவர்களுக்கான பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலும் கூறப்பட்டது.

(ம-15)

# சாதாரணதரம் சித்தியடைந்த மாணவருக்கு புலமைப்பரிசில்

சுன்னாகம், நவ.3

கடந்த வருடம் சாதாரண தரப்பரீட்சையில் முதற்தடவையாகத் தோற்றிச் சித்தியடைந்து உயர்தரத்தில் கல்வி கற்பதற்குத் தகுதி பெற்றுள்ள மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில் நிதியத்தினூடாகப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான தீர்மானத்தை ஜனாதிபதி மஹிநித ராஜபக்ஷ எடுத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் 500 ரூபா வீதம் உயர்தரத்தில் கற்கும் காலத்துக்கு குறைந்த பட்சம் 24 மாதங்களுக்கு இந்த உதவு தொகை வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கல்வி வலயத்திலும் நூறு பேருக்கு இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

5 ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த, தரம் 5 புலமைப் பரிசில் கொடுப்பனவைப் பெறாத, அரச மற்றும் கட்டணம் பெறாத தனியார் பாடசாலை களில் கற்கும் மாணவர்கள் இந்தப் புலமைப் பரிசிலைப் பெறத் தகுதியுடைய வர்கள் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-38)

## சிந்தை எவ்வாறு மாசடைகிறது?

சிந்தை ஒரு தூய கண்ணாடி போன்றது. புற உலகின் கண் இருக்கும் புலப் பொருள்களை புலனுறுப்புக்கள் வாயிலாகவே அது அனுபவிக்கமுடியும். புலப் பொருள்களை தானாக அனுபவிப்பதற்கு அதற்கு சக்தி இல்லை. உதாரணமாக கட்புல, செவிப்புல உறுப்புக்களின்றி அது தானாகப் பார்க்கவோ கேட்கவோ மாட்டாது.

அலைந்து திரியும் புலன்களுடன் சிந்தை தொடர்பு கொள்ளும்போதுதான் அது மாசடைகிறது. புலன்களினால் ஆற்றப்படுகின்ற குற்றங்கள் எல்லாம் சிந்தையின் கண்ணாடியில் பிரதிபலிக்கப்பட்டுகின்றன. இவ்வாறு தான் சிந்தையானது மாசடைகிறது.



(நன்றி: சத்தியசாயி பாபாவின் அருளுரைகள்)

**சாயி சிந்தனை**

# 20 ஆயிரம் பனைகள் மட்டுமே வருடாந்தம் தறிக்க அனுமதி

## அதற்கு மேல் அழிக்க அனுமதியில்லை என்கிறார் சபையின் தலைவர் சீவரத்தினம்

யாழ்ப்பாணம், நவ.3

வருடாந்தம் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பனை மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு இனிமேலும் அனுமதிக்கப்படமாட்டாது என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் தெரிவிக்கையில்:

பனை வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் நாம் செயற்பட்டு வருகின்றோம். இந்த நிலையில் வருடாந்தம் 20 ஆயிரத்துக்கும் அதிகமாக பனை மரங்களை நாட்டில் தறிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

பனை மரங்களில் முதிர்ச்சியானவை, வருமானம் கிடைக்காதவை, ஷெல் பட்டுச் சேதமுற்றவை, அவசியமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் கட்டட நிர்மாண தேவைகளுக்காகத் தறிக்கப்பட வேண்டியவை மட்டுமே இவ்வாறு தறிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

பனை வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வு அனைவருக்கும் ஏற்பட வேண்டும்.

இலட்சினைகளில் மட்டும் பனை வளத்தை குறியீடாகக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. பனை வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

இந்த வருடம் இதுவரை 19 ஆயிரத்து 798 பனை மரங்கள் தறிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

கடந்த 93 ஆம் ஆண்டு நாடாளுமன்றின் ஊடாகக் கொண்டு வரப்பட்ட மரம் தறிப்பதற்கான சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதும் அதிகளவான பனை மரங்கள் தறிக்கப்பட்டன.

ஆனால், தற்போது பனை அபிவிருத்திச் சபை முழுமூச்சாக இயங்க ஆரம்பித்ததும் பனை மரங்கள் தறிக்கும் வீதம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பனை மரம் தறிப்பதற்கான அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ள இதேவேளை பனை மீள நடுகைத் திட்டம் இடம்பெற்று வருகிறது.

பனை மரம் தறிப்பதற்கான அனுமதி வழங்கும் போது தலா 200 ரூபா அறவிடப்படுகிறது. அதன் மூலம் வருடாந்தம் தறிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட 20 ஆயிரம் பனை மரங்கள் மூலம் 4 லட்சம் ரூபா கிடைக்கிறது.

அந்த நிதி, பனை மீள் நடுகைத் திட்டத்துக்காகச் செலவிடப்படுகிறது. அடுத்த வருடத்துக்கான பனை நாத்து நடும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.- என்றார். (ம- 14)

# யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியின் சேவைக்காலம் நீடிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் ஆணையாளராகவும் கடமையாற்றிவரும் சுப்பிரமணியம் பரமராஜாவுக்கு இரண்டாவது தடவையாகவும் சேவைக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சிபார்சின் அடிப்படையில் சேவைக்காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மேல் நீதிமன்றப் பதிவாளர் எம்.எஸ்.எம்.நஸீர் தெரிவித்தார்.

மேல் நீதிமன்ற நீதிவான் சு.பரமராஜா கடந்த வருடம் ஒக்ரோபர் 19 ஆம் திகதி ஓய்வு பெற விருந்த நிலையில் அவரது சேவைக்காலம் ஒரு வருடத்தால் அதிகரிக்கப்பட்டு கடந்த ஒக்ரோபர் 19 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இவரது சேவைக்காலம் மேலும் ஒரு வருடமாக அதிகரிக்கப்பட்டு அடுத்த வருடம் ஒக்ரோபர் 19 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த 15 ஆம் திகதி உத்தியோக பூர்வமாக இவரது சேவைக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்று பதிவாளர் மேலும் தெரிவித்தார். (ம-4)

# மக்கள் நடமாடும் இடத்தில் குப்பை கொட்டியோர் நீதிமன்றில்

சாவகச்சேரி பொதுச் சந்தையில் போதுமான அளவு பிளாஸ்ரிக் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டிருந்த போதிலும் கடைக் குப்பைகளை பொதுமக்கள் நடமாடும் பகுதியில் கொட்டிய இரு வர்த்தகர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலைய சூழல் பாதுகாப்புப் பிரிவினரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

இந்த இருவருக்கும் எதிராக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளைத் தனியாக விசாரித்த போது எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து இருவருக்கும் தலா 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, மீசாலை, மிருசுவில் பகுதிகளில் வீதியோரத்தில் குப்பை கொட்டிய இருவருக்கு எதிராகக் கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா இருவருக்கும் தலா 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா ஒரு மாதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ம- 207)



வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சிறுவர், முதியோர், மாற்று ஆற்றல் உடையோருக்கான தின விழா பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றன. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் சரவணை கிழக்கைச் சேர்ந்த முதியவர் ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோர் உள்ளனர். (ம- 167)

# நீரிழிவு ஒழிப்பு மாதம் அங்குரார்ப்பணம்

தென்மராட்சி, நவ.3

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் நீரிழிவு ஒழிப்பு மாத அங்குரார்ப்பண நிகழ்வு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

லயன் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட ஆளுநர் லயன் பிரியந்த பெர்ணாண்டோ, லயன் மோட்டி ஆஷா, உதவி மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்ணாண்டோ, யாழ். மாவட்ட லயன்ஸ் கழகங்களைச் சேர்ந்த மாவட்ட, பிராந்திய, வலயத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் பின்னர் நடைபெற்ற நீரிழிவு பரிசோதனையில் கலந்து கொண்ட பொது மக்களுக்கு வழங்கவென ஒரு தொகுதி மருந்து வகைகள் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் கே. பிரதீபனிடமும் சாவகச்சேரி நகரசபை துப்புரவு தொழிலாளர்களுக்கென ஒரு தொகுதி கையுறைகளை நகர சபை உப தலைவர் கு.சதாசிவ மூர்த்தியிடமும் மாவட்ட ஆளுநர் கையளித்தார்.

அங்குரார்ப்பண நிகழ்வின் பின்னர் நடத்தப்பட்ட நீரிழிவு பரிசோதனையில் பெருமளவு பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பரிசோதனையின் போது நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து வகைகள் வழங்கப்பட்டன. 'நீரிழிவுநோயின் தாக்கங்களும் அவற்றின் கட்டுப்படுத்தும் மருந்து வகைகளும் மூலிகை வகைகளும்' என்னும் கண்காட்சியும் இடம்பெற்றது. (ம- 207)

# கைதடி முதியோர் இல்லத்தில் இடநெருக்கடி

கைதடி அரச முதியோர் இல்லத்தில் இடநெருக்கடிகள் ஏற்படும் நிலைமை தோன்றியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இல்லத்தில் இருநூறு முதியோர்கள் தங்கக் கூடிய வசதிகளே உள்ளன. தற்போது 190 முதியோர்கள் இல்லத் தில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இதில் 105 ஆண் வயோதிபர்களும் 85 பெண் வயோதிபர்களும் தங்கியுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் அரச முதியோர் இல்லமான இந்த இல்லத்தில் தங்கியிருக்கும் அனைத்து முதியோர்களும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். தற்போது முதியோர் இல்லத்தில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலை உள்ளதால் அங்கே இடநெருக்கடி ஏற்படும் நிலை காணப்படுகின்றது- என்று கூறப்பட்டது. (ம- 26)

# சங்கானைப் பிரதேச அபிவிருத்திக்கு பதின்மூன்று லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

## சரவணபவன் எம்.பி. வழங்கினார்

யாழ்ப்பாணம், நவ.3

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 16 அபிவிருத் தித் திட்டங்களுக்கு 13 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் 2011 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியில் இருந்து இந்த ஒதுக்கீட்டைச் செய்துள்ளார்.

வட்டுக்கோட்டை, அராலி தெற்கு தபாலக முதலாவது ஒழுங்கை வீதி புனரமைப்புக்கு 2 லட்சம் ரூபாவும், துணைவி - தமிழ்க் கலவன் பாடசாலை சுற்றுமதில் சீரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும், சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை நிழல்படப் பிரதி இயந்திரக் கொள்வனவுக்கு ஒரு லட்சம் ரூபாவும், காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை நிழல்பட பிரதி இயந்திரக் கொள்வனவுக்கு ஒரு லட்சம் ரூபாவும், சுழிபுரம் விக்றோரியாக் கல்லூரிக்கு தளபாடங்கள் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும், சுழிபுரம் பாரதி கலைமன்ற பாலர் பாடசாலைக்கு மலசலகூடம் அமைக்க ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், வட்டுக்கோட்டை வேலவன் சனசமூக நிலையத்துக்கு மலசலகூடம் அமைக்க ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

சங்கானை அம்பாள் சன சமூக நிலைய புனரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபாவும், சங்கானை உருத்திரா சனசமூக நிலையம் தளபாடக் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும், பறாளாய் விளையாட்டு மைதானத்துக்கு சுற்றுமதில் அமைக்க 50 ஆயிரம் ரூபாவும், சங்கானை சன்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் மாவடி இந்து இளைஞர் கழகத்துக்கு மலசலகூடம் அமைக்க ஒரு லட்சம் ரூபாவும், கரைச்சி மயானத்துக்கு சுற்றுமதில் அமைக்க 50 ஆயிரம் ரூபாவும், திருவடிநிலை மயானத்துக்கு சுற்றுமதில் அமைக்க 50 ஆயிரம் ரூபாவும், இந்து இளைஞர் கழகத்துக்குத் தளபாடக் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும், மூளாய் விக்டர் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்ய 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (ம- 2)

# கடல் வள ஆய்வு நிலைய அலுவலகங்கள் யாழ். மாவட்டத்திலும் திறக்கப்பட வேண்டும்

**நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்**

யாழ்ப்பாணம், நவ.3

தென்னிலங்கையில் உள்ள கடல்வள ஆய்வு நிலையங்களின் அலுவலகங்கள் யாழ். மாவட்டத்திலும் இயங்க வேண்டும். அதன் மூலமே யாழ். மாவட்டத்தின் கடல் தொழில் துறையை மேம்படுத்த முடியும்.

யாழ். மாவட்ட கடல் தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர். ரவீந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:

மாவட்டத்தின் கடல் தொழில் துறையை மேம்படுத்துவதற்கு கடல் வளத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் மாவட்டத்தில் இயங்க வேண்டும். தென்னிலங்கையில் அவ்வாறான நிறுவனங்கள் பல இயங்கி வருகின்றன.

தேசியக் கடல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமை நிறுவனம், இலங்கைக் கடற்தொழில் கூட்டுத் தாபனம், இலங்கை கடற் தொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபை, கரையோரம் பேணல் திணைக்களம் ஆகியன இயங்க வேண்டும். அதன் மூலமே மாவட்டத்தின் கடல்தொழில் துறை மேம்படுத்த முடியும்.

இந்த நிறுவனங்களின் அலுவலகங்கள் யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் இயங்கவில்லை.

இதன் காரணமாக கடல் தொழில் துறைசார்ந்த ஆய்வுகள் மேற்கொள்வதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. புதிய திட்டங்கள் அமுல்படுத்தப்படும் போது அனுமதிபெறுவதிலும் காலதாமதங்கள் ஏற்படுகின்றன.

எனவே மாவட்டத்தின் கடல் தொழில் துறையை மேம்படுத்துவதற்கு தென்னிலங்கையிலுள்ள கடல்வள ஆய்வு நிறுவனங்கள் யாழ். மாவட்டத்தில் இயங்குவது அவசியமானது என்றார்.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது கடல் தொழில் துறைசார்ந்த விடயங்களை விவாதிப்பதற்கு முக்கிய இடம்கொடுக்கவில்லை எனக் கூறப்பட்டது. (ம- 14)

# வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளில் மின்சாரம் இன்மையால் நெருக்கடி

யாழ்ப்பாணம், நவ.3

வடமராட்சி கிழக்கில் "வடக்கின் வசந்தம்" திட்டத்தில் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பல பகுதிகளில் மின்சாரம் இன்னும் வழங்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி கிழக்கில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சார வேலைகளுக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

சில பகுதிகளில் மின்சாரக் கம்பங்கள் நடப்பட்டன.

இருந்த போதும் அந்தப் பகுதிகளுக்கான மின்விநியோக நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.

இதனால் பல பகுதிகள் மின் விநியோகம் இன்றி இரவு நேரங்களில் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களைஎதிர்கொண்டு வருகின்றனர்.

உடுத்துறை, மாமுனை, மருதங்கேணி, கட்டைக் காடு, போக்கறுப்பான், நாகர் கோயில், வெற்றிலைக்கேணி போன்ற பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

இதனால் பாடசாலை மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை இரவு நேரங்களில் மேற்கொள்ள முடியாமல் உள்ளனர். இதனால் பொதுமக்கள் தொடர்ந்தும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ம- 319)

# நாகர் கோவில் வீதியைத் திறக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.3

எழுதுமட்டுவாழ்- நாகர் கோவில் வீதியை மீளத் திறந்து மக்கள் பாவனைக்கு அனுமதிக்குமாறு சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் கேட்டுள்ளார்.

தற்போது எழுதுமட்டுவாழில் மீளக்குடியமர்வு இடம்பெறுவதால் இந்த வீதி திறக்கப்பட வேண்டும் என்று பிரதேச செயலர் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம- 320)

# கால்நடைகள் பயிர்களை மேய்ந்த பின் பாதுகாப்பு வரி அறவிடத் தீர்மானம்

**நெற் செய்கையாளர் விசனம்**


தென்மராட்சி, நவ.3

தென்மராட்சி தெற்குப் பகுதி நெற் செய்கையாளர்களுக்கு இரண்டாம் கட்ட மானிய உர வகைகள் விநியோகத்தின் போது பயிர்ப் பாதுகாப்பு வரி அறவிட கமக்கார அமைப்புகள் தீர்மானித்துள்ளன. இது நெற் செய்கையாளர்களிடம் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

தச்சன் தோப்பு சந்தியிலிருந்து அறுகு வெளி வரையான நாவற்குழி- கேரதீவு வீதியில் 3 மைல் தூரத்தில் 6 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் வயல்களில் கால போக நெற்செய்கை இவ்வரும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வயல்களில் நெற் செய்கை மேற்கொள்வதற்கு முன்னர் கட்டாக்காலி கால்நடைகளைப் பாதுகாக்க பாதுகாப்பு வேலிகளை அமைக்குமாறு அந்தப் பகுதியில் உள்ள கமக்கார அமைப்புக்களிடம் நெற் செய்கையாளர்கள் பல தடவைகள் அறிவுறுத்தியிருந்தனர். அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றால் 2008 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பெருமளவு முட் கம்பிச் சுருள்கள் கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் உள்ளதைச் சுட்டிக் காட்டி அதனைப் பெற்றுப் பாதுகாப்பு வேலி அமைக்குமாறு கூறியிருந்தனர். விதைக்கப்பட்ட நெல் தற்போது பயிராகி வரும் வேளையில் கட்டாக்காலி கால்நடைகளால் நாள்தோறும் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நெற்செய்கையாளர்களிடம் இனிமேல் பாதுகாப்பு வேலி அமைக்க வரி கோருவது நியாயமற்றது எனவும் இது தொடர்பாக விவசாய அமைச்சர், யாழ். அரச அதிபர், கமநல சேவைகள் ஆணையாளர் ஆகியோருக்கு முறையிடவுள்ளதாகவும் நெற்செய்கை யாளர்கள் தெரிவித்தனர். (ம- 207)



வலிகாமம் வலயத்தில் முதலிடம் பெற்ற உடுவில் மகளிர் கல்லூரியில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 30 மாணவர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். பின்னர் ஆசிரியை சு.வெனிற்றா ஆசிரியை க.ஸ்ரேலா, கல்லூரி அதிபர் திருமதி சிராணி மில்ஸ், ஆரம்பப்பிரிவு தலைவர் திருமதி கலா மகேந்திரகுமார், புலமைப்பரிசில் ஆசிரியர் சி.ரஞ்சித்குமார் ஆகியோருடன் மாணவர்கள் உள்ளனர்.

# நிதி உதவி பெற்ற நம்பிக்கை நிதிய ஓய்வூதியர்கள்

நாவற்குழி, நவ.3

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரிவின் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவர்கள் 7 பேர் அண்மையில் நிதி உதவிகளைப் பெற்றுள்ளனர்.

கண் வில்லைக் கொடுப்பனவை சுந்தரம் கிருஷ்ணன், கந்தையா சாம்பமூர்த்தி, நடேசு முத்துக்குமாரு ஆகியோர் பெற்றனர்.

வைத்திய உதவிக் கொடுப்பனவை மு.சிதம்பரநாதனும் பல்கலைக்கழக அனுமதியை பிள்ளைக்காக க.இராஜேஸ்வரனும் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை 10 ஆயிரம் ரூபா இலகு கடனை இருவர் பெற்றனர். வாராந்தம் புதன்கிழமைகளில் பிரதேச செயலக வளாகத்தில் இந்தச் சங்கத்தின் அங்கத்தவர்கள் ஒன்றுகூடிப் புதிய அங்கத்தவர்களை இணைத்து வருகின்றனர். (ம- 121)

# உள்ளூராட்சி சபைத் தலைவர்களுக்கு விருந்தினருக்கான அழைப்பு இல்லை

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களை ஏனைய திணைக்களங்களால் நடத்தப்படும் நிகழ்வுகளுக்கு விருந்தினர்களாக அழைக்காமல் வெறும் பார்வையாளர்களாக அழைப்பது குறித்து மக்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைகளால் நடத்தப்படும் நிகழ்வுகளுக்குப் பிரதேசத்தில் முக்கியத்துவம் வாய்ந்த அரச அதிகாரிகள் விருந்தினர்களாக அழைக்கப்படுகின்றனர்.

ஆனால் ஏனைய திணைக்களங்களால் நடத்தப்படும் நிகழ்வுகளுக்கு ஏனைய திணைக்கள அதிகாரிகள் விருந்தினர்களாக அழைக்கப்பட்டு உள்ளூராட்சி சபைகளின் தலைவருக்கு நிகழ்வில் கலந்து கொள்வதற்கான அழைப்பு மட்டுமே வழங்கப்படுகிறது.

நகரசபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் அந்தப் பிரதேசத்தின் முதல் பிரஜை என்பதை ஏனைய திணைக்கள அதிகாரிகள் அறிந்திருக்கவில்லையா என்பது குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் பாடசாலைகளில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றதாகவும் ஒரு நிகழ்வுக்குக் கூட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் விருந்தினர்களாக அழைக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது. (ம- 207)

# சாவகச்சேரியில் காலாவதியான மருந்து அழிப்பு

தென்மராட்சி, நவ.3

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் திடீர் பரிசோதனை நடத்தியதில் காலாவதியான மருந்து வகைகளை கைப்பற்றினர்.

திகதி காலாவதியான மருந்து வகைகள் விநியோகிக்கப்படுவதாகப் பொதுமக்கள் கொடுத்த முறைப்பாட்டையடுத்து திடீர் பரிசோதனை நடத்திய சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் காலாவதியான மருந்து வகைகளை கைப்பற்றி வைத்தியசாலை வளாகத்தில் வைத்து அழித்துள்ளனர். (ம- 207)

# இடம்பெயர்ந்த வடமராட்சி வடக்கிலுள்ள கடல்தொழிலாளருக்கு நிவாரணம் நிறுத்தம்

வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் தங்கியுள்ள கடல் தொழிலாளருக்கு கடந்த 7 மாதங்களாக இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் வழங்கப்படவில்லை.

காங்கேசன்துறை, ஊறணி, தையிட்டி, மயிலிட்டி ஆகிய வலி.வடக்கு கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த கடல் தொழிலாளர்கள் இன்னமும் மீளக்குடியமரவில்லை.

இவர்களில் அதிகமானவர்கள் வடமராட்சி வடக்கு கரையோரப் பிரதேசத்தில் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு இடம்பெயர்ந்தோர் நிவாரணமாக மாதந்தோறும் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்த போதிலும் கடந்த 7 மாதங்களாக இந்தப் பொருள்கள் வழங்கப்படவில்லை.

இந்தப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக முத்திரைகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள போதிலும் இவற்றைக் கொடுத்துப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளது.

கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்குப் பொருள்கள் வந்து சேராமையே இதற்குக் காரணம்.

மழை காலமாக இருக்கும் இந்த வேளையில் தொழில் வசதிகளின்றி அல்லற்படும் இடம்பெயர்ந்த கடல் தொழிலாளருக்கு உரிய நிவாரணப் பொருள்கள் கிடைக்க விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு மயிலிட்டி கடல்தொழில் கூட்டுறவுச் சங்கத் தலைவர் உரிய அதிகாரிகளிடம் கேட்டுள்ளார். (ம- 236)

# ஜனாதிபதியின் விசுவாசியே பிரதம நீதியரசர் ஷிராணி

## விக்கிலீக்ஸ் தகவல்

கொழும்பு, நவ .3

இலங்கைப் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசுவாசி என்று. விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் பெற்றீசியா புட்டனிஸ் அந்தநாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த குறிப்புக்களின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி அமெரிக்கத் தூதர் பெற்றீசியா புட்டனிஸினால் அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்தத் தகவல்ள் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் ராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு சரியான முறையில் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் தற்போதைய பிரதம நீதியரசர் பக்கச்சார்பற்ற நிலையிலும், சுயாதீனமாகவும் செயற்படுவாரா என்பது சந்தேகமே என்று கொழும்பைச் சேர்ந்த மனித உரிமைச் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர் என்று கொழும்பு டெலிகிராப் இணையத் தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் அரசியல் நியமனத்தின் மூலமே ஷிராணி பண்டாரநாயக்க உச்ச நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார் எனவும் விக்கிலீக்ஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-சி)




சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் சிறுவர் தின நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.
இதில் சிறுவர் உரிமைகளை வெளிப்படுத்தும் மாணவர்களின் பேரணியும் அதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம் பெற்றன. (ம-313)

# இலங்கைப் படையின் தாக்குதலைக் கண்டித்து தமிழக மீனவர் காலவரையற்ற உண்ணாவிரதம்

இலங்கைக் கடற்படையின் தொடர் தாக்குதலைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுமுன்தினம்முதல் காலவரையற்ற உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

இலங்கைக்கடற்படையினரும் இலங்கை மீனவர்களும் தங்கள் மீது தொடர் தாக்குதலை நடத்தி வருகின்றனர் எனவும் இதனால் தங்கள் கடலுக்குள் இறங்கி தொழில் செய்ய முடியாத சூழல் நிலவுகிறது என வும், தங்களின் தொழில் உரிமையை பாதுகாக்கக் கோரியும் ராமேஸ்வரம் மீனவர்கள் கால வரையற்ற உண்ணா விரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த மூன்று நாள்களாக இலங்கைக் கடற்படையும், இலங்கை மீனவர்களும் தொடர் தாக்குதலில் ஈடுபட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் ராமேஸ்வரம் மீனவர்கள் கடலுக்குள் சென்ற போது தாக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் கரை திரும்பிய மீனவர்கள் கூடி ஆலோசனை செய்து போராட்டத்தை தொடங்கியுள்ளனர். (வ-சி)

# மாணவருக்கான ஊடகத்துறை கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.3

க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான ''தொடர்பாடலும் ஊடகக் கற்கை'' பாடத்துக்கான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்த பாடக் கருத்தரங்கில் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்தைக் கற்பிக்கும் யாழ்ப்பாண மாவட்ட வலயப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களை கலந்து கொள்ளுமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ-323)

# மின்சார சபைக்கு வழங்கப்படும் டீசல் விலையும் அதிகரிக்கப்படும்

விநியோகச் சந்தையில் எரிபொருள்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளமைக்குச் சமமாக இலங்கை மின்சார சபைக்கு விநியோகிக்கப்படும் டீசலின் விலையும் எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து உயர்த்துவதற்கு பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து ஏற்கனவே, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின் சக்தி, எரிசக்தி அமைச்சுக்கும் தெரி யப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேற்படி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய தற்போது மின்சார சபைக்கு 76 ரூபாவுக்கு விநியோகிக்கப்படும் ஒரு லீற்றர் டீசல் 84 ரூபா வரையில் அதிகரிக்கப்படக்கூடும். இதனிடையே தற்போது 40 ரூபாவுக்கு விநியோகிக்கப்படும் ஒரு லீற்றர் மண்ணெணெய் 45 ரூபா வரையில் அதிகரிக்கப்படவுள்ள தோடு, ஒரு லீற்றர் லோசல்பரின் விலை 52 ரூபாவிலிருந்து 57 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

மேலும் இந்த விலை அதிகரிப்புக்கு எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்தே நடைமுறைக்கு வருவதாகவும் அதுவரையிலும் முன்னைய விலை மட்டங்களிலேயே இவை மின்சார சபைக்கு வழங்கப்படுமெனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

மேலும் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படுவதன் காரணமாக மின்சார சபைக்கு இரண்டாயிரம் கோடி ரூபா வரையிலான மேலதிகச் செலவினமொன்றுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரக்கூடுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-22)

# கடத்தப்பட்ட பிள்ளையார் விக்கிரகம் உரியவர்களிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், நவ.3

கடந்த மாதம் ஐம்பொன்னிலான பிள்ளையார் விக்கிரகத்தைக் கடத்திக் கொண்டு சென்ற போது யாழ்.முத்திரைச் சந்திப் பகுதியில் வைத்து பொலிஸாரால் மீட்கப்பட்ட பிள்ளையார் விக்கிரகம் உரியவர்களால் அடையாளம் காணப்பட்டு யாழ். நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த விக்கிரகம் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், ஜீவநகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திலிருந்து திருடப்பட்டிருந்து. மேற்படி ஆலய நிர்வாகத்தினர் யாழ்.நீதிமன்றில் அதனைப் பார்வையிட்டு ஆதாரங்களைச் சமர்ப்பித்தனர். இது குறித்த விசாரணை நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்றது.

மேற்படி விக்கிரகம் இந்த ஆலயத்தினதுதான் என்பது நிரூபிக்கப்பட்டதனை அடுத்து நீதிவான் விக்கிரகத்தை குறித்த கோயில் நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

பிள்ளையார் விக்கிரகம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

முல்லைத்தீவுக்கு மரண வீடு ஒன்றுக்குச் சென்றிருந்த சுதுமலை மற்றும் சாவற்காட்டைச் சேர்ந்த இருவருமே இந்த விக்கிரகத்தைத் திருடி சாக்குப் பாக் ஒன்றினுள் வைத்துக் கொண்டு சென்றபோது யாழ். குற்றவியல் பிரிவுப் பொலிஸாரி டம் சிக்கினர். இவ்விருவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

பிள்ளையார் சிலையும் நீதிமன்றில் வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் விக்கிரகம் உரிமை கோரப்பட்டு உரியவர்களிடம்நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4)

# போதைப் பொருள்விற்பனையாளர்கள் 69 பேர் கைது

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின்போது போதைப் பொருள் விற்பனையாளர்கள் 69 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

போதைப் பொருள் விற்பனை, பாவனை தொடர்பான தகவல்கள் தெரிந்தால் 011-2431428 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க பொதுமக்களை வேண்டியுள்ளார். இதேவேளை, கொழும்பு பிரதேசத்திலிருந்து போதைப் பொருள் வியாபாரத்தை ஒழிப்பதற்கான பெரியளவிலான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். இந்த நடவடிக்கையின் பயனாக போதைப் பொருள் விற்பனையாளர்கள் 69 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரிலேயே இந்தப் போதைப் பொருள் வேட்டையைப் பொலிஸார் ஆரம்பித்தனர். கடந்த 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தேடுதல் வேட்டையில் கொழும்பு பிராந்தியத்தைச் சேர்ந்த 22 பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸ் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

# கூட்டுறவுப் பணியாளர் நலனோம்பு கொடுப்பனவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்.மாவட்ட கூட்டுறவு பணியாளர் நலனோம்பு கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்கள், அங்கத்தவர்களின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த அதிகரிப்பு தொகைகள் யாவும் 01.01.2012 முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட நலநோம்பு கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் செ. கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பணியாளர் நலனோம்பு கூட்டுறவு சங்கத்தின் இயக்குனர் சபைக் கூட்டம் அண்மையில் இடம் பெற்றது. இந்தக் கூட்டத்தின் போதே மேற்கண்ட விடயம் தீர்மானிக்கப்பட்டது.

இது குறித்த அவர் மேலும் கூறுகையில்:-

கூட்டுறவுப் பணியாளர்கள் சேவைக் காலத்திலிருக்கும் போது வன்செயலால் அல்லது விபத்தால் இறந்தால் 50 ஆயிரம் ரூபா அவரது பின் உரித்தாளருக்கு வழங்கப்படும்.

சேவைக்காலத்தில் உறுப்பினர்கள் இயற்கை மரணம் அடைந்தால் 20 ஆயிரம் ரூபா நட்ட ஈடாகவும் வழங்கப்படும்.

வன்செயலால் அல்லது விபத்தால் ஏற்படுகின்ற இயலாமைக்கு அதாவது ஒரு கை இழப்புக்கு 10 ஆயிரம் ரூபாவும், ஒரு கால் இழந்தால் 10 ஆயிரம் ரூபாவும், ஒரு கண் பார்வை இழந்தால் 10 ஆயிரம் ரூபாவும், ஒரு கை, கால் இயலாமை, இரு கண்பார்வை இழந்தால் 35 ஆயிரம் ரூபாவும், உடல் அவயவங்கள் பூரணமாக இயங்காமைக்கு 50 ஆயிரம் ரூபாவும் நட்ட ஈடாக வழங்கப்படும்.

சத்திரசிகிச்சை செய்யும் உறுப்பினர்களுக்கு இருதய சத்திரசிகிச்சைக்கு 10 ஆயிரம் ரூபாவும், குடல் சத்திரசிகிச்சைக்கு 5 ஆயிரம் ரூபாவும், சிறுநீரக சத்திரசிகிச்சைக்கு 10 ஆயிரம் ரூபாவும், நட்ட ஈடாக வழங்கப்படும்.

ஓய்வு பெறும் அங்கத்தவர்களுக்கு 5 வருடத்துக்கு மேல் 250 ரூபாவும், 10வருடத்துக்கு மேல், 500 ரூபாவும், 15 வருடத்துக்கு மேல் 750 ரூபாவும் 20 வருடத்துக்கு மேல் ஆயிரம் ரூபாவும் வழங்கு வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ-311)

# வெளிநாட்டு நாணயத் தாள்களை கடத்தியவர் கைதானார்

சட்ட விரோதமாக வெளி நாட்டு நாணயத் தாள்களைக் கடத்திய நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் கட்டுநாயக்க பாதுகாப்பு உத்தியோகத்தரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹொங்கொங் செல்லவிருந்த மல்வானையைச் சேர்ந்த 46 வயதுடைய நபரே கைது செய்யப் பட்டுள்ளார். இவரிடம் 22 இலட் சத்து 50 ஆயிரம் ஜப்பானிய யென் கைப் பற்றப்பட்டுள்ளதாகவும், இது இலங் கை நாணயத்தில் 33 இலட் சத்து 92 ஆயிரத்து 225 ரூபா பெறு மதிஎன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# சனல் - 4 ஆவணப் படத்தைத் தயாரித்தவருடன் ஜனாதிபதியின் பேச்சாளர் கடும் வாக்குவாதம்

கொழும்பு, நவ .3

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டின்போது, பிரிட்டனின் சனல் 4 தொலைக் காட்சியில் 'இலங்கையின் கொலைக்களங்கள்' என்ற ஆவணப்படத்தைத் தயாரித்த கெலம் மெக்ரோவுடன் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவுப் பணிப்பாளர் நாயகமும், ஜனாதிபதியின் பேச்சாளருமான பந்துல ஜயசேகர உட்பட இலங்கை ஊடகவியலாளர் குழுவொன்று கடும்வாக்குவாதத்தில் ஈடுபட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு எதிராக மெக்ரோ பிரசாரம் செய்துகொண்டிருந்தார். எமது தூதரகத்தினால் விநியோகிக்கப்பட்ட எமது ஆவணப்படங்கள் மற்றும் புத்தகங்களை அவர் வீடியோவில் ஒளிப்பதிவு செய்துகொண்டிருந்தார். நானும் ஏனைய இலங்கை ஊடகவியலாளர்களும் அவரை எதிர்கொண்டோம் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவுப் பணிப்பாளர் நாயகமும், ஜனாதிபதியின் பேச்சாளருமான பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதன்போது, இலங்கை ஊடகவியலாளர்களை மெக்ரோவின் கெமரா குழுவினர் படம்பிடிக்க ஆரம்பித்தனர் என்றும் இதற்குப் பதிலாக மேற்படி நபர்களை இலங்கை ஊடகவியலாளர்கள் குழுவினர் படம்பிடித்தனர் எனவும் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

மெக்ரோ குழுவினர் முறைப்பாடு செய்ததன் மூலம் எம்மை நிறுத்த முயன்றனர். ஆனால், எமது ஊடகவியலாளர்கள் பணியவில்லை. அதன்பின்னர் அவர்கள் எம்மை ஒளிப்பதிவு செய்வதை நிறுத்தினர் எனவும் அவர் கூறியுள்ளார். (ச-சி)

# என்னத்தைச்... ...சொல்ல?!

## புத்தகப் பூச்சிகள் நிலையிலிருந்து மாற்றுவது யார் பொறுப்பு?

புலமைப் பரிசில் என்கிறோம், புதுமையான கல்வி முறை என்கிறோம். சாதனை படைத்தவர் மாணவர்கள் என்கிறோம். அதற்குச் சான்று பகர்கின்றது கல்விமான்களது ஆசியும் பாராட்டும்:

சொற்கரிய சாதனையைச் சாதித்தான் மைந்தன் என்று 'ரியூட்டரி' ஆசானும், அதிபரும் சேர்ந்து பல நூறு ரூபா பணம் செலவிட்டு, பற்பல படங்களைப் போட்டு பெற்றோரையும், அருந்தவப் புதல்வனையும் பாராட்டும் காலம் இது.

இத்தனைக்கும் அந்த மகன் இருநூறு புள்ளிகள் பெற வேண்டிய இரண்டு பாடங்கள் கொண்ட பரீட்சையில் 155 புள்ளிகள் பெற்றுவிட்டது தான் காரணம். இப்படி ஒரு நிலை உலகில் வேறெந்த நாட்டிலும் கண்டு கேட்டு அறிய முடியாத ஒன்றாகும்.

இவ்வாறாகப் புலமைப் பரிசில் பெற்றவனை விடக் குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் சாதாரண பரீட்சையிலும் உயர்தரப் பரீட்சை எனப்படும் பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சையிலும் சாதனை படைத்துள்ளனர். என்பது புள்ளி விபரங்கள் மட்டும் அன்றி அனுபவத்தில் நாம் கண்ட உண்மையுமாகும்.

இவ்வாறாக ஐந்தாம் வகுப்பில் புலமைப் பரிசிலும், ஜி.சீ.ஈ. சாதாரணப் பிரிவில் எட்டு 'ஏ' பெற்ற மாணவர்களின் நிலை மிகப் பரிதாபகரமாகவே உள்ளது. ஒரு பொது மைதானத்தில் தமிழில் ஒரு தேவாரம் பாடு, கூட்டத்தை துவக்குவோம் என்றால் இந்தப் புலமைப் பரிசில் மாணவனும் 8 ஏ மாணவனும் ஓடி மறைவது வேதனை தந்து நிற்கின்றது.

அதுதான் போகட்டும் இந்த வருங்காலக் கல்விமான், குரல் வளம் இல்லாததாலேயே ஓடி மறைந்தான். அவருக்கு ஓரிரு தேவாரம் தெரியும் என்று தந்தையார் சாட்சி பகன்றாலும் அவனுக்கு பல சினிமாப் பாடல்கள் தண்ணீர் பட்ட பாடு என்பது தாயாரின் பெருமிதமாகும்.

இத்தகைய ஒரு மாயையில், சிக்குண்டு, மதிகெட்டு, நிலைகெட்டு, தடம் புரளும் தமிழர் சமூகத்தைத் தூக்கி நிறுத்த எந்தக் கல்விமானும் இதுவரை முன்வராமை எமது வருங்காலத்தில் இதுவரை பேணப்பட்ட கல்விப் பாரம்பரியம் மரணிப்பதற்கான சாவு மணி என்றே சொல்லத் தோன்றுகின்றது.

இத்தகைய சூழ்நிலையில், மேடை தேடி அலையும் மேதாவிகள், தேடி வந்து ''மைக்கை'' பிடித்து மணிக்கணக்காக மாணவ மணிகளைப் பாராட்டும் நிலை எம்மை நாமே ஏமாற்றும் ஏமாளித்தனமான செயலாகும். இதனைக் காலம் தான் இவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

புலமைப் பரிசில் பெற்ற மாணவர்கள் போக எஞ்சியபகுதி எழுபது சதவீதமானோர் எங்குள்ளார், என்ன நடந்தது. இவர்கள் ஏன் நூற்று ஐம்பது புள்ளிகளைத் தாண்டவில்லை, என்று சமூக நல அக்கறையுடன் ஆய்வை மேற்கொள்ளும் புத்திஜீவிகள் எங்கும் காணோம்.

இவ்வேளையில் சமூக நல ஆர்வலர்களுக்கு மற்றுமொரு நிலைப்பாட்டைச் சுட்டிக்காட்ட வேண்டும். ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் என்றால் என்ன, ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் எட்டு 'ஏ' எடுத்தவரானால் என்ன, உயர்தர சோதனையில் மூன்று பாடங்களிலும் அதிவிசேட சித்தி எய்தி 3ஏ பெற்றவர் என்றால் என்ன, மாணவர்களுக்கு பாடவிதானத்தில் உள்ளதைவிட வேறு எதுவுமே தெரிவதில்லை. திருக்குறளில் தமக்கு எத்தனை குறள்கள் தெரியும் திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள்? எத்தனை குறட்பாக்கள் என்று தெரியாத மகோன்னத புலமையாளர்களும் கல்விமான்களில் உள்ளனர். பாரதியைப்போ, கம்பனைப்போ கேட்டறியாதவர்கள். இவர்கள் இத்தகைய தலைமுறையினரிடம் பாரதிதாசனையும், கவி மணியையும், நாமக்கல் கவிஞரையும், கவிஞர் கண்ணதாசனையும், திருமுருக கிருபானந்தவாரியாரையும் பற்றிக் கேட்டால் என்னதான் சொல்லுவார்கள்? மேலும் கீழும் கண்களை உருட்டி முழிப்பார்கள்.

இத்தகைய புத்தகப் பூச்சிகளால் யாருக்கு என்ன பலன்? இனிமேலாவது நாமது இளைஞர், யுவதிகளை புத்தகத்திலிருந்தும் 'ரியூசன்' கொட்டில்களில் இருந்தும் வெளிக்கொணரலாம் என்பதனை இன்னொரு தடவை பார்ப்போம்.

இந்தப் பிரதான பிரச்சினை குறித்து ஏனோ எமது ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விமான்கள், அக்கறை அற்று காலத்தைக் கழிக்கின்றார்கள் என்று தெரியவில்லை. விளையாட்டில், உடல் நலத்தில் காட்டும் அக்கறையை மாணவனின் மதி நலத்தில் காட்டும் நாள் எந்த நாளோ?



பிரசன்னன்

# அகதிகளுடன் சென்ற படகு கவிழ்ந்து 6 பேர் மரணம்; 20 பேரைக் காணவில்லை

கொழும்பு,நவ.3

ஆஸ்திரேலியாவுக்கு அகதிகளுடன் சென்றுகொண்டிருந்த படகு கவிழ்ந்ததில் இரண்டு குழந்தைகள் உட்பட தஞ்சம் கோரும் 6 அகதிகள் உயிரிழந்தனர் என்று இந்தோனேஷிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. 6 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 20 பேரைக் காணவில்லை என்றும் இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்றும் இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

70 பேருடன் ஆஸ்திரேலியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த படகு ஜாவாவின் கரையோரத்தில் கவிழ்ந்தது. இவர்களில் 46பேர் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தபோது மீட்கப்பட்டுள்ளனர் என்றும் காணாமற்போனவர்களைத் தேடும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஆணையாளர் பற்மாநோயர் தெரிவித்தனர்.

மீட்கப்பட்டவர்களில் 15 பேர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் ஆப்கானிஸ்தான், ஈராக், ஈரான், மற்றும் பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று இந்தோனேஷிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இன்னொரு படகு 92 அகதிகளுடன் நேற்று முன்தினம் கிறிஸ்மஸ் தீவை வந்தடைந்ததை ஆஸ்திரேலிய சமஷ்டி அரசு உறுதிப்படுத்தியுள்ளது. (ச-சி)

# பொலிஸாரும் கூலிப்படையாக மாறும் நிலை

கொழும்பு,நவ.3

பொலிஸாரும், இராணுவத்தினரும் பாதாள உலகக் குழுக்களின் கூலிப்படையாக மாறியுள்ளனர் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு சிகிச்சைக்காக சென்றிருந்த போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் இருந்த காலத்தில் சீரிய ஒழுக்கத்துடன் பொலிஸாரும், இராணுவத்தினரும் கடமையாற்றினர். தற்போது பாதாள உலகக் குழுக்களின் ஒப்பந்தங்களை பொலிஸாரும், படையினரும் நிறைவேற்றுகின்றனர்.

இராணுவத் தளபதி போர் புரியவில்லை, போரை நாமே திட்டமிட்டு நடத்தினோம் என்று மார்தட்டிக் கொண்டவர்களினால் பாதாள உலகக் குழுக்களினால் மேற்கொள் எப்படும்போதைப் பொருள் விநியோகத்தைக் கூட கட்டுப்படுத்த முடியவில்லை.

படுகொலைச் சம்பவங்களை தடுத்து நிறுத்த முடியவில்லை - என்றார். (ச)

# கூட்டமைப்பினரின் நாடாளுமன்ற உறுப்புரிமையை பறிக்கவேண்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்து

கொழும்பு, நவ .3

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று சூழ்ச்சிகளை மேற்கொண்டுவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய நாடாளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்பட வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

சர்வதேச அழுத்தம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காட்டிக்கொடுப்புக்கு மத்தியில் எமக்குள்ள சவால் என்ற தலைப்பில் கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் யாப்பின் 6ஆம் அத்தியாயத்திற்கு அமைய நாட்டைப் பிளவுபடுத்தவோ, சர்வதேச சூழ்ச்சிகளுக்கு துணைபோகவோ, தேசத்துரோகச் செயல்களில் ஈடுபடவோ மாட்டோம் என்று சத்தியப் பிரமாணம் செய்துவிட்டு, தற்போது அவற்றை மீறி அமெரிக்கா, கனடா சென்று செயற்படுகின்றனர்.

அரசமைப்பை மீறிச் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்பட்டு, அவர்கள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும். இதற்கான பூரண அதிகாரம் நாடாளுமன்ற சபாநாயகருக்கு உண்டு. விசாரணையின் பின்னர் அவர்கள் குற்றமற்றவர்கள் என்றால் விடுவிக்கலாம். இல்லாவிடின் தண்டிக்க வேண்டும்.

இன்று சர்வதேசத்துடன் சேர்ந்து யுத்தக் குற்ற விசாரணை வேண்டும் எனக் கோருவது 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கொள்ளவே. இலங்கை அரசும் அதற்கு அடிபணிந்து 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துமாயின் அனைவரும் தற்கொலை செய்து கொள்ள வேண்டிய அபாய நிலைமையே ஏற்படும்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நாட்டைக் கூறுபோடுவதற்கான முதல்படியை எடுத்து வைக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர். அதன் பின்னர் லிபியாவில் செய்தது போன்று, கிறிஸ் பூத பீதியின்போது செய்தது போன்று பணத்துக்காக மக்களை ஒன்றுதிரட்டி சிவில் யுத்தம் ஒன்றை ஏற்படுத்த அவர்கள் முயற்சிப்பர்.

அதன் பின்னர் தங்களுடைய பிரிவினைவாதக் கொள்கையை நிறைவேற்றிக் கொள்வர். உலக வல்லரசுகளுக்கு அஞ்சாமல் தலைநிமிர்ந்து நின்ற லிபியத் தலைவர் கேர்ணல் கடாபிக்கே மேற்குலகம் மரணம் கொடுத்தது என்றால் எமது நாட்டு மக்கள் தலைவர்களுக்கு அவ்வாறு செய்வதற்கு அவர்கள் தயங்க மாட்டார்கள் - என்றார். (ச-சி)

# அடிப்படை வசதிகளுக்காக ஏங்கும் நெடுங்கேணி மதியாமடு மக்கள்

வவுனியா, நவ.3

நெடுங்கேணி மதியாமடு கிராமத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள், வறுமை நிலையிலுள்ள தமக்கு உரிய வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தக் கிராம மக்கள் மீளக்குடியமர்ந்து இரண்டு வருடங்கள் கழிந்த நிலையிலும் நிவாரண உதவிகள், வீட்டு வசதிகள் இல்லாது மழைக்காலங்களில் அதிக சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். அத்துடன் இவர்களுக்கான அத்தியாவசிய வசதிகளும் இதுவரை வழங்கப்படவில்லை.

தற்போது ஐ.ஓ.எம். நிறுவனம் இவர்களுக்குத் தற்காலிகமாக வீடுகளை அமைத்து வழங்கி வருகின்றது. வன்னி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் நிறுவனங்களால் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் வீட்டுத் திட்ட வசதிகள் தமக்கு இதுவரை கிடைக்கவில்லையெனவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். மேலும் உதவிகள் வழங்கப்படும்போது பாரபட்சம் காட்டப்படுவதாகவும் மிகவும் வறுமையான நிலையிலுள்ள குடும்பங்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

மேலும் அத்தியாவசிய தேவைகளான குடிதண்ணீர், மலசல கூட வசதிகள் இவர்களுக்கு வழங்கப்படாத நிலையில் மிகுந்த சிரமங்களை இவர்கள் அனுபவிக்கின்றனர்.

அத்துடன் நிவாரணம் நிறுத்தப்பட்டதால் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். (க)

## கல்விக்கு மதிப்பு...



நல்ல நிகழ்வு: மல்லாவி மத்திய கல்லூரியில் 2010, 2011 ஆம் ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வின் போது அவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுகின்றனர். (425)

# போக்குவரத்துச் சீராகவுள்ள இடங்களில் போட்டிகளை நடத்துமாறு கோரிக்கை

பூநகரி, நவ.3

கிளிநொச்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட பூநகரிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் போட்டிகளை சகல பிரதேசங்களிலும் உள்ள பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் இலகுவாக வந்து செல்லக்கூடிய வகையில் போக்குவரத்து வசதிகளுள்ள இடங்களில் நடத்த வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அநேகமான போட்டிகள் நல்லூர் மகா வித்தியாலயத்தில் நடைபெறுவதால் மிகவும் பின்தங்கிய போக்குவரத்து வசதிகள் சீராக இல்லாத வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை, கிராஞ்சி அ.த.க.பாடசாலை, வேரவில் இந்து மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இவர்கள் நல்லூர் மகா வித்தியாலயத்துக்குச் செல்வதாயின் பூநகரி வாடியடிச் சந்தியில் பேருந்தை எதிர்பார்த்துப் பல மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலையே காணப்படுகின்றது.

இதனால் உரிய நேரத்தில் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாத நிலையில் உள்ளனர். அத்துடன் போட்டிகள் முடிவடைந்து வீடுகளுக்குச் செல்வதற்குப் பேருந்துகள் கிடைக்காது அவதியுறுகின்றனர்.

எனவே அடிக்கடி பேருந்துகள் வந்து செல்லும் ஏ-32 வீதியை அண்டியுள்ள பாடசாலைகளில் போட்டிகள் நடைபெறுமாயின் அனைவரும் வந்து செல்வதற்கு இலகுவாக இருக்குமெனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (க-127)

# சைக்கிளில் இருந்து விழுந்து மயக்கமடைந்த மாணவனுக்கு சிகிச்சை அளிப்பதில் தாமதம்

## மன்னார் பொது வைத்தியசாலையில் சம்பவம்

மன்னார், நவ.3

மன்னார் தாழ்வுபாடு பகுதியில் சைக்கிளில் சென்ற மாணவன் ஒருவன் தரையில் விழுந்து தலையில் பலமாக அடிபட்டு மயக்கமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் மாணவனுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னார் தாழ்வுபாடு புனித வளநகர் பாடசாலையில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவனான வினித் என்பவரே சைக்கிளில் இருந்து விழுந்து மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

மாணவனின் சிகிச்சையில் மன்னார் பொது வைத்தியசாலையில் உள்ள வெளி நோயாளர் பிரிவில் உள்ள வைத்தியர்களும் பணியாளர்களும் மிகவும் அசமந்தப் போக்குடன் காணப்பட்டனர்.

மாணவனை வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் எவ்வித சிகிச்சையும் இன்றி 4 ஆம் வார்ட்டுக்கு அனுப்பிவிட்டார். அங்கு கொண்டு சென்றபோது வார்ட்டில் உள்ள நோயாளர்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் ஒருவர் மாணவனுக்கு சிகிச்சை அளித்தார்.

நீண்ட நேரத்துக்குப் பின் மாணவன் கண்விழித்தான். வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் இல்லாமல் இருந்திருந்தால் குறித்த மாணவனின் நிலை மிகவும் மோசமாக இருந்திருக்கும் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (க-எ-601)

# கோம்பாவில், உடையார்கட்டு பகுதியில் மக்கள் சனிக்கிழமை மீளக்குடியமர்வு

முல்லைத்தீவு,நவ.3

முல்லைத்தீவு கோம்பாவில், உடையார்கட்டு ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை மீளக் குடியமர இருக்கின்றனர் என்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஜெ.ஜெயக்காந்த் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு, கோம்பாவில் , உடையார்கட்டு தெற்கு, சுதந்திரபுரம், வள்ளுவர்புரம், தேராவில் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களே மீளக்குடியமர்வு செய்யப்படவுள்ளனர்.

கோம்பாவில் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு, கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் உடையார்கட்டு, உடையார்கட்டு தெற்கு, சுதந்திரபுரம், வள்ளுவர்புரம் தேராவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு உடையார்கட்டு ம.வியிலும் மீளக் குடியமர்வு பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிய ஆவணங்களுடன் தங்கியிருந்த இடங்களில் இருந்து பெறப்பட்ட பதிவு நீக்கக் கடிதங்களுடனும் தமது மீளக்குடியமர்வுப் பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் தெரிவித்தார். (க-எ-6)

# கலந்துரையாடல்

கிளிநொச்சி, நவ.3

கிளிநொச்சியில் காணி உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யுத்தத்தின் பின்னர் மக்கள் மீளக்குடியமர்ந்த கிளிநொச்சிப் பிரதேசத்தில் காணி உரிமைகள் தொடர்பாக பல்வேறு பிணக்குகள் ஏற்பட்டுள்ளன. இதனால் மீளக்குடியமர்ந்த மக்களிடையே முறுகல் நிலையும் தோன்றியுள்ளது. இந்த நிலையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-எ-6)

# வீட்டுத் திட்டங்கள்

கிளிநொச்சி, நவ.3

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தமது நிறுவனத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களுக்கு வழங்கப்படவுள்ள வீட்டுத் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனந்தபுரம், அம்பாள்குளம் ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தால் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டன.

இவற்றில் கட்டி முடிக்கப்பட்ட மற்றும் பூர்த்தியடையும் நிலையிலுள்ள வீடுகளையே நிறுவன அதிகாரிகள் பார்வையிட்டனர். (க)

# மீளக்குடியமர்ந்த மக்களின் போக்குவரத்துக்கு போதியளவில் சைக்கிள்கள் கிடைக்கவில்லை

முல்லைத்தீவு,நவ.3

வன்னிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த மக்களின் போக்குவரத்துக்குரிய சைக்கிள்கள் போதிய அளவில் இன்னும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் சைக்கிளே பொது மக்களின் பிரதான போக்குவரத்து சாதனமாக உள்ளது.

இடப்பெயர்வுக்கு முன்னர் வன்னியில் ஒவ்வொரு வீட்டிலும் குறைந்த பட்சம் 3 அல்லது 4 சைக்கிள்கள் பாவனையில் இருந்தன. ஆயினும் இடப்பெயர்வின்போது அவற்றை போர்ப் பிரதேசத்தில் கைவிட்டுச் சென்றுவிட்டனர்.

மெனிக்பாம் இடைத்தங்கல் முகாம் வாழ்க்கையின் பின்னர் வன்னியில் மீளக்குடியமர்வு செய்யப்பட்டதை அடுத்து தமது தனிப்பட்ட போக்குவரத்துக்குச் சைக்கிள் இல்லாமல் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

கடைக்குச் செல்வது, விறகு கொண்டு வருவது, பாடசாலைக்குச் செல்வது, வேலைக்குச் செல்வது என எதற்கெடுத்தாலும் சைக்கிளே அவர்களின் போக்குவரத்துக்குரிய முக்கிய சாதனமாகத் தேவைப்படுகின்றது.

இந்த முக்கிய தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் போர்ப் பிரதேசத்தில் இருந்து எடுக்கப்பட்ட சுமார் 40 ஆயிரம் சைக்கிள்கள் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதைவிட பல்வேறு நிறுவனங்கள் மற்றும்பொருளாதார அபிவிருத்தி அமைச்சு உட்பட்ட பல அரச நிறுவனங்களிலும் புதிய சைக்கிள்கள் மீளக் குடியமர்வு செய்யப்பட்ட பள்ளி மாணவர்கள் உட்பட பொது மக்களுக்கு வழங்கப்பட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

எனினும் பலருக்கு இன்னும் சைக்கிள்கள் கிடைக்கவில்லை என்றும் பழைய சைக்கிள்கள் பாவனைக்கு உகந்ததாக இல்லையென்றும் மாணவர்களும், பொதுமக்களும் தெரிவிக்கின்றனர்.

அதிகரித்துள்ள சைக்கிள் தேவையைப்பூர்த்தி செய்வதற்காக வர்த்தகர்கள் முயற்சி எடுத்துள்ளபோதிலும் அவர்களும் பல்வேறு நெருக்கடிகளைச் சந்திக்க நேர்ந்துள்ளதாகவும் இதனால் சைக்கிள் வியாபாரத்தில் அதிக இலாபம் இல்லாத காரணத்தால் வங்கிக் கடன்களைக் கட்ட முடியாதிருப்பதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (க-எ)

# ஆறுபாயும் காணி தனியாரால் ஆக்கிரமிப்பு பெரும் பாதிப்பினுள் முல்லைத்தீவு மக்கள்



முல்லைத்தீவு,நவ.3

முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் முல்லைத் தீவு தெற்கு கிராம அலுவலர் பிரிவின் முல்லைத் தீவு - பரந்தன் வீதியை சின்னாறு குறுக்கறுக்கும் இடத்தில் அமைந்துள்ள சங்கிலிப்பாலத்துக்கு அண்மையாக ஒரு ஏக்கருக்கும் அதிகமான பகுதியை முல்லைத் தீவு நகரில் மீள்குடியமர்ந்துள்ள ஆளும் கட்சிப் பிரமுகர் ஒருவர் அடாத்தாக வேலியிட்டு மண் நிரப்பி வருகிறார்.

இந்தச் செயலினால் இந்தப் பகுதியில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் பெருந்தொகையான குடும்பங்கள் வாழ்வாதாரச் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த நடவடிக்கையால் இயற்கை நீரோட்டம் தடைப்பட்டு மாரிகாலத்தில் தீர்த்தக்கரை, சிலாவத்தை, கள்ளப்பாடு, வண்ணாங்குளம், முல்லைத் தீவு நகரம், மணற்குடியிருப்பு, கோயில் குடியிருப்பு, செல்வபுரம், வட்டுவாகல், உண்ணாப்புலவு போன்ற பல கிராமங்கள் வெள்ள நீரால் பாதிப்புக்கு உள்ளாகும். அத்துடன் முல்லைத் தீவு நகரை அண்டிய பகுதியில் 240 ஏக்கருக்கு மேற்பட்ட காணியில் பயிரிடப்படும் நெற்செய்கையும் பாதிப்புக்கு உள்ளாகும்.

'இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்தபோது கடந்த 25 ஆம் திகதி பொலிஸார் சென்று மறித்தபோதும் அதையும் மீறிக் காணியை அபிவிருத்தி செய்கின்றார். இவர் தனக்கு அமைச்சரின் செல்வாக்கு உண்டு எனக்கூறி பல அதிகாரிகளையும் மீறி செயற்படுகின்றார். இந்தச் செயலால் முல்லைத்தீவு வாழ்மக்கள் அனைவரும் கவலையடைந்துள்ளனர். அத்துடன் இது தொடர்பாக கூடிய கவனம் செலுத்துமாறு அரச அதிகாரிகளையும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதுதொடர்பாக இந்தக் காணிக்குப் பொறுப்பான அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இது தொடர்பான முறைப்பாடு தமக்குக் கிடைத்திருப்பதாகவும் ஆனால் மேலதிகமாகத் தகவல் களைத் தெரிவிக்கும் அதிகாரம் தமக்கில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இன்னும் இருவாரங்களில் நடைபெறவிருக்கும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த ஆக்கிரமிப்புத் தொடர்பாகத் தீர்க்கமான முடிவொன்று எட்டப்படும் என்றும் மேலும் கூறப்பட்டது. (க-319)

## உளவளப் பணிகள்...



பயன்தரும் பயிற்சி: ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் கிராமிய மாதர் அமைப்புப் பிரதிநிதிகளுக்கு உளநலப் பணிக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. (500)

# கட்டுக்கோப்புடன் ஒருங்கமைக்கப்பட்ட நிறுவனம்; மகாதேவா சைவச்சிறார் இல்லத்துக்கு புகழாரம்

### வடக்கு மாகாண பிரதம செயலாளர் வழங்கினார்

யாழ்ப்பாணம்,நவ.3

கட்டுக்கோப்பான, ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவன அமைப்பாக இன்று இலங்கையில் குறிப்பிடக்கூடிய சிறுவர் இல்லமாக மகாதேவா சைவச்சிறார் இல்லம் திகழுகின்றது.

இங்கு காலை 4 மணியில் இருந்து இரவு 10 மணிவரை ஒழுங்கமைக்கப்பட்ட கல்வி, சமய, சமூக, ஒழுக்க மற்றும் தொழில் நுணுக்கக் கற்கை நெறி வழங்கப்படுகிறது. இதனால் இங்கு கற்கும் மாணவர்கள் இன்னும் 10, 15 வருடங்களில் சமூகத்து ‹ ஒளியேற்றுவார்கள். ஷெஷெ இதில் எள்ளளவும் ஐயமில்லை.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மகாதேவா சைவசிறார் இல்லத்தில் ஆசிரியர் கௌரவிப்பு விழாவும் பிள்ளைகள் விழாவும், பிறந்தநாள் விழாவும் அண்மையில் இடம் பெற்றன.

வடக்கு மாகாண பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளரும் கிளிநொச்சி, முல்லைத்தீவு , யாழப்பாணம் பிராந்திய ஆணையாளரும் மகாதேவா இல்லத் தலைவருமான தி.இராசநாயகம் தலைமையில் முப்பெரும் விழா இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி மேலும் பேசுகையில்:

இன்று கிளிநொச்சியில் உள்ள மகாதேவா சைவச்சிறார் இல்ல சிறுவர்களைப் பார்வையிட உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் வருகை தருகின்றார்கள், பார்வையிடுகின்றார்கள், உதவுகின்றார்கள். அவர்களின் எதிர்காலம் குறித்தும் உரையாடுகின்றனர்.

இங்குள்ள ஆண், பெண் ஆகிய 290 பிள்ளைகளையும் முதலில் பார்க்க வாருங்கள். அதன் பின்னர் உதவுவது பற்றிச் சிந்தியுங்கள்.

இன்று மாணவர்களின் உறைவிடத் தேவைக்குப் பல கட்டடங்கள் தேவையாகவுள்ளன. பல நூலகங்கள் தேவையாகவுள்ளன, இன்னும் பல தேவைகள் உள்ளன.

எனவே உள்நாட்டு - வெளிநாட்டு உறவுகளை நான் பிரதம செயலாளர் என்ற வகையில் நேசக்கரம் நீட்டி உதவுமாறு கேட்கிறேன் என்றார் ஆ.சிவசுவாமி.

(க-302)

# சூரசங்காரத் திருவிழா



வன்னி யுத்தம் காரணமாக மூன்று வருடங்களின் பின்னர் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் நேற்றுமுன்தினம் சூரசங்காரத் திருவிழா சிறப்புற நடைபெற்றது. இந்த ஆலயம் நீண்ட காலத்தின் பின்னர் வழிபாட்டுக்குத் திறந்து விடப்பட்டுள்ளபோதிலும் ஆலய அன்னதான மடம், பூந்தோட்டம், குருக்கள் விடுதி, கிணறு என்பன இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-426)

# ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

கிளிநொச்சி,நவ.3

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் கோரிக்கையின் பேரில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அடுத்த மாதம் 29 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் இதனை அறிவித்தனர். (க-302)

# முத்துஐயன்கட்டு அ.த.க.பாடசாலையில் மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு

முத்துஐயன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இருந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் விசேட விருதுகள், பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

பாடசாலை அதிபர் கு.பஞ்சலிங்கம் தலைமையில் இன்று மு.ப. 11 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

பிரதம அதிதியாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் பல்வேறு கஷ்டங்கள், துன்பங்கள் மத்தியில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ச.டிசாந்தன் (156), பா.நிவந்தலா (155), ஆ.தாரணி (149) ஆகியோருக்கு விருதுகள், பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

இதேவேளை 100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற 5 மாணவர்களும் மாணவர்களுக்கு வழிகாட்டிய ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் விசேடமாகக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினர்களாகத் துணுக்காய் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.ஜெயபாலன், ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி சி.பங்கயற்செல்வன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மிகவும் பின் தங்கிய வசதிகள் எதுவுமற்ற பிரதேசத்தில் அமைந்துள்ள இந்தப் பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவர்கள் ஏனைய அபிவிருத்தியடைந்த இடங்களில் அமைந்துள்ள பாடசாலை மாணவர்களுக்கு எந்த வகையிலும் சளைக்காத விதத்தில் பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-302)

# மன்னாரில் தொடர்ந்து கடும் மழை பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின

மன்னார் மாவட்டத்தில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை முதல் தொடர்ந்து பெய்து வந்த கடும் மழையின் காரணமாக மாவட்டத்தின் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதோடு பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அண்மைக்காலமாக பெய்து வந்த மழையைப் பார்க்கினும் நேற்று புதன்கிழமை அதிகாலை முதல் தொடர்ச்சியாக பெய்து வந்த கடும் மழையினைத் தொடர்ந்தே மேற்படி பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

சௌத்பார், சாந்திபுரம், எழிழ்நகர், உப்புக்குளம் கோந்தைப்பிட்டி ஆகிய கிராமங்களில் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பல வீடுகளினுள் மழை நீர் உட்சென்றுள்ளமையினால் அம்மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.பல குடும்பங்களின் வீடுகளைச் சுற்றி நீர் காணப்படுவதோடு வீடுகளுக்குள்ளும் உட்புகுந்துள்ளமையினால் அந்தக் குடும்பங்கள் உறவினர்களுடைய வீடுகளில் தஞ்சமடைந்துள்ளன.



இதே வேளை மன்னார் நகர்ப் பகுதிகளில் உள்ள பல வீடுகளில் மழை நீர் வெள்ளம் போல் சூழ்ந்து கொண்டுள்ளதோடு பல வீதிகளும் பயணிக்க முடியாத நிலையில் வெள்ள நீர் சூழ்ந்து காணப்படுகின்றன.

மன்னார்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் வடிகாலமைப்புக்கள் சீரற்ற முறையில் காணப்படுகின்றன.

இதனாலேயே அதிகளவான நீர் வீடுகளிலும், வீதிகளிலும் தேங்கி நிற்பதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். இதே நேரம் பாதிக்கப்பட்ட மக்கள் மன்னார் நகரசபையில் முறையிட்டபோதும் மன்னார் நகர சபையினால் அனுப்பப்படும் பணியாளர்கள் உரிய இடத்தில் வந்து உரிய முறையில் வேலைகளைச் செய்வதில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-601)

# ஆலயங்களில் மிருக பலியிடுதல்

## ஏற்றுக் கொள்ளக் கூடியது

பண்டைய காலங்களில் இந்துசமயத்தவர்கள் இருக்கு, யசூர் சாமம் அதர்வனம் என்ற பிரிவுகளுக்கு அமைய வழிபாட்டின் அனுசரித்துள்ளனர்.

இவற்றில் யாகம் செய்து வழிபடும் முறையும் இந்து மதவழிபாட்டில் உள்ளது. இதில் மிருக பலி செய்து யாக பூசை செய்வதும் ஒரு முறையாகும். மிருக பலியான வழிபாடு அன்று தொட்டு நடைபெற்று வருவதாகும்.

அந்தக் காலத்தில் சாதியின் பெயரால் பக்தர்கள் கோயிலுக்குள் நுழைய முடியாது. தடுக்கப்பட்ட விடயங்களை நாம் மறுக்க முடியாது. இவ்வாறு தடுக்கப்பட்டவர்கள் தமக்கென குல தெய்வங்களான பேச்சியம்மன், வைரவர் போன்ற தெய்வங்களை மிருகபலி கொடுத்துயாக பூசை செய்தே வழிபட்டனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆலயங்களில் மிருக பலியிடுதலை மட்டும் எதிர்க்கின்றார்கள். ஆனால் எதிர்ப்பவர்களே வீட்டில் ஆடு, மாடுகளை வெட்டி உண்கிறார்கள்.

இவர்கள் எவ்வாறு மிருகவதைக்கு எதிராக குரல் கொடுப்பவர்களாக இருக்க முடியும். எனவே வீட்டில் நமக்கு ஒரு நியாயமும் வெளியில் ஒரு நியாயம் கதைக்க முடியும்.




ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடிகண்ணே என்பவர்களை எவ்வாறு நம்ப முடியும்.

எனவே மனித உயிர்களின் பலிகளை தவிர்க்கவே மிருக பலியிடுதல் ஏற்றுக் கொள்ளக் கூடியது.

வி.எஸ்.இராசதுரை, உடுவில் தெற்கு.

## ஏற்றுக்கொள்ள முடியாது

ஆலயங்களில் மிருக பலியிடுதல் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று ஆலயம் என்பது புனிதமான இடமாகும். மாமிசம் சாப்பிட்டு பின்னர் ஆலயம் யாரும் செல்வதில்லை. அவ்வாறு இருக்கையில் மிருக பலியிடுதல் என்பது புனிதமாக வணங்கப்படும் ஆலயத்தை மாசடையதாக்கும் ஓர் இழிவான செயல். ஆலயங்களுக்குப் பாதணிகளுடன் செல்லக் கூடாது என்று முன்னோர்கள் சொன்ன தன் அடிப்படையில் பின்பற்றி வருவது உண்மை. ஆனால் அது மாற்றியமைக்க வேண்டிய தேவையில்லை. ஏனெனில் பாதணிகள் என்பது நாங்களே சில மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றி உபயோகிக்கும் ஓர் உயிரற்ற பொருள் அதனை உயிருள்ள பொருளுடன் ஒப்பிட்டு நோக்குவது தவறு.

நாம் ஒன்று சிந்திக்க வேண்டும். ஆலயத்துக்குள் பாதணிகளுடன் செல்வதே தவறு என்றால் ஓர் உயிரை புனிதமான ஆலயத்தில் பலியிடுதல் எவ்வளவு குற்றமான செயல்! முன்னோர்கள் வகுத்த நல்லவற்றைப் பின்பற்றி தவறான செயல்களை மாற்றியமைப்பதே சிறப்பாகும். ஒரு மனிதனுக்கு மனித உயிர் எவ்வளவு முக்கியமானதோ, பெறுமதி ஆனதோ அதேபோல் ஒவ்வொரு உயிரினத்தின் உயிரும் பெறுமதியானதே. எனவே பலியிடுதல் எனும் பெயரில் மிருகங்களைப் பலியிடும் மிருகங்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

ப.ஆதிரிகா, நீர்வேலி தெற்கு.

### இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**இன்றைய இளம் சமுதாயத்தின் இணையப் பாவனை**

| ஆரோக்கியமானதா | | ஆரோக்கியமற்றதா | |
|---|---|---|---|

பெயர்: ......................................

முகவரி: ......................................

அடையாள அட்டை இல.. ......................................

உங்கள் தீர்ப்புக்களை 24.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.


### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

*'இளவல்கள் வட்டம்',*
*'உதயன்',*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் : ......................................
முகவரி : ......................................
......................................
திகதி ............ கையொப்பம் ............

## நியாயம் தானா



பேனாவை கையிலெடுத்து
கவிதை எழுத நினைத்தபோது
தறிகெட்டு ஓடுகிறது
என் மனம்
நீல வானம் மட்டுமே
நிறம் மாறும்
என நான் நினைத்தேன்
உன் மனம் கூட நிறமாறிவிட்டதே
எல்லாம் வேசம் தான்
என் இதய வீதியெங்கும்
நீ சுற்றுலா நடத்திவிட்டு
வழி மாறிப் போவது
நியாயமா?

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

## இரண்டின் அழகு

வருவதும் போவதும் இரண்டு -
இன்பம், துன்பம்
வந்தால் போகாதவை இரண்டு -
புகழ், பழி
போனால் வராதவை இரண்டு -
மானம், உயிர்
தானாக வருபவை இரண்டு-
இளமை, முதுமை
நம்முடன் வருபவை இரண்டு -
புண்ணியம், பாவம்
தவிர்க்க முடியாதவை இரண்டு -
பசி, தாகம்
நம்மை விட்டுப் பிரியாதவை இரண்டு-
பந்தம், பாசம்
அழிவைத்தருபவை இரண்டு -
பொறாமை, கோபம்

## பெற்றோர் எம் தெய்வங்கள்



குழந்தைப் பருவத்தில் தம்
நெஞ்சுதனில் எம்மைச் சுமந்து
வளர்த்தெடுத்த தெய்வங்கள்
எம் பெற்றோரே!
விவரம் அறியா சிறுவயதில் நாம்
வித்தைகள் பல செய்திடவே
எம்மை அரவணைத்து
அன்புக் கதைகள் சொல்லி
ஆதரித்த தெய்வங்கள்
எம் பெற்றோரே!
துள்ளித் திரியும் சின்னஞ்சிறு வயதினில்
எம் துடுக்கை அடக்கி
பள்ளிக்கு அனுப்பி வைத்து
பள்ளிப்பாடம் முடிந்து
வீட்டுக்கு வருகையிலே
பள்ளிப் படலையில் காத்து நின்று
அள்ளி அரவணைத்துக் கொண்டு வரும்
பாசத்தின் கோயில்கள் எம் பெற்றோரே!
முள்ளொன்று பட்டாலே
மூன்று நாள் விழித்திருந்து
கண்கள் தூங்காமல்
காக்கின்ற கருணை உள்ளம் கொண்ட
எம் பெற்றோர்
துன்பங்கள் போக்கி இன்பமூட்டி
உள்ளம் மகிழ உவகையூட்டி
வெற்றிகள் பெற ஊக்கமூட்டி
நல்லாசிகள் பெற வாழ்த்துக்கள் கூறி
வாழ வைத்த தெய்வங்கள் எம் பெற்றோரே!
எத்தனை அன்பு தான்
எம் பெற்றோரிடம்- அதைப்
பித்தென ஆக்குவது வெளிநாட்டு மோகம்
வெளிநாட்டு மோகத்தினுள் கட்டுண்ட
சில குள்ளநரிக் கூட்டமே! பிள்ளைகள்
பணமொன்றை அனுப்பிவிட்டு
பாசத்தை வியாபாரமாக்கிவிட்டு
கல்மனதாய் இருக்கின்றனர்
பெற்றெடுத்த பிள்ளைகள்
மனமொன்று இருப்பதை மனதில் கொண்டு
நல்ல மனித நேயத்துடன் பெற்றோரைப் பாரீர்...

ப. அபிராமி.

## தனிமை

தனிமைக்கு மட்டுமே
முடிந்தது- என்
உணர்வுகளைப் புரிந்து கொள்ள...
அதனால் தான்
தனிமையை மட்டும்
என் நிரந்தர
சொந்தமாக்கிக் கொள்ள
பிரியப்படுகிறேன்
தனிமைகள் என்னைத்
தழுவிக் கொள்ளும்
போதெல்லாம்
நான் என்னை மறந்து
இந்திரலோகத்தில்
மிதக்கிறேன்
தனிமைகள் சுகமானவை
மட்டுமல்ல
ஒரு வகையில்
சுதந்திரமானவையும் கூட...!



செ.ரவிசாந்,
வீரமனை, குப்பிளான்.

## மூன்றால் முன்னேற

தவிர்க்க வேண்டிய மூன்று -
புகைத்தல், குடித்தல், சூதாடல்
அடக்க வேண்டிய மூன்று
நாக்கு, கோபம், ஆசை
ஒழிக்க வேண்டிய மூன்று-
திருட்டு, பொய், சோம்பல்
ஆதரிக்க வேண்டிய மூன்று -
வாக்குறுதி, நட்பு, அன்பு
மதிக்க வேண்டிய மூன்று -
முதியோர், மார்க்கம், சட்டம்
போற்ற வேண்டிய மூன்று -
தைரியம், மனமகிழ்ச்சி, திருப்தி

இ.நிரஜா,
கைதடி கிழக்கு.

# பொருள்களின் விலை அதிகரிப்பை ஈடுகட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் தேவை

## அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் கோரிக்கை

நுவரெலியா, நவ.3

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்வதனால் அரசு 2012 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமைமா மற்றும் மண்எண்ணெய் உட்பட்ட அத்தியாவசியப் பொருள்களுக்குரிய நிவாரணத்தை வழங்க வேண்டும் என்று அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக சங்கத்தின் தலைவர் இராமலிங்கம் சந்திரசேகரன் அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

தற்போது பெற்றோல் 12 ரூபாவாலும், டீசல் 8 ரூபாவாலும், மண்எண்ணெய் 10 ரூபாவாலும் அதிகரிக் கப்பட்டுள்ளது. இந்த விலையேற்றங்களால் பெருந்தோட்டத்துறையில் மிகவும் குறைந்த சம்பளத்தைப்பெற்று வாழ்க்கை நடத்தும் தோட்டத் தொழிலாளர்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக தோட்டப்புறங்களில் அதிக பாவனையிலுள்ள மண்எண்ணெய் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு தொழிலாளர்கள் மீது பாரம் சுமத்தப்பட்டதை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

தோட்டப்புறங்களில் அதிகமானோருக்கு இன்னமும் மின்சார வசதி கிடைக்காத வீடுகளில் குப்பி விளக்குகளையே பயன்படுத்தி வருகின்றனர். இந்தநிலையில் கடந்த ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் மண்எண்ணெய் 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுவிட்டது. இந்த விலை உயர்வு அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

பெற்றோல், டீசல் போன்றவற்றின் விலை அதிகரிப்புக் காரணமாக ஏனைய அத்தியாவசியப் பண்டங்களினது விலைகளும் அதிகரிக்கப்படும். இந்த விலையேற்றங்களைக் குறைந்தளவு வருமானத்தைப் பெற்றுவரும் அவர்களால் தாங்கிக்கொள்ளமுடியாது.

கடந்த மார்ச் மாதம் செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் அவர்களுக்குக் கிடைத்த சொற்ப சம்பள உயர்வானது இந்த விலையேற்றங்களை ஈடுசெய்யக்கூடியதல்ல.

இது இவ்வாறிருக்க, தற்போது தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு முறையாக வேலையும் வழங்கப்படுவதில்லை. மாதத்தில் 25 நாள் வேலையைக்கூட நிர்வாகங்கள் வழங்குவதில்லை. இந்த நிலையில் தமது வேலை நாள் இலக்கை அடையமுடியாத அவர்களால் நாளொன்றுக்குரிய 515 ரூபா சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளமுடியாத கஷ்டநிலைக்கு முகம் கொடுத்துள்ளனர். எனவே, இந்தக் காரணங்களைக் கருத்தில் கொண்டு அரசு தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு காத்திரமான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இந்து ஆலயங்களைப் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

பதுளை, நவ.3

பதுளை மாவட்டத்தில் இருபது இந்து ஆலயங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்காக கலாசார அலுவல்கள் திணைக்களம் 20 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

மாவட்டத்திலுள்ள ஆலயங்களைப் புனர்நிர்மாணம் செய்வது தொடர்பில் கோயில் பரிபாலன சபையினரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே இந்த நிதியை திணைக்களம் ஒதுக்கீடு செய்துள்ளது.

பதுளை மாவட்டச் செயலாளர் ரோஹண கீர்த்தி திஸாநாயக்காவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் தெரிவு செய்யப்பட்ட இருபது ஆலயங்களும் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ச)

## மொனராகலையில் மீண்டும் இறப்பர் செய்கை

மொனராகலை, நவ.3

மொனராகலை மாவட்டத்தில் மீண்டும் இறப்பர்ச் செய்கையை முன்னெடுக்கும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்களை இறப்பர் அதிகார சபை மேற்கொண்டு வருகின்றது.

மாவட்டத்திலுள்ள பிபிலை, மெதகம போன்ற பிரதேசங்களில் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் இறப்பரைப் பயிரிட ஏற்பாடுகளை மேற்கொண்டு வரும் அதேவேளை சுமார் 540 ஏக்கரில் இறப்பர் பயிரிடப்பட்டுள்ளதாகவும், இவற்றுக்கான நிதியை பொருளாதார அமைச்சு ஒதுக்கியுள்ளதாகவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தப் பிரதேசத்தில் இறப்பர் பயிரிடும் விவசாயிகளுக்கு இறப்பர் கன்றுகள் மற்றும் உரமானியம், இலவச பயிற்சி போன்றவற்றை விவசாய திணைக்களம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(ச)



திருகோணமலைப் பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற கன்னியா சுடுதண்ணீர் கிணறுகளுக்குச் செல்லும் வீதி புனரமைப்புச் செய்யப்படுகின்றது. நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாமல் இருந்த வீதி, சுற்றுலாப் பயணிகள் வருகையைத் தொடர்ந்து திருத்தப்படுகின்றது.

(கு-421)

## சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியமர்வில்லை

### கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

திருகோணமலை, நவ.3

இந்திய - இலங்கை அரசுகளின் ஒப்பந்தப்படி, சம்பூர் பிரதேசத்தில் அனல்மின் நிலையம் அமையவுள்ளது. இதனால் அங்கு குடியிருந்த மக்கள் அந்தப் பகுதியில் மீளக்குடியமர்த்தப்படமாட்டார்கள் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

சம்பூர் மக்கள் சொந்த இடத் தில்தான் குடியேற வேண்டும் என்று விரும்பினாலும் சாத்தியப்பாடு இல்லாத பட்சத்தில் அவர்கள் மாற்றிடங்களைத் தெரிவுசெய்து குடியமர்ந்துதான் ஆகவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் அரச காணிகள் ஊர்காவல் படையினருக்கு வழங்கப் படுகின்றன என்று உள்ளூர் செய்திகளில் வெளியான தகவல்களையும் அவர் மறுத்துள்ளார்.

ஸ்ரீமாவோ ஆட்சிக் காலத் தில் தேக்குமர உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட காணிகளில் புதிய மர நடுகையை மேற்கொள்வதற்காகவே ஊர்காவல் படையினருக்கு அந்தப் பகுதிகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்று தெரி வித்துள்ளார்.

சுமார் 3ஆயிரம் ஏக்கர் அளவான காணிகளே 3 ஆண்டுகளுக்கு இவ்வாறு ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட் டுள்ளன. ஊடகங்களில் 20 ஆயி ரம் முதல் 40 ஆயிரம் ஏக்கர் வரையான காணிகள் என்று கூறப்படுவது தவறு என்று அவர் தெரிவித்தார்.

(ச)

## முன்னாள் முதல்வரின் நிழற்படம் இல்லாமையால் கல்முனை மாநகரசபை முதலாவது அமர்வு தாமதம்

கல்முனை, நவ.3

கல்முனை மாநகரசபையின் முதலாவது முதல்வர் ஏ.ஆர். அஸ்மிரின் நிழற்படம் கூட்ட மண்டபத்தில் கொழுவப்படாதமையால் மாநகரசபையின் புதிய நிர்வாகத்தின் முதலாவது அமர்வு ஒரு மணித்தியாலம் தாமதமாகி ஆரம்பமானது.

கல்முனை மாநகரசபையின் முதல்வர் மீராசாஹிப் சிராஸ் தலைமையிலான முதலாவது அமர்வு கடந்த திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவிருந்தது.

இருப்பினும், கூட்ட மண்டபத்தில் முன்னாள் முதல்வர்களின் படங்கள் கொழுவப்பட்ட இடத்தில் மாநகரசபையின் முதலாவது முதல்வர் ஏ.ஆர். அஸ்மிரின் நிழற்படம் தொங்கவிடப்படாதமையால் சபைக்கு வருகை தந்த உறுப்பினர்கள் சிலரும் பார்வையாளர்களும் அதிருப்தியடைந்தனர். முன்னாள் முதல்வர் ஏ.ஆர்.அஸ்மிரின் நிழற்படம் காட்சிக்கு வைக்கப்பட வேண்டுமென அவர் கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனையடுத்து மாநகர சபையின் ஊழியர்கள் வரவழைக்கப்பட்டு முன்னாள் முதல்வர் ஏ.ஆர்.அஸ்மிரின் நிழற்படம் தொங்கவிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து அமர்வு தாமதமாகி முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகியது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## வெலிமடை நூலகத்தில் தமிழ்ப் பத்திரிகை இல்லை

தியத்தலாவை, நவ.3

வெலிமடை நூலகத்தில் தமிழ்ப் பத்திரி கைகள் இல்லாத காரணத்தினால் வாசகர்கள் பெரும் அதிருப்தியும் விசனமும் தெரிவிக்கின்றனர்.

ஊவா மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் செறிந்துவாழும் இந்தப் பகுதியில், பிரதேச சபையினரால் நிர்வகிக்கப் படும் ஒரு நூலகத்தில் தமிழ்ப் பத்திரிகைகளோ, சஞ்சிகை களோ இல்லாதிருப்பது வியப்பளிக்கின்றது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரதேசசபையில் மூன்று தமிழ்பேசும் உறுப்பினர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விசேட வைத்தியர் குழு வருகை

மட்டக்களப்பு, நவ.3

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் டெங்கு நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் கொழும்பிலுள்ள விசேட வைத்தியர்கள், சுகாதாரத்துறை அதிகாரிகளைக்கொண்ட விசேட குழுவொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் வந்துள்ளது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய இந்த விசேட குழு மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்துள்ளது.

டெங்கு நோயின் தாக்கம் பொதுமக்கள் பாவிக்கும் குடி தண்ணீரிலும் ஆதிக்கம் செலுத்தக்கூடிய அபாயம் ஏற்பட்டிருப்பதாகக் கண்டறியப்பட்டதையடுத்தே அமைச்சர் சுபைர் சுகாதார அமைச்சர் மைத்திரிபால விடம் அவசர வேண்டுகோளை விடுத்திருந்தார்.

விசேட வைத்தியக் குழுவினர் ஏறாவூருக்கு முதலில் சென்று, மக்கள் பாவிக்கும் குடி தண்ணீரை ஆராய்ச்சிக்குட்படுத்தினர். இதற்கமைய 'அபே' எனப்படும் ஒருவகை இரசாயனப் பதார்த்தத்தைக் குடி தண்ணீரில் தெளிக்க இந்தக் குழுவினர் முடிவுசெய்துள்ளனர். (ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:**
அலைச்சல் இருந்தாலும், அதற்கேற்ற ஆதாயம் பெறுவீர்கள். உறவினர்களால் உருவான வீண் பழிகள் அகன்று செல்வாக்கு கூடும். தந்தை வழியில், எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். நீண்ட கால திட்டம் ஒன்றை செயற்படுத்த முற்படுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம்.

**இடபம்:**
உங்களுக்கு எதிராக மறைமுகமாக சதி செய்யும் சிலரை அறிந்து கொள்வீர்கள். பணிபுரிவோர் தொழில் ரீதியான கூட்டங்கள், நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்காத நண்பர் ஒருவரைச் சந்திக்கலாம்.

**மிதுனம்:**
நீங்கள் பிரச்சினை வராது என சாதாரணமாக நினைத்த விடயம் ஒன்றில், தொல்லைகள் உருவாகலாம். சிறிய விடயங்களுக்காக சிலருடன் பெரிய அளவில் வாக்குவாதம் செய்யலாம். பணிபுரிவோர், நிர்வாகத்தினரின் நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். பெண்கள் கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். வீண்பேச்சைத் தவிர்க்கவும்.

**கடகம்:**
முத்தான வாய்ப்பு ஒன்று, உங்களைத் தேடி வரலாம். வியாபாரிகள் போட்டியாளர்களின் சூழ்ச்சிகளை முறியடித்து, கூடுதல் லாபம் பெறுவர். நண்பர்கள் சிலருக்கு தேடிச் சென்று உதவி செய்வீர்கள். சிறிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில், பெரிய அளவில் பலன் கிடைக்கலாம். புதிய இடங்களுக்கு செல்ல நேரிடலாம்.

**சிங்கம்:**
விளையாட்டாகச் செய்த சில காரியங்கள், நல்ல விதமாக முடியலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். மனதில் உற்சாகம், சந்தோஷம் குடிகொள்ளும். உறவினர்கள் சிலரின் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். குறுகிய தூர பயணங்கள் செல்லலாம். சக ஊழியர்கள் அனுசரணையாக, அன்பாக நடந்து கொள்வர்.

**கன்னி:**
மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். நடந்து முடிந்த சம்பவம் ஒன்றை நினைத்துக் கவலைப்படுவீர்கள். வழக்கு விவகாரங்களில் சுமுகமான நிலைமை காணப்படும். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம்.

**துலாம்:**
சொந்த, பந்தங்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல் இழுபறியாகி விடலாம். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உங்களின் சில ரகசியங்களை உறவினர்கள் அறிந்து கொள்வர். திட்டமிட்ட காரியம் ஒன்றை, எப்பாடுபட்டாவது வெற்றிகரமாக முடிப்பீர்கள். தொழில் ரீதியாக சிலரிடம் கடுமையாக நடந்து கொள்ளலாம்.

**விருச்சிகம்:**
பெண்கள் வழியில், பெருமைப்படும் வகையிலான உதவிகள் கிடைக்கலாம். குடும்ப பெரியவர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றி வைப்பீர்கள். விவசாயிகள் எதிர்பார்த்த பொருள் உதவிகள், கடனுதவிகளைப் பெறலாம். தடை, தாமதங்களை முறியடித்து எதிலும் வெற்றி காண்பீர்கள். சில விஷயங்களில் அதீத நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**தனுசு:**
உடல் அசதி, சோர்வு ஆள்கொள்ளும். சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். பெண்கள், பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். பழைய பொருள்கள், பத்திரிகை போன்றவற்றை விற்கலாம். தொழில் கூட்டாளிகள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து, எரிச்சல் உண்டாக்கலாம். சிலருக்கு தர வேண்டிய கடன்களைக் கொடுக்கலாம்.

**மகரம்:**
எதிலும் தெளிவான சிந்தனை, புத்திசாதுர்யத்துடன் செயற்படும் நாள். குடும்பத்தில் சுப காரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சோம்பியிருக்காமல் ஏதாவது வேலைகளை செய்து கொண்டிருப்பீர்கள். பிரியமான சிலரின் சந்திப்பு நிகழும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**கும்பம்:**
தொழில் ரீதியாக உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். நீங்கள் செய்ய நினைத்த காரியம் ஒன்றுக்கு குடும்ப உறுப்பினர்கள் தடை போடலாம். உடல் உபாதைகளால் மருத்துவச் செலவுகளுக்கு ஆள்படலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றம் உருவாகலாம். சில வேலைகளைச் செய்ய மறந்து விடலாம்..

**மீனம்:**
நண்பர்கள், நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் எடுக்கும் முன், ஒன்றுக்கு இரண்டு முறை யோசிப்பீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள்.

# காத
# ஊளசி
# வார
# கடைவ

இணைந்து வாழ்வதில் எமக்கு இணக்கமில்லை என்பதை கால காலமாக வெளிப்படுத்தியே வந்துள்ளது தமிழர் தரப்பு. தீவின் வட கிழக்குப் பிரதேசங்களை தமக்குரிய ஆட்சியதிகாரப் பரப்பாக வரித்துக்கொண்டு, தொன்று தொட்டு நிலவி வரும் பண்பாட்டு விழுமியங்களில் ஒழுகிய படி, போதுமான புவியியல் ரீதியிலான எல்லைகளை வேறுபாடு இடைவெளிகளாக நீடித்துக்கொண்டு " தனிக் குடித்தனம்" போய் விடுவதற்கான ஏற்பாடுகள் இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டனவல்ல.

இன்று வரைக்கும் முற்றுப்பெற்றுவிடாத இந்த முயற்சிகளுக்கு வயதின் முதிர்ச்சி மிக மிக அதிகம். "பிராந்திய வல்லாதிக்கம்", " பொருளதாரச் சுரண்டல்", " இந்து சமுத்திரத்தின் ஏக போகத்துக்கான போட்டி" எனப் பல நொண்டிச் சாட்டுகளோடு, சர்வதேசத்தின் குளிர் போக்குவதற்கான "நெருப்பாக" நாங்கள் எரிந்து கொண்டேயிருக்க வேண்டிய கட்டாயம்; விதியின் வல்லெழுத்துக்களில் ஒன்று.

பல நூற்றாண்டுகளாக ஆண்டு, அனுபவித்து விட்டுப்போன "வெள்ளைத் தோல்கள்", தமக்கு முன்பு ஆண்ட பிற தேசத்தவன் இந்த நாட்டைக் கைப்பற்றிய காலத்தில் இருந்த இராச்சிய பிரிவுகளைச் சிறிதும் கணக்கில் கொள்ளாது, அனைத்தையும் பிசைந்து தெற்கில் குவித்து வைத்துக் கொட்டி விட்டுப் போனது தெரியாமல் செய்த தவறல்ல. தெரிந்தே செய்த சுருக்கு!

மலையக இராஜ்ஜியமாகவும், யாழ்ப்பாண இராஜ்ஜியமாகவும், கரையோர சிங்களக் கூட்டு இராஜ்ஜியமாகவும் பிரிந்து கிடந்தவர்களைச் சேர்த்து வைத்து விட்டுக் கப்பலேறியவனின் சூட்சுமம் இலேசுப்பட்ட தல்ல .

சதா காலமும் இவர்கள் அடித்துக் கொண்டும், பிரிந்து கொண்டும் " செத்து, செத்து விளையாடுவதை " உப்பரிகையில் இருந்து ஒய்யாரமாய் ரசித்து நீதி சொல்லலாம் என்ற கனவான்களின் கணக்கு சற்றும் தப்பவேயில்லை!

தமது காலனித்துவ ஆட்சியின் கீழ் சுரண்டி அள்ளப்பட்ட எல்லா நாடுகளையும் இன்று வரைக்கும் ஏதோவொரு விதத்தில் தமக்குக் கீழ்ப்பட்டவர்களாகவே காட்டிக்கொள்ளவும் தவறுவதில்லை. உதவி செய்வதாகக் கூறிக்கொண்டு மேற்படி நாடுகளை ஒன்றிணைத்து இவர்கள் நடத்தி வரும் " வட்ட மேசைகளும்", "பக்கத்துப் பக்கக் கம்பங்களில் கொடியேற்றுதல்களும்" , " குறூப் போட்டோக்களும்" அபிவிருத்தியின் அச்சாணி என்று எம்மையெல்லாம் நினைக்க வைக்கும், " ஆண்ட ருசியின்" சப்புக்கொட்டுகை என்பது உற்று நோக்கின் தெரியும்.

தனி நாடுகளாகப் பிரிந்து விட்ட பின்பும், அவரவர் படுக்கையறைகளை எட்டிப் பார்த்து " என்னென்ன பிரச்சினைகள் இன்னமும் உங்களுக்கு ? " என்று அக்கறையுடன் விசாரித்து தோண்டியெடுத்து "தீர்த்துக் கட்டும்"," டிப்டொப் " ஆசாமிகளின் மடங்கள்தான் இவையெல்லாம். தங்களைவிட எதிலெல்லாம் நாம் உயர்ந்திருந்தோம் என்று ஆராய்ந்து மட்டம் தட்டி விட எண்ணிக்கொண்டிருப்பவர்களின் கூட்டுக் கூடாரங்கள். அவர்கள் "மொழி" என்று ஒன்றை முதன்மைப்படுத்துவதற்கு முன்னாலேயே, திராவிட இனத்திடம் கவிதையும், இலக்கண நூல்களும் இருந்திருக்கின்றன. நாடோடிகளாக பிரிந்த அவர்கள் வீடு கட்டி வாழலாமே என்று எண்ணத் தொடங்குவதற்கு முன்பாகவே கடல்கொண்ட குமரியில் "நாடு", "நகரம்" என்று நாகரிகம் தொடங்கி விட்டிருந்தது. நிமிடத்துக்கு நிமிடம் மாறிவரும் கலாசார சூழலுக்குள்சாக்கடை புழுக்களாக நெளிந்துகொண்டிருப்பவர்களுக்கு, சந்தணமாய் மணக்கும் எம் மேலான பண்பாட்டுக் கோலங்களும், வாழ்வியல் தோற்றங்களும், அழகிய குடும்ப அமைப்புக்களும் ஈர்ப்புக் குரியவையாக மாறிவிட்டதில் ஆச்சரியமேதுமில்லை.

> சுடப் பிறந்தவனின் எல்லைக்கல்
> ஓரங்குலம் அசைவதைக்கூட
> பொறுத்துக் கொள்ள முடியாதவர்
> களுக்கு எல்லையில் மட்டுமல்ல உன்
> அள்ளையிலும் இடம்தா எனக்
> கேட்பவனின் முன், வாய் பொத்திக்
> கிடக்கிறார்கள். பின் எப்படிக் கிடைக்கும்
> தனியரசெனும் முடி? இத்தீவின்
> மூன்றில் இரு பங்குக்கும் மேலான
> கடற்பகுதியை எல்லையாகக் கொண்ட
> தனி நாட்டுக்கான வரைபடத்தை சிவப்பு
> மையால் நிரப்பி வைத்துக்கொண்டு
> போராடியவனின் சந்ததியில்
> வந்தவர்கள் தான் வேலிக் கதியால்
> இம்மியும் பிசகாமல்
> இருக்கவேண்டுமென்று சந்தியில்
> நின்று ஊர்கூட்டி நியாயம் பிளக்க இன்று
> புதிதாய் பிறந்திருக்கிறார்களோ?
> எம்மண்ணைத் தா வென்று
> எதிரிலிருப்பவனிடம் நீதி கேட்டு
> உலகெங்கும் ஓடித் திரியும்
> சமநாள்களில், உள்ளுக்குள் ஒற்றை
> வரப்புக்கு ஓராயிரம் வழக்குத்
> தவணைக்குப் போக நாள் ஒதுக்க
> முடிகிறதே?

வீர சைவத்தை தமது மார்க்கமாக வழிகொண்ட ஆதித் திராவிடரின் மூல வேர்களில் ஆரியம் நெருப்பெடுத்துச் சுட்டது. பல் வழிகளில் இலங்கேஸ்வரன் என்று கைலாசமே வியந்த மா வீரனை மன்னனாகப் பெற்ற இந்த நாடும், மக்களும் பெண் பழி சுமந்து, எரியுண்டு போனதாக வாய்வழித் திரிபுகளும் சுவடிகளும் பின்னாளில் இதிகாசம் என்று போற்றப்பட்டதை வரலாறு கூறும். எம் மூதாதை என்று போற்றப்பட்ட மன்னனை எதிர்த்துப் போரிட்ட ஒரே காரணத்துக்காக தெய்வமேயாயினும் "ராமன்" என்ற அவதாரத்துக்கு தனிக்கோயில் இல்லாத நிலைமை இந்த நாட்டில் நிலவி வந்தது முன்னாளில் என்பதும் உண்மை. மிகச் சில காலங்களுக்கு முன்பாகவே எம் நாட்டில் தோற்றம் பெற்ற ராம தூதுவன் "மாருதி" வழிபாட்டுக்கும் தனிப்பிரமாண்ட கோயில் அமைப்பு முறைகளுக்கும் பலத்த சர்ச்சைகளின் பின்னரே வழிவிடப்பட்டது என்பதும் மெய்!!

தந்தையாலேயே தேச சஞ்சாரம் செய்யப்பட்ட ஆரிய இளவரசனுக்கும், அவனது தோழர்களுக்கும் இனங்கலந்து கொள்ளக் கொடுத்த சந்தர்ப்பத்தால் இனவழிப்பின் அத்திபாரத்துக்கு முதல் சபலத் துளியை இட்ட மூதாட்டியின் வழிதான் எம் இழிவின் இற்றைக் காரணமென்ற பல வரலாற்றுப் பின்னணிகளில், ஆக்கிரமிப்புக்களை அனுமதித்த பெருமை எமக்குரியதன்றோ? கந்தபுராண கலாசாரத்தின் வீரியம் குறையாத சமூக கட்டமைப்புடையவர்கள் என்று மார்தட்டித் தோளுயரும் பீடுடையவர்கள் இன்றைய மண்ணாசை எத்தகையது என்பது வெட்கமும், வேதனையும் கலந்த அசூசை.

அண்மைக் கால செய்தித் தாள்களில், ஊர்ப் புதினங்களைக் கொடுப்புக்குள் சொல்லிச் சிரிக்கும் இணை யத் தளங்களிலும் அம்பலப்படுத்தப்பட்ட "காணிச் சிக்கல்களிலும்", "சொத்துத் தகராறுகளிலும்", "மரண சாசனங்களிலும் மாற்றீடுப் பிணக்குகளிலும்" சம்பந்த முடையவர்கள் மேற்கூறிய சமூக கட்டமைப்புக்குள் கட்டுப்படாமல் "விண்ணிலிருந்து நேற்றுத்தான் மண்ணில் குறித்தவர்கள்" என்று அர்த்தப்படுமா? இந்த மண்ணில் வழிவழியாக வாழ்ந்து இந்த நிலத்தின் "தேசவழமைச்சட்டம்" எனும் தனித்தன்மையுடன் தொன்மையும் கூடிய வழக்குகளில் ஊறியவர்கள்

# ற்ற
# யும்
# ாது
# ழிக்கு

தானே இவர்கள் எல்லோரும். வேற்று நாட்டு ஆட்சியாளர்களே, அங்கீகரித்துவிட்டுப்போன ''தேச வழமை'' என்னும் சமூக நீதியை இன்னும் கண்ணில் ஒன்றிப் போற்றும் புனித தெய்வ வாக்காககாக்கும். வழி வந்தவர்கள்தானே இவர்களையும் உள்ளடக்கி வாழ்ந்தனர்!

உயிரோடிருக்கும் முதியவர் ஒருவரின் பாரம்பரிய காணிகளில் ஒன்றை வலி.வடக்கின் உயர் பாதுகாப்பு வலய பிரதேசத்தில் இனம் கண்டு குறித்த உடைமையாளர் இறந்து விட்டார் என்ற போலியான ஆதாரங்களுடன் இன்னுமொருவருக்கு கொழுத்த விலைக்கு கொடுத்து ஆதாயம் காண முயன்றவர்கள் அண்மையில் வெளிப்பட்டதும், ஒரே ஆதனத்தை சகோதரர்கள் இருவருக்கும் சத்தமின்றி ''எழுதிக்கொடுத்துவிட்டு'' அண்ணன் சார்பில் நீதிமன்றில் வழக்காட வந்ததும், புலம்பெயர் தேசங்களில் இருந்து வரமாட்டார்கள் என்ற பொய்க் கணிப்பில், போலியான ''வெளிப்படுத்தல் உறுதிகள்'' மூலம் பல லட்சம் பெறுமதியான அசையாச் சொத்துக்களை ''ஆட்டையைப்'' போடுவதும் தான் இன விடுதலை கேட்டுப் போராடிய பேரினம் ஒன்றின் ஆகப்பிந்திய பொழுது போக்குகளா?

1990,1995 மற்றும் 2000,2002 ஆம் ஆண்டுகளில் எம் மக்களை ஊரோடிகளாக உலாவவிட்ட இடப்பெயர்வின் காரணத்தால் தவறவிடப்பட்ட உண்மையான ஆவணங்கள் மீளப்பெறப்படாமை, புலம்பெயர் தேசங்களுக்குச் சென்றவர்கள் பெரும்பாலானோர் தமது ஆவணங்களை இங்கேயே விட்டுச்சென்றமை, போரால், இடம் மாறிக் கொண்டிருந்த ஆவணக் காப்பகங்களும், அரச நிர்வாக அமைப்புக்களும், காணிக் கந்தோர்களும் பேரிடர் காலத்தில் சில, பல ஆவணங்களைத் தவறவிட்டமை போன்ற சட்டரீதியான சிக்கல்களோடு நடைமுறைச் சிக்கல்களும் இணைந்து மண்ணாசையின் பால் மகாவிருப்புக் கொண்டவர்களாக எம் மக்களை மாற்றிவிட்டது கண்கூடு.

தமது மதிப்பின் உயர்வு, வகிக்கும் பதவியின் தாழாண்மை, உயர் குடும்பப் பின்னணி இவையனைத்தையும் ஒரே நொடியில் தூக்கி எறிந்துவிடச் செய்யும் இந்த ''ஆதனப் பசிக்குப் போதுமான தீனி கிடைக்காத பெரிய மனிதர்களையும் இன்று காணும் பெருவாய்ப்பைப் பெற்றிருக்கின்றது வீரம் விளைந்த இந்த மண். அடங்காத இந்த அற்ப தாகத்தின் பக்கத்துணைகளாக ''அதிகாரிகளை விலைக்கு வாங்குதல்'' ''காவல் சேவகர்களுக்கு'' ''கப்பத்தில் தெப்பமிடுதல்'' ''கச்சேரி வரைக்கும் காசு பாய்ச்சுதல்'', ''சட்டவாளர்களிடமும் முறையற்ற பதிவுகளுக்குத் தூண்டுதல்'',''லாபத்தில் பேரம் பேசுதல்'' என்று பஞ்சமாபாதகங்களின் பல்வேறு வழிவகைகளை பிரயோகிப்பது ''முடியைக்கட்டி மலையை இழுப்பதே'' சமகால தமிழனின் சரித்திரம் என்றாகிப் போனது. ஊர் '' காத்தவர்களை'' விதைத்த, கார்த்திகைக் கோயில்களையும் கிளறியெறிந்து பங்கிட்டுக் கொடுக்கக் கிளம்பியவர்களிடம், கோரிக்கை மனு

உயிரோடிருக்கும் முதியவர்
ஒருவரின் பாரம்பரிய காணிகளில்
ஒன்றை வலி.வடக்கின் உயர்
பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில்
இனம் கண்டு குறித்த
உடைமையாளர் இறந்து விட்டார்
என்ற போலியான ஆதாரங்களுடன்
இன்னுமொருவருக்கு கொழுத்த
விலைக்கு கொடுத்து ஆதாயம்
காண முயன்றவர்கள் அண்மையில்
வெளிப்பட்டதும், ஒரே ஆதனத்தை
சகோதரர்கள் இருவருக்கும்
சத்தமின்றி
எழுதிக்கொடுத்துவிட்டு
அண்ணன் சார்பில் நீதிமன்றில்
வழக்காட வந்ததும், புலம்பெயர்
தேசங்களில் இருந்து
வரமாட்டார்கள் என்ற பொய்க்
கணிப்பில், போலியான
வெளிப்படுத்தல் உறுதிகள்
மூலம் பல லட்சம் பெறுமதியான
அசையாச் சொத்துக்களை
'ஆட்டையைப்' போடுவதும் தான்
இன விடுதலை கேட்டுப் போராடிய
பேரினம் ஒன்றின் ஆகப்பிந்திய
பொழுது போக்குகளா?

அனுப்பியபோது கொஞ்சமாவது கூசிப்போகவில்லையா உங்களின் உரோமக் கால்கள்? இந்தத் தேசத்தின் ஊசி முனையளவு நிலத்தில்கூட உங்களுக்கு உரிமையில்லை என்று திமிரதிகாரம் பேசிய வந்தேறுகளை, ''சட்டையை'' பிடித்து உலுக்கிக் கேட்ட வீராப்பில், சற்றே அமைதி கொண்டு உறங்கிக் கொண்டிருப்பவர்களையும் எழுப்பி விடுமளவுக்கு எம் பரம்பரையும் என்ன,''சிங்க வழிவந்த'' மிருக மூதாதைகளால் பின்னப்பட்டதா?

கூடப் பிறந்தவனின் எல்லைக்கல் ஓரங்குலம் அசைவதைக்கூட பொறுத்துக் கொள்ள முடியாதவர்களுக்கு எல்லையில் மட்டுமல்ல உன் அள்ளையிலும் இடம்தா எனக் கேட்பவனின் முன். வாய் பொத்திக் கிடக்கிறார்கள், பின் எப்படிக் கிடைக்கும் தனியரசெனும் முடி? இத்தீவின் மூன்றில் இரு பங்குக்கும் மேலான கடற்பகுதியை எல்லையாகக் கொண்ட தனி நாட்டுக்கான வரைபடத்தை சிவப்பு மையால் நிரப்பிவைத்துக்கொண்டு போராடியவனின் சந்ததியில் வந்தவர்கள் தான் வேலிக் கதியால் இம்மியும் பிசகாமல் இருக்கவேண்டுமென்று சந்தியில் நின்று ஊர்கூட்டி நியாயம் பிளக்க இன்று புதிதாய் பிறந்திருக்கிறார்களோ? ''எம்மண்ணைத் தா'' வென்று எதிரிலிருப்பவனிடம் நீதி கேட்டு உலகெங்கும் ஓடித்திரியும் சமநாள்களில், உள்ளுக்குள் ஒற்றை வரப்புக்கு ஓராயிரம் வழக்குத் தவணைக்குப் போக நாள் ஒதுக்க முடிகிறதே?

தொண்ணூறுகளின் முற்பகுதியில் ''துரோகிகள்''

■ செந்தூரி

'போராட துணிச்சலற்றவர்கள்' 'எதிர்கொள்ளாக் கோழைகள்' என்று பழிசுமந்து வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்த எம்மவர்கள்தான், இன்று ''புலம்பெயர்ந்தவர்'' எனும் புதுநாமம் கொண்டவர்களாய், உறங்கு நிலையில் இருக்கும் எம்மின விடுதலை வித்துக்கு ''பனித்துளிகளால்'' நீரூற்றி சாகாமல் வைத்திருக்கும் பரோபகாரிகள் எனும் நன்றியை நெஞ்சில் சுமப்பவர்கள் நாம் என்பது உண்மையாயின் ''விட்டுப் போன காணிகள், பத்திரம்'' என்ற தெளிவைக் கொடுப்பது எம் அனைவரதும் கடப்பாடு. கூடவே ''அற்ப சுகங்களுக்காக அடிபடுபவர்களல்லர் எம்மக்கள். மாறாக ஆண்டாண்டுகளாயினும் உரிமைகளை வென்றெடுக்கும் அறப்போரை கைவிடாதவர்கள்'' என்ற தகர்வுறாத நம்பிக்கையை பலப்படுத்தவாவது எமக்கிடையில் மூண்டுள்ள இந்த '' எல்லை பிடிச்சண்டை''களை எங்காவது தொலைத்து விட்டு வருவோமா? ✱

## பழைய படங்களா? பழைய பிணங்களா?



பட்டினத்தார் ஒரு வீதி வழியாக ஆனந்தமாக நடந்து போனார். அந்த வீதியல் உள்ள ஒரு வீட்டு வாசலில் கூட்டமாக உட்கார்ந்து அழுது கொண்டிருந்தார்கள். அந்த வீட்டில் யாரோ இறந்து போய் இருந்தார்கள். அழுகிறவர்களை உற்று உற்றுப் பார்த்த பட்டினத்தடிகள் 'ஓ' வென்று தானும் அழுதார். அவர் களை விட வேகமாக சத்தமாக அழுதார்.

அவரைப் பார்த்த ஊர்மக்கள் 'யாரோ இறந்தவரின் நண்பர் போலும்' என்று கருதி அவரைச் சமாதானப் படுத்தினார்கள். அவரோ நிறுத்து வதாக இல்லை. பேச்சுக் கொடுத்தார்கள் ''இறந்தவர்கள் உங்கள் உறவினரா?'' என்றனர். ''இல்லை'' என்றார். ''நண்பரா?'' என்றனர். ''இல்லை, இவரை எனக்குத் தெரியவே தெரியாது'' என்றார். ''பின் ஏன் இவருக்காக அழுகிறீர்கள்?'' என்று கேட்டனர். ''போய்விட்ட அவனுக்காக அழவில்லை... அவனுக்காக அழுகிற உங்களுக்காக அழுகிறேன்'' என்றார். யாருக்கும் புரியவில்லை. பட்டினத்தார் தொடர்ந்தார்.

''இறந்தவனுக்காக அழுகிற நீங்கள் யாருமே சாகப் போவதில்லையா? அது போகும் பிணம். இவ்வளவுதான் வித்தியாசம். இந்த உண்மை தெரியாது அழுகிற உங்கள் மூடத்தனத்தை நினைத்து நான் அழுகிறேன்'' என்றார். போம்பிணம் என்று செத்தாரையும் சாம்பிணம் என்று மற்றவரையும் காட்டிய பட்டினத்தார் மொழி படிக்க வேண்டிய ஒன்று.

'' நாளும் நாம் சாகின்றோமால்
நமக்கு நாம் அழாததென்னே?''

என்று பழைய பாட்டு ஒன்று உண்டு. அருமையான பாட்டு.

தினம் தோறும் கொஞ்சம் கொஞ்சமாக நாம் சாகின்றோம். தோல் சாகிறது. எலும்பு தேய்கிறது. கண் கெடுகிறது. காது மந்தமாகிறது. இப்படி எல்லாமே சிறிது சிறிதாகச் சாகின்ற போது ஒரு நாள் உடம்பு முற்றிலும் பயனற்றதாகிப் போகிற போது அழுது ஆர்ப்பாட்டம் செய்வது அறிவுடைமையா?

பகவத் கீதையில் மரணம் பற்றிய விளக்கம் மிகமிக நுட்பமானது. தாய் வயிற்றில் கருவாக உருவாகிறோம். சிசுவாக ஜனிக்கிறோம். பாலபருவத்தில் ஆடுகிறோம். இளமையில் துள்ளுகிறோம். நடுவயதில் தேங்குகிறோம். முதுமையில் துவளுகிறோம். மாறிக் கொண்டே போன நாம் மரணத்தைச் சிறிது சிறிதாக நுகருகிறோம். இளமை வந்தது. அப்போது குழந்தை உடல் இறந்தது. இளமை சாகின்ற போது முதுமை வந்தது. அப்படியானால் ஒவ்வொரு மாறுதலிலும் பழைமை மரணம் அல்லவா அடைந்தது. இந்த மாறுதல் விளக்க முடியாதபடி அணுஅணுவாக ஓயாமல் நிகழ்ந்து கொண்டே இருப்பதால் நாம் பதற்றம் அடைவதில்லை. ஒரே நாள் இரவில் நிகழாமல், ஒவ்வொரு விநாடியும் இந்தக் கொடிய மரணம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

நமது பழைய புகைப்படங்களை உற்றுப் பார்த்தால் நமது மரணத்தின் வீரியம் புலனாகும். நாம் எவ்வளவு மரணமடைந்திருக்கிறோம் என்பது புரிய வரும். கவிக்கோ அப்துல் ரகுமான் மிக அழகாக இதைப் படம் பிடிக்கிறார்கள்.

''நமது புகைப்பட அல்பத்தைப் புரட்டினால் இருப்பவை-
பழைய படங்கள் அல்ல
பழைய பிணங்கள்''

எமது ஒவ்வொரு பழைய படமும் எமது பழைய பிணம் என்பது புரிந்தால் ஒரு பிணத்துக்காக ஒப்பாரி வைப்போமா?

தாயின் கருவில் ஒரு மாமிச கோளமாய், சதைப் பந்தாய் உருண்டுள்ள கண் மூக்கில்லாத பிண்டத்தின் புகைப்படம் இன்று Scan மூலம் எடுக்கலாம். அதைக் கொண்டு வந்து என் பழைய போட்டோ என்று காட்டினால் நம்புவோமா?

பஞ்ச பூதங்களின் கூட்டுக் கலவையாய் உடம்பு கூடிக்கூடி பருக்கிறது. வளருகிற மாதிரி தோற்றம் காட்டி மறைந்து கரைகிறது. உண்மையில் இந்த அளவு மாற்றங்களுக்கு இடையிலும் ''நான் மாறுகிறேன்'' என்பதை உள்ளிருந்த படியே உணருகிறதே... அது என்ன? அது தான் ஆத்மா. அழிவில்லாத விழிப்பு... அறிவு பூர்வமான இருப்பு... சாட்சி... அது நாம் என்கிற தெளிவே ஆத்ம ஞானம். இந்த உடலை நாம் என்பதே அறிவீனம். இதற்கு ஒரு கதை உண்டு.

மழையில் ஒரு பண்ணையார் நடந்து போனார். கால் செருப்பு அறுந்து விட்டது. நடக்க மிக கஷ்டமாக இருந்தது. செருப்பைக் கையில் தூக்கி நடக்க அவர் கௌரவம் இடம் தரவில்லை. பக்கத்தில் இருந்த ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். அறுந்த செருப்பை அவர் வீட்டில் விட்டு விட்டுப் போவதாகவும் நாளை வந்து எடுத்துக் கொள்வதாகவும் சொன்னார். அறுந்து போன பழைய செருப்பைத் தமது வீட்டில் பாதுகாப்பாக வைக்கொள்ள நண்பர் சம்மதித்தார்.

வீதியில் இறங்கி சிறிது தூரம் சென்ற பண்ணையார் அறுந்து கிடந்த மின் கம்பியை வெறுங்காலால் மிதிக்கச் மரணமடைந்தார். மறு நாள் அவர் உடம்பை அலங்கரித்து நாலு பேர் சுமக்க ஊரே பின்னால் வந்தது. எதிர்பாராத கடும் மழை மறுபடியும் கொட்டியது. சுடுகாடு வரை சுமப்பது கஷ்டம் என்றே எல்லோருக்கும் தோன்றியது.

சரியாக நேற்று செருப்பை வைத்த வீட்டு வாசல் வந்ததும் ஒருவர் உள்ளே ஓடினார். ''ஐயா, இந்தப் பிணம் இன்று ஒரு நாள் உங்கள் வீட்டில் இருக்கட்டும். நாளை வந்து எடுத்துப் போய்ச் சுடுகாட்டில் வைக்கிறோம்'' என்று கேட்டார். வீட்டுக்காரர் ''எவன் பிணத்தையோ கொண்டு வந்து எம் வீட்டில் ஏன் ஐயா வைக்கிறீங்க?'' என்று கோபமடைந்தார்.. இறந்து போன நாய்த் தோலால் செய்யப்பட்ட பழைய செருப்புக் குக் கிடைத்த மரியாதை, பாதுகாப்பு அதன் எஜமானுக்கு இல்லையே? ஏன்? யோசித்தார்களா?

சுகி. சிவம்



மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலையில் நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் ஆசிரியர் தின கீதம் இசைக்கப்படுகிறது. விருந்தினர்கள், பாடசாலை அதிபர் ச.கிருஷ்ணன் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மேடையில் உள்ளனர்.

(ம–207)

# யாழ்.மாவட்டத்தில் வலுவிழந்தோருக்கு வேலைவாய்ப்பு வழங்குவது குறைவு

## யாழ்.வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கச் செயலாளர் கவலை

யாழ்ப்பாணம், நவ.3

சட்டரீதியாக வலுவிழந்தோர்களுக்கு மூன்று வீதமான வேலை வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதும் யாழ். மாவட்டத்தில்வலுவிழந்தோருக்கு அரச, தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படாத நிலையே தொடர்கிறது.

இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு யாழ். வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் செயலாளர் கே.கோபாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

யாழ். வலு விழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவுவிழா சங்க கட்டடத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

ஊனமுற்றவர்களை நாம் சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்காமல் அவர்களின் குறைபாடுகள் என்ன? அவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்து அவர்களுடைய தேவைகள் என்ன என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டும்.

இந்தச் சமுதாயத்தில் வலுவிழந்தோருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் சந்தர்ப்பங்கள் குறைந்துவிட்டன. இவர்களை இயலாதவர்கள் என்று ஒதுக்கி விடுகிறார்கள்.

சில வேளைகளில் வேலை வாய்ப்புகள் வழங்கினாலும் அதற்கேற்ப சம்பளம் வழங்கப்படுவதில்லை.

வலுவிழந்தோர் மாதாந்தம் வழங்கப்படும் உத விப்பணம், வீடமைப்பு கடனுதவிகள், வங்கிகளில் கடனுதவிகள், வீட்டுத் திட்டங்கள், விவசாயக் கடன்கள், சுயதொழில் முயற்சிக் கடன்கள் ஆகியவற்றில் கூட ஒதுக்கப்படுகிறார்கள். இது தொடர்பாக அரச அதிகாரிகள் கவனத்தில் எடுத்து மாற்றுவலுவுடையோர்களை முன்னிலைப்படுத்தி அவர்களின் தேவைகளை நிறைவேற்ற முன்வர வேண்டும். - என்றார்.

(ச-313)

# கலாசாரச் சீரழிவுகளை ஒழிக்க மக்கள் பலம் எனக்கு அவசியம்

## யாழ்.அரச அதிபர் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ.3

குடாநாட்டில் கலாசார சீரழிவுகள் அதிகளவில் இடம்பெறுகின்றன. இதனை ஒழிப்பதற்கு மக்கள் பலம் எனக்கு வேண்டும். ஆனால் நான் அரசியல்வாதி அல்ல.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

யாழ்.பிரதேச கலாசாரப் பேரவை கலாசார விழாவை திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் அண்மையில் நடத்தியது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களையும் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களையும் ஒழிப்பதற்கு ஒருவரால் மட்டும் முடியாது; எனக்கு மக்கள் பலம் வேண்டும்.

அத்தோடு யாழ்.மாவட்டத்தில் யுத்தம் மற்றும் இயற்கையால் கணவனை இழந்த 29 ஆயிரம் பெண்கள் உள்ளனர். அப் பெண்களுடைய வாழ்வாதாரத்தையும், சுயதொழில் ஊக்குவிப்பையும் பிள்ளைகளுடைய எதிர்காலத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் நான் உள்ளேன்.

இந்தப் பெண்களை நேரடியாக சந்தித்த போது அவர்களின் துன்ப துயரங்கை அறிய முடிந்தது.

நான் எனது கடமையைக் கட்டாயம் செய்ய வேண்டும். இது தொடர்பான முக்கிய பொறுப்புக்கள் என்னிடம் உள்ளன.

கலை என்பது யாழ்ப்பாணத்தின் உறைவிடம். எனவே, கலைகளை வளர்ப்பதற்கும், பேணுவதற்கும் அனைவரும் முன்வர வேண்டும். - எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் 15 கலைஞர்களுக்கு ''யாழ். ரத்னா'' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மாணவர்களின் கலை நிகழ்வுகளும், இரா செல்வவடிவேல் தலைமையிலான குழுவினரின் வழக்காடு மன்றமும், பாசையூர் பா.வின்சென்ற் குழுவினரின் கதகளி நடனம், யாழ்.பிரதேச கலாசாரப் பேரவைக் கலைஞர்களின் யாழ்.பாடி நாட்டுக் கூத்து, நாவாந்துறை ம.பாலச்சந்திரன் குழுவினரின் ''சூரியவம்சம்'' நாடகம் மற்றும் தேசிய கலை இலக்கியப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-311)

## குதிரை வாகனம் வழங்கப்பட்டது

தெல்லிப்பழை மேற்கு பொற்கலன்தம்பை ஞான வைரவர் கோயிலுக்கு ஒரு சோடிக் குதிரை வாகனம் அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் மயில்வாகனம் வசந்தசிவா என்பவராலேயே இது வழங்கப்பட்டது.

இருபது வருடங்களுக்குப் பின்னர் இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் விஜய தசமியன்று குதிரை வாகனத்தில் வைரவப் பெருமானை வீதியுலா கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-121)

## இலவச பயிற்சிநெறி

யாழ்.கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரி இலவசமாக பயிற்சி நெறிகளை வழங்கவுள்ளது.

யாழ்., 2 ஆம் குறுக்கு வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இரண்டு மாடிக் கட்டடத்தில் இப்பயிற்சி நெறிகள் முதன் முதலாக நடைபெற இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பயிற்சிகளைப் பெற விரும்புவோர் தமது சுயவிவரக் கோவையைப் பூர்த்தி செய்து அதற்கான படிவத்தில் கல்லூரிக்கு விண்ணப்பித்து பயிற்சி நெறிகளில் கலந்து கொள்ள முடியுமென உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

கடல் எல்லையைச் சுட்டிக் காட்டும் தொடர்பாடல் மற்றும் செய்மதி செயற்பாட்டுச் சான்றிதழ், கடல் இயந்திர தொழில் சான்றிதழ், மீன்பிடித் தொழில் நுட்பச் சான்றிதழ் , மீன் பிடி இயந்திர உதவியாளர் சான்றிதழ், வெளி இணைப்பு இயந்திரம் திருத்துதல் பராமரித்தல் சன்றிதழ் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-160)

## பருத்தித்துறை டிப்போ புதிய முகாமையாளர்

இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலையின் முகாமையாளர் இடம் மாற்றம்பெற்று சென்றுள்ளார். இதனையடுத்துப் புதிய முகாமையாளராக க.கந்தசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் நடத்துநராக தனது சேவையை ஆரம்பித்து படிப்படியாக பல பதவிகளில் கடமையாற்றி உதவி முகாமையாளராக இருந்து தற்போது முகாமையாளராக நியமனம் பெற்றுள்ளார். (ம-421)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலைய பரீட்சை முடிவுகள்

உயர்தர மாணவர்களுக்கு தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தால் நடத்தப்பட்ட கணித,விஞ்ஞான, வர்த்தகப் பாடப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

### விஞ்ஞானப் பிரிவு

எஸ்.பிறிந்தா-வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, எம்.மிதுரிகா -வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, எஸ். சுமிதா-வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, என். சரண்யா -வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, என்.மாதங்கி - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, எஸ். இளங்கீரன்-ஹாட்லிக்கல்லூரி- பி.திலக்ஷி -வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கே.பிரசாந்தீன்- யாழ். இந்துக்கல்லூரி, என்.தர்ஜிகா-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வை.விதுசன்-யாழ். இந்துக்கல்லூரி, வி.பிரசாந்தன் - யாழ்.இந்துக்கல்லூரி, எஸ். சோபிதா - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, பி.துவாரகன் - ஹாட்லிக் கல்லூரி, எஸ். கலினா - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ச.தீபிகா - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, எஸ்.சோபிகா - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, பி.சாயினி -வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,எஸ். யசோத கிருஸ்ணா- சென். ஜோன்ஸ் கல்லூரி, ஜீ.லக்ஷ்மி- யாழ். இந்து மகளிர் கல்லூரி, ஆர்.சாம்பவி-வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, ஜெ.அன்ரேன் வசந்தன்-சென்ஜோன்ஸ் கல்லூரி - என்.குலதீபன்- யாழ். இந்துக்கல்லூரி, எ.சியாமளா -வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,எம்.சாந்தமரீன் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, ஆர்.அனுசிதா- வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, ஜி.சாருண்யா-வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கு.கமலதாசன்-யாழ்.இந்துக் கல்லூரி, கு.யதுஷன்- யாழ். இந்துக் கல்லூ ரி, எம்.துவாரகன் - யாழ். இந்துக் கல்லூரி, ஜ.ஜெனோசா - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

### கணிதப் பிரிவு

பி.கபிலன்-ஹாட்லிக்கல்லூரி, ரி.அனோஜன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பி.சாகித்தியன்-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, டி.மிக்கேய்பௌல்- சென். பற்றிக்ஸ் கல்லூரி, எம். விதுர்சா- வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, எஸ். கேதிரி-சென். ஜோன்ஸ் கல்லூரி, எ.மகிளன்- யாழ். இந்துக்கல்லூரி, எஸ்.சர்மி- வேம்படி உயர்தரப்பாடசாலை, எஸ்.சுவேதரன் - கொக்குவில் இந்துக்கல்லூரி, ஜே.ஜனார்த்தனசர்மா - யாழ்.இந்துக்கல்லூரி, ம.கஜீபன் - யாழ்.இந்துக் கல்லூரி, எஸ்.நிஷாந்தன் - ஹாட்லிக் கல்லூரி, எம்.அர்ச்சயன்- சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கே.குணபாலன் - யாழ். இந்துக் கல்லூரி, வை.யனோர்ஸ் - சென். ஜோன்ஸ் கல்லூரி, கே.டசின்திரா கிருஸ்ணா-சென்ஜோன்ஸ் கல்லூரி, ஜெ.பிரசாத் - விக்னேஸ்வராக் கல்லூரி, எஸ்.விதுசன்- சென்ஜோன்ஸ் கல்லூரி, எஸ். கிருஷானந் - ஹாட்லிக் கல்லூரி, பி.தாஸ் மோகன் - ஹாட்லிக் கல்லூரி, கே.மயூரன் - கொக்குவில் இந்துக்கல்லூரி. (ம)

(தொ டரும்)

# மாறிவருகின்றது இன்றைய தலைமைத்துவம்

இன்று தலைமைத்துவம் என்பது எல்லா இடங்களிலும் சரியாக காணப்படுகின்றது என்று கூறிவிட முடியாது.

சரியான வழிநடத்தலில் சரியாக ஒரு நிறுவனத்தை கொண்டு செல்பவர் தான் ஒரு சரியான தலைவர். ஆனால் இன்று சரியான தலைமைத்துவம் காணப்படுகிறதா என்று ஆய்வை மேற்கொண்டால் 100 இற்கு 50 வீதம் தான் சரியான தலைமையின் கீழ் நடைபெறுகின்றது. ஏனையவற்றில் ஏதாவது குறைகள் காணப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

ஒரு நிறுவனத்தின், பாடசாலைகளில் உள்ள கழகங்கள் அவ்வாறு எந்த ஓர் இடத்திலும் இருக்கும் தலைமை சிறந்த குணநலன், செயற்றிறன்கள் மிக்கதாக இருக்க வேண்டும். தனக்குக் கீழுள்ள குழுவை அல்லது அங்கத்தவர்களைச் சரியாக வழி நடத்திச் செல்லக் கூடியதாக இருக்க வேண்டும். ஒரு நிறுவனம் அல்லது கழகங்களிலுள்ள பொறுப்புக்கள். செயற்பாடுகளில் அனைவரும் ஈடுபட கூடியவாறு அதனை செயற்படுத்த வேண்டும். தான் முன்மாதிரியாக செயற்பட்டு ஏனையோரையும் அதேபோல் செயற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

அதாவது குறுகிய சிந்தனை அற்று எதிர்காலம் பற்றி தூரநோக்கம் கொண்ட செயற்பாடுகளை கொண்டதாகவும் அதனை வெற்றிகரமாக செயற்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

முகம் அறிந்து நடப்பவர் சிலர் என்று கூறுவர். தமக்கு தெரிந்தவர்களை ஒரு மாதிரியும் மற்றவர்களை வேறு மாதிரியும் செயற்படுவதாக அன்றி எல்லோரிடமும் பாரபட்சம் காட்டாமல் நடக்க வேண்டும்.

நான்தான் தலைவர், நான் கூறுவது தான் சரி என்று இல்லாது மற்றவர்களுடைய கருத்துக்களுக்கும் மதிப்பளிப்பவராக இருக்க வேண்டும். ஏதாவது ஒரு விடயத்தில் முடிவெடுக்க வேண்டுமாயின் ஏனையோருடன் கதைத்து அவர்கள் சொல்லும் அறிவுரைகளை கேட்டு யாரையும் பாதிக்காதவாறு சமநிலை பேணி முடிவெடுக்க வேண்டும்.

ஒரு முடிவு எடுப்பதாயின் அது பரந்த ஒரு நோக்கமுடையதாக இருக்க வேண்டும். மக்களுக்கு அது நல்ல விதமாக போய்ச் சேரக்கூடிய விதத்தில் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். தம் குழுவுடன் இணைந்து வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பவராக இருக்க வேண்டும். தான் எடுத்த தீர்மானங்களை ஏனைய குழு உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து அவர்கள் கருத்துக்களை கேட்பவராக இருக்க வேண்டும்.

ஒரு தலைவர் வரும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றி சிந்திக்க வேண்டும். யாரும் பிரச்சினை என்று சொன்னவுடன் அதனை கேட்டு உடனே முடிவெடுத்தல் கூடாது. அது உண்மையில் பாதிப்பை ஏற்படுத்தும் விடயமா? அது ஏனையோரை பாதிக்குமா?

தனிப்பட்ட ஒருவரின் பிரச்சினையை கருத்தில் கொண்டு அதனை செயற்படுத்தக் கூடாது. அலசி ஆராய்ந்து சரியான முடிவு எடுத்து இடையூறுகள் ஏற்படாதவாறு செயற்படுத்த வேண்டும்.

ஒருவர் பிரச்சினை என்று கூறியவுடன் அதனை ஏற்க கூடாது. அதன் தன்மை பற்றி சரியாக புரிந்து முடிவுகள் எடுக்க வேண்டும். ஏற்படும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது அதனை எவ்வாறு சுமூகமாக முடிப்பது என்று சிந்தித்து செயற்பட வேண்டும். ஒரு சரியான நடுநிலைமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும். எடுக்கும் தீர்மானங்கள் ஏனைய அங்கத்தவர்களை பாதிக்காதவாறு இருக்க வேண்டும்.

தலைமையை ஒருவர் நான் தான் தலைவர் என்ற அகங்காரம் கொள்ளாது தன் நிறுவனத்தில் ஏற்படும் பிழைகள் தவறுகளைச் சொன்னால் அதனை கேட்டு தன் செயற்பாடுகளை மாற்றிக் கொள்பவராக இருக்க வேண்டும். சாதாரணமாக ஏனையோருடன் நெருங்கிப் பேசிப்பழகக் கூடியவர்களாக இருக்க வேண்டும். எந்தப் பிரச்சினை வந்தாலும் அதனை எதிர்கொண்டு அதனை தீர்க்கும் திறன் உடையவராக இருக்கவேண்டும். சுறுசுறுப்பாக உற்சாகமாகச் செயற்படுபவராக இருக்க வேண்டும்.

தலைமையைப் பார்த்து இவர் தான் தலைவர் இவரை போல் அனைவரும் முன்னுதாரணமாக நடக்க வேண்டும் என்று கூறுமளவு தலைவரும் இருக்க வேண்டும். தலைமையைத் தெரிவு செய்யும் போதும் இவ்வாறான விடயங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும். பெயரளவில் இவருக்கு தலைமைப் பதவி கொடுத்தால் தான் எமக்கு சிறந்தது என்று சிந்தித்து தலைமை பதவிகளை வாங்க கூடாது.

யார் இதனை நிர்வகிப்பார். யார் இதனை சரியாக வழிநடத்துவார். மற்றவர்களின் நிலையை புரிந்து யார் சமநிலையான முடிவெடுப்பார். பிரச்சினைகள் ஏற்படும் போது யார் சுமுகமாகத் தீர்க்க முயற்சி செய்வார் என்று சிந்திக்க வேண்டும்.


ஆனால் சில இடங்களில் பதவி என்பது புகழுக்காக வழங்கப்படுகிறது. கிடைத்த பின்பு தம் சுயதேவைகளுக்காக பதவிகளை பயன்படுத்துகின்றனர்.

ஒரு நிறுவனம் அல்லது கழகத்தின் உயிர்நாடியே அதன் நிர்வாகம். அதனை புரிந்து அனைவரும் செயற்பட்டால் ஒரு நல்ல தலைமையின் கீழ், நிர்வாகத்தின் கீழ் நடுநிலைமையை பேணமுடியும். ✱



## அறைகள் வாடகைக்கு உண்டு

பரமேஸ்வராச் சந்தி, பலாலி றோட்டில் பல்கலைக் கழக மாணவிகள்/உத்தியோகத்தர்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கு அறைகள் சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. பெண்களுக்கு மட்டும் சாப்பாடு ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் தொடர்பு: 021 222 7069


## மரண அறிவித்தல்



# வேலுப்பிள்ளை பொன்னம்பலம்

*(உரிமையாளர்: பாக்கியரத்தினம் ஹாட்வெயர் ஸ்ரோஸ்- சங்கானை;*
*தரன் ரேடஸ்- ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்;*
JET STEEL (PVT) LTD, OLD MOOR STREET - COLOMBO- 12)

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னம்பலம் நேற்று (02.11.2011) புதன் கிழமை காலமானார்.

அவரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (05.11.2011) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுக்கோட்டை வடக்கு,
சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மதிலில் இருந்து வீழ்ந்த மாணவனுக்கு கால் முறிந்தது

தென்மராட்சி, நவ.3

பாடசாலை மதிலில் மீது ஏறிய மாணவன் தவறி வீழ்ந்ததில் கால் முறிந்தது.

இந்தச் சம்பவம் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த ராஜ்குமார் ரஞ்சித் (வயது 17) என்னும் மாணவன் கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ம-207)

## காயமடைந்த கணவனும் மனைவியும் வைத்தியசாலையில்

தென்மராட்சி, நவ.3

காணி வேலி அடைத்துக்கொண்டிருந்த கணவனும் மனைவியும் அல வாங்கு தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தனர். இந்தச் சமபவம் மிருசுவில் வடக்கில் இடம்பெற்றது.

பருத்தித்துறை கிராமக் கோட்டடியைச் சேர்ந்த தியாகராசா சிவநடேசன் (வயது 46), இவரது மனைவியான சிவநடேசன் செல்லம்மா (வயது 42) ஆகியோரே காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காணி எல்லைத் தகராறே தாக்குதலுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

## விபத்தில் காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், நவ.3

வாகன விபத்தில் படு காயமடைந்து சிகிச்சைக்கென யாழ். போதனா வைத் திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிமாது சிகிச்சை பயனின்றி மரணமானார்.

இந்த விபத்துச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை சுன்னாகத்தில் இடம்பெற்றது. சம்ப வத்தில் மயிலங்காடு வடக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த கிருஷ்ண பிள்ளை சரஸ்வதி (வயது-80) என்பவரே மரணமானார்.

படுகாயமடைந்த இவர் உடனடியாக தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் மரணமானார்.

சுன்னாகம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மரணவிசாரணை மேற்கொண் டார். உடற்கூற்றுப் பரிசோதையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4)


## HND in Pharmacy (2 Years)

Job guaranteed Government Recognized Pharmacy Course. Study from the Leaders of Medical Education.

Knowledge Universe
Professional Education by Graduate Professionals
No 75, Temple Road, Jaffna.
www.kugroup.info
K.U-Education -"Practical and Result Oriented." Tel:0776458253


## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/ சென் மேரிஸ் வித்தியாலயம் (O.L.R)
2011 இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த மாணவச் செல்வங்களை
வாழ்த்துகிறோம்.

**க.சிந்துஜா - 163**

இவருடன் எமது பாடசாலையில் தரம் 3 இலிருந்து தற்காலிகமாகக் கல்வி பயின்று வன்னி மாவட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவியான



**நி. ஷறில் ஒளியா - 162**


100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற
ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகிறோம்.

| | |
|---|---|
| 1. ரொ. நிரான் போல் - 136 | 2. உ.யதுஷன் -135 |
| 3. வி.சுபாங்கினி - 126 | 4. தி.ஜிரியன் -118 |
| 5. அ.சனிஸ்ரன் - 117 | 6.ஜோ. யானுஷா - 117 |
| 7.நி.நித்ர்சியா - 110 | 8. கி.விதுஷா - 107 |
| 9.ம.மதுஷா -102 | 10.க.நிதுசாந் -100 |

4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ சென் மேரிஸ் வித்தியாலயம். (O.L.R)

## ஆறாம் திங்கள் அஞ்சலி மாலை



அமரர் பிரம்மஸ்ரீ
யோகீஸ்வர
பிரபாகரேஸ்வரக்
குருக்கள்

இறைபணியாக
*11.02.1966*

இறைபதமாக
*08.05.2011*

*"வேதமோ ஓதி நன்காய் விண்ணுற வேள்வி காத்துச்*
*சோதியாய்த் திங்கள் ஆறு சோர்ந்தனம் ஐயநாமும்*
*ஏதுநாம் உம்மையன்றி எண்ணிடும் பொருளி திங்கு*
*ஆகுமோ...? இல்லையைய்யா அமருவாய் இறையுள் நன்றாய்"*
*ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...*

அத்தியடி பிள்ளையார் கோயில்,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவினைச்
சுமந்து நிற்கும்
யோகீஸ்வரக் குருக்கள்
குடும்பத்தினர்.

(9888)

## மரண அறிவித்தல்



### திருமதி நாகலிங்கம் பூரணம்

5 வட்டாரம் சுருவிலை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி நாகலிங்கம் பூரணம் 28.10.2011 அன்று காலமானர். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.10.2011 அவரின் இல்லத்தில் நடைபெற்று சுருவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5 ஆம் வட்டாரம், சுருவில்.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### பொன்னையா குணசிங்கம்



உடுவிலைப் பிறப்பிடமாகவும் நவாலியை வதிவிடமாகவும் தற்போது ஜேர்மனியில் வசித்தவருமாகிய பொன்னையா குணசிங்கம் 19.10.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் நவாலி சிவசுப்பிரமணியம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராணி யின் பாசமிகு கணவரும் நடராசா, துரைச்சாமி, இராசலிங்கம், மகேஸ்வரி, நேசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் குணாநந்த் (லண்டன்), குணாளினி (ஜேர்மனி), ஜேமாநந்த் (தென் ஆபிரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராணி, இராஜேந்திரன், மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் லதா, அம்பிகா, கலா, சுகுமார், கண்ணன், ரஜீதா, தினேஷ்குமார், சங்கீதா, பிரகாசினி, பாஸ்கரன், சுபாஜினி, ஜசிந்தினி ஆகியோரின் மாமனும் சகானா, ஜசாக் (சச்சின்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.11.2011) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொத்துகட்டி றோட்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்

தகவல்:
மகேஸ்வரி (மாமி - நவாலி)
மகேந்திரன் (மைத்துனர்)
யோகராணி

# உறவுகளை இழந்த தமிழ் மாணவிகளுக்கு நல்வாழ்வளிக்கும் உரும்பிராய் கருணை இல்லம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

பல்வேறு வகையிலும் பெற்றோர் மற்றும் உறவுகளை இழந்த தமிழ் மாணவிகளின் நல்வாழ்வுக்காகவும், சுபீட்சமான எதிர்காலத்துக்காவும் கல்விக்கு ஊடாக அவர்களுக்கு சுதந்திரமான வாழ்க்கைக்கு வழிப்படுத்தவும் உரும்பிராயில் ஓங்கி உயர்ந்து நிற்கிறது ''கருணை இல்லம்''. உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பரோபகாரி பொன் தெய்வேந்திரத்தின் தீர்க்க தரிசனமான சிந்தனையால் உருவாகியது.



2002 ஆம் ஆண்டு உரும்பிராயில் ஆரம்பிக்கப்பட்ட கருணை இல்லத்தில் 50 மாணவிகள் தங்கியிருந்து சைவப் பராம்பரியம்மிக்க ஆரோக்கியமான சூழலில் கல்வியைத் தொடர்கின்றனர். இங்கு அனுமதிக்கப்படும் மாணவிகளின் ஆரம்ப வயது ஐந்து. அவர்கள் இல்லத்தை விட்டு வெளியேற வேண்டிய வயது 18. ஆனால் க.பொ. த. உயர்தரம் கற்பவர்கள் படிப்பு முடியும் வரை தங்கியிருக்கலாம். சகல வசதிகளும் எதுவிதமான அறவீடுகளும் இன்றி இலவசமாக வழங்கப்படுகின்றன.

கருணை இல்லம் யாழ்ப்பாணம்-பலாலி நெடுஞ்சாலையில் உரும்பிராய் சந்தியிலிருந்து வடக்கு நோக்கி 200 மீற்றர் தூரத்தில் ஸ்ரீகாமாட்சி அம்மன் ஆலயத்துக்கு முன்பாக பிரதான வீதிக்குக் கிழக்குப்பக்கத்தில் வீதியோரத்தில் உள்ளது. முன்பக்கத்தில் விசாலமான முற்றத்தைக் கொண்ட நாற்சார் வீடு, அதனோடு இணைந்து 15இற்கு மேற்பட்ட அறைகளைக் கொண்ட புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாணவிகள் தங்குவதற்கான விசாலமான விடுதி, பயன் தரும் மரங்கள் மற்றும் பூந்தோட்டம், வாழைத்தோட்டம் என்பனவற்றை உள்ளடக்கிய பசுமையான சூழல், விசாலமான வளவு, அமைதியான அமைவிடம்.

கருணை இல்லம் தொடர்பான சிந்தனையை செயல்வடிவம் செய்வதற்கு பொன் தெய்வேந்திரம் தனது சொந்தச் செலவில் நாற்சதுர வீட்டைக் கொள்வனவு செய்து அதற்கான அமைப்பு விதிகளைச் உருவாக்கி பதிவுசெய்து அதன் மேற்பார்வை நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் 'சேர்மன்' என்ற பதவி நிலையில் உரும்பிராயைச் சேர்ந்த ஆசிரியமணி பஞ்சாட்சரத்திடம் ஒப்படைத் தார்.

அதன் பின் அவர் லண்டனுக்குச் சென்று அதற்குரிய மேலதிக ஏற்பாடுகளைச் செய்வதற்கு புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் லண்டனில் அதற்கான கட்டமைப்பை உருவாக்கினார். அதற்கூடாக மேலதிக நிதிவளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

ஆசிரியமணி பஞ்சாட்சரம் கருணை இல்லத்தில் ''சேர்மன்'' என்ற பதிவு நிலையில் தனது உதவியாக நான்கு பிரமுகர்களை இணைத்து கருணை இல்லத்தின் கருமப் பொறுப்புக்களை உரிய முறையில் உயர் நிலையில் பேணி நடத்தினார். ஆசிரியமணியின் மறைவை அடுத்து 5 பேர் கொண்ட நிர்வாகக் குழு அதன் பணி முன்னெடுப்புக்களை தற்பொழுது மேற்கொண்டு வருகின்றது. நிர்வாகக் குழுவின் தலைவராக ஏ.ஈஸ்வரநாதன் (உரும்பிராய் இந்துக்கல்லூரியின் அதிபர்), செயலாளர்-திருமதி தி.மதுரநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை), பொருளாளர் எஸ். சிவராம், குழு உறுப்பினர்களாக திருமதி வி.புனிதவதி, திருமதி ந.உமா ஆகியோரும் உரியமுறையில் பணிபுரிகின்றனர்.

கருணை இல்லத்தில் தற்பொழுது 50 மாணவர்கள் தங்கியிருக்கின்றனர். இவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்திலும் உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் மேற்கொண்டு வருகின்றனர்.


க.பொ.த.உயர்தரத்தில் 4 மாணவிகளும் க.பொ.த. சாதாரணதரத்தில் 12 மாணவிகளும் ஏனைய ஆரம்ப, இடைநிலை வகுப்புக்களில் ஏனைய மாணவிகளும் கல்வி கற்கின்றனர். நிலையத்தில் நிர்வாக உதவியாளராக ஓய்வு பெற்ற அரச ஊழியர் கே.சிவசுப்பிரமணியம் முழுநேர ஊழியராக நிலையத்தில் தங்கியிருந்து கடமை புரிகின்றார். அவருக்கான தங்குமிடம் நிலையத்தின் வாசலில் அமைக்கப்பட்டுள்ளது. மாணவிகளின் விடுதிக்கு மேற்பார்வையாளராக ''மேற்ரன்'' பெண்மணி பிள்ளைகளுடன் தங்கியிருந்து முழுநேர ஊழியராகக் கடமைபுரிவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சமையல்காரர்கள் (பெண்கள்) மற்றும் உதவியாளர்களும்

**ஞான ஆதவன்**

கடமையில் உள்ளனர். நிலையத்தில் தங்கியிருக்கும் மாணவிகளுடன் கலந்துரையாடும் போது அமைதியான ஆரோக்கியமான சூழலில் கல்விச் செயற்பாடுகளை தொடர்வதாகவும், பாடசாலை கற்றல் செயற்பாடுக்கு மேலதிகமாகத் தனிப்பட்ட வகுப்புக்களும் பாடரீதியில் பிற்பகல் வேளையிலும் விடுமுறை நாள்களிலும் நடைபெறுவதாகவும், தையல் பயிற்சி, கணினிப்பயிற்சி மற்றும் உள்ளக விளையாட்டு வசதி அத்துடன் பொழுது போக்காக குறிப்பிட்டளவு நேரம் தொலைக் காட்சியைப் பார்ப்பதற்கும் வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக அந்துப் பெண்மணி கூறினார்.

*(தொடரும்)*

# சிரார்த்த தின நிகழ்வு




**அமரர்**
**கணபதிப்பிள்ளை கார்த்திகேசு**

*காசினியில்:*
*03.08.1928*
*காங்கேயன் திருவடியில்:*
*13.11.2010*

**திருவாட்டி**
**கார்த்திகேசு சின்னமணி**

*காசினியில்:*
*05.02.1933*
*காங்கேயன் திருவடியில்:*
*06.12.2003*

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'

என்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்க தாமும் வாழ்ந்து எங்களையும்
அவ்வாறே வாழ வைத்த எம் இனிய தெய்வங்களின் நினைவலைகள்

*கருத்தொருமித்த தம்பதிகளாக வாழ்ந்து எம் எழுவரையும்*
*கல்விக் கடலில் மிதக்கவிட்டு கரைசேர்ந்த எம் அருமைப்*
*பெற்றோரை எப்போதும் மறவோம் உங்கள் பாதம் பணிந்து*
*பெற்றோர் உங்கள் பெறுமதியை உணர்ந்து வாழ்வோம் என்றுமே*

இன்று (03.11.2011) வியாழக்கிழமை நடைபெறும் எமது தந்தையார் க.கார்த்திகேசு அவர்களின் முதலாம் ஆண்டு சிரார்த்த கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செல்விவளவு, இமையாணன், உடுப்பிட்டி. 021 320 8560, 0770366017

குடும்பத்தினர்.

செயலிழந்துள்ள நிறுவனங்களைப் பொறுப்பேற்கும்

# அரசின் புதிய சட்ட மூலத்தை எதிர்க்க எதிர்க்கட்சிகள் தீர்மானம்

கொழும்பு,நவ.3

நாடாளுமன்றில் அடுத்த வாரம் சமர்ப்பிக்க அரசு தீர்மானித்திருக்கும் நட்டத்தில் இயங்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களை அரசு பொறுப்பேற்றல் தொடர்பான சட்டமூலத்தை எதிர்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

நீண்டகாலமாக நட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் அடையாளம் காணப்பட்ட சில அரச மற்றும் தனியார் நிறுவனங்களை அரசு பொறுப்பேற்கத் தீர்மானித்துள்ளது என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பான சட்டமூலத்தை எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க, நேற்றுமுன்தினம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடிய கட்சித் தலைவர்கள் மாநாட்டின்போது தீர்மானிக்கப்பட்டது என்று அவர் கூறினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் மாநாட்டில் ஜே.வி.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கலந்துகொள்ளவில்லை. எனினும், ஐக்கிய தேசியக் கட்சி கலந்து கொண்ட அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக அந்தக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கலந்துகொண்டார்.

இந்தநிலையில், நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்தச்சட்டமூலத்திற்கு கட்சித் தலைவர்கள் மாநாட்டின்போது எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, இந்தச்சட்டமூலத்திற்கு நாடாளுமன்றிலும் எதிர்ப்பு தெரிவிக்க இந்தக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது எனவும் எதிர்க்கட்சிப் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசு கொண்டுவரப்படவுள்ள இந்தச் சட்டமூலத்தின் பின்னணியில் அரசின் மோசடி எண்ணம்காணப்படுவதால் அதனை தமது கட்சி எதிர்க்கும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சட்டமூலத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கும் என்று அக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார். நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை அரசு பொறுப்பேற்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது.

எனினும், தனியார் நிறுவனங்களை ஏன் பொறுப்பேற்க வேண்டும் என்ற காரணத்தை அரசு கட்சித் தலைவர்கள் மாநாட்டில் கூற மறுத்ததாலும், அதன் பின்னணியில் அரசின் மோசடி செயற்பாடு இருக்கலாம் என்ற சந்தேகத்தினாலும் இச்சட்டமூலத்தை எதிர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-சி)



கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு முதல்வராகத் தெரிவான ஏ.ஜே.எம். முஸம்மில் நேற்றுமுன்தினம் தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# தலைமைத்துவம் எப்போதும் சர்வதேசத்துக்கு அடிபணியாது

## அமைச்சர் விமல் வீரவன்ச கூறுகிறார்

கொழும்பு,நவ.3

சில தமிழ் அரசியல்வாதிகள் அமெரிக்காவுக்குச் சென்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான்-கீ-மூனைச் சந்தித்தபோதும், யுத்தம் நடைபெற்றபோது, சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியாத தலைமைத்துவம், யுத்தம் முடிவடைந்த பின்னர், எந்தக் காரணத்தைக் கொண்டும் சர்வதேசத்திற்கு அடிபணியாது என்று அமைச்சர் விமல் வீரவன் தெரிவித்துள்ளார். அனுராதபுரம் பதவிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரித்துள்ளார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யுத்தம் நடைபெற்றபோது, பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கு எதிராக பல்வேறு சர்வதேச அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதுடன், அந்த அழுத்தங்கள் இன்னும் முடிவுக்கு வரவில்லை. பிரிவினைவாதத்திற்காகக் குரல் கொடுக்கும் சில தமிழ் அரசியல்வாதிகள் அமெரிக்காவுக்குச் சென்று, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான்-கீ-மூனைச் சந்தித்து, இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரியுள்ளனர் - என்றார்.(ச)

# கொலைச் சம்பவ சூத்திரதாரியின் வீட்டுக்குத் தீ! கரந்தெனியவில் பதற்றம்

கொழும்பு,நவ.3

காலி, கரந்தெனியவில் வைத்தியரொருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியின் வீட்டையும் அவர் நடத்தி வந்த மருத்துவ நிலையத்தையும் முற்றுகையிட்ட பிரதேசவாசிகள் அவை இரண்டையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

வைத்தியரின் படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்து பிரதேசவாசிகள் அலைபோல் திரண்டு வீதியில் இறங்கிப் போராட, கரந்தெனியவில் நேற்றுமுன்தினம் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

மக்கள் வெள்ளம் வீதியில் இறங்க அங்கு போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

இதனால் பிரதேசத்தில் இயல்பு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டு கரந்தெனிய நகரம் அல்லோல கல்லோலப்பட்டது.

விடயமறிந்து படையெடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் பதற்றத்தைக் கட்டுப்படுத்த பல்வேறு யுத்திகளைக் கையாண்டனர். எனினும், பயன் கிட்டவில்லை.

இதனையடுத்து, பிரதேசத்தின் பாதுகாப்புக் கருதி விசேட அதிரடிப் படையினர் அங்கு குவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கரந்தெனிய அரச வைத்தியசாலையில் பணிபுரிந்த வைத்தியர் பிரியங்கபிரசாத் ஜயசிங்கவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின்பேரில் ஒருவர், கடந்த செவ்வாய்க்கிழமை விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் வைத்திய இரசாயனக்கூட உரிமையாளர் எனத் தெரியவந்துள்ளது.

தொழில் ரீதியில் ஏற்பட்ட பிணக்கு காரணமாக இந்த நபர், ஆள்களைக்கூலிக்கு அமர்த்தி வைத்தியரைக் கொலை செய்துள்ளார் எனப் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட நடவடிக்கைகளிலிருந்து தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-சி)

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி
அவர்களால் வடிவமைக்கப்பட்ட

## முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா

எளியமுறை காயகல்ப பயிற்சி, எளியமுறை உடற்பயிற்சி, எளியமுறை தியானப் பயிற்சி மேலும் பல பயிற்சிகள். இந்தப் பயிற்சிகளின் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள் பலவாகும்.

வழங்குபவர்: மனவளக்கலை பேராசிரியர் ஆர்.ஜெயபால் (B.Sc) (தமிழ்நாடு, இந்தியா)

இடம் : மகேஸ்வரன் மணி மண்டபம், வடக்கு வீதி, நல்லூர்.
காலம் : 05.11.2011 தொடக்கம் 11.11.2011 வரை

இடம் : இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோயில் மணிமண்டபம்
காலம் : 12.11.2011 தொடக்கம் 18.11.2011 வரை
பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரை

★ 14 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் பங்குபற்றலாம்.
★ 05.11.2011 சனிக்கிழமை இலவச அறிமுக உரை நடைபெறும்.
★ தொடர்ந்து 5 நாள்களும் பயிற்சிகள் நடைபெறும்.
★ பயிற்சிக்கு கட்டணம் உண்டு.
★ முற்பதிவுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அகத்தாய்வு ஒன்று பயிற்சிகள் 12.11.2011 - 13.11.2011 சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 8.30 மணி முதல் 1.30 மணி வரையும் 14.11.2011 - 18.11.2011 மாலை 4 -5 மணி வரை பரராஜசேகரப் பிள்ளையார் மணி மண்டபத்தில் நடைபெறும். பயிற்சிக்குரிய கட்டணம் உண்டு.

பயிற்சிகளை எடுத்தவர்களுக்கான மீள் பயிற்சிகள் கட்டணமின்றி இலவசமாக 05.11.2011, 06.11.2011 ஆகிய தினங்களில் மாலை 4 மணி முதல் 6.30 மணிவரை இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் மணி மண்டபத்தில் இடம்பெறும். மன்றத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளைக் கொண்டுவரவும்.

தொடர்பு: இலங்கை மனவளக்கலை மன்றம்
இல.16, லில்லி அவன்யூ, வெள்ளவத்தை, கொழும்பு -06.
0115658412, 0112580711.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் நடராஜா கவிராஜன்

திதி - 3.11.2011

தோற்றம் 20.01.1962
மறைவு 16.11.2009



மறைந்ததோ ஈராண்டுகள்
மறக்கவும் முடியுமா?
ஆறாத்துயரில் எமை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டு
ஆண்டுகள் இரண்டு ஆனதுவே
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம் உங்கள்
முகத்தை இனி எப்போ காண்போம் ????

இல.04,
புது வீதி அத்தியடி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் வாடும் :
குடும்பத்தினர்,
மச்சாம்மார்.

## ஈரவிழிகளுடன் ஈராண்டில்

மலர்வு
25 ★ 08 ★ 1958



உதிர்வு
25 ★ 10 ★ 2009

அமரர் பரசுராமர் இராஜபுவனேந்திரன்
(ICRC சாரதி)

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்றழைத்து மகிழ நீங்கள் இல்லையே
நீங்கள் பூத்திருக்கும் எம் உள்ளத்தில்
உங்கள் நினைவுகள் என்றுமே.....

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்.

நெடும்புலம்,
சுன்னாகம். (9987)

# தமிழினத்தைக் காக்க கோவை மாநாட்டுக்கு அணிதிரளுமாறு மணியரசன் அழைப்பு



எமது இன மக்களை ஈழத்திலும், இந்தியாவில் தூக்குக் கொட்டடியில் உள்ள தமிழர்களையும் பாதுகாக்க அனைத்து தமிழ் மக்களையும் கோவை ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் ஒன்றுதிரளுமாறு தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி தலைவர் பெ.மணியரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழர்களை கட்சி சார்பற்ற முறையில் இன அடிப்படையில் ஒருங்கிணைக்கும் பெரும் முயற்சியாக, ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாடு கோவை வ.உ.சி. பூங்காத் திடலில் எதிர்வரும் 6ஆம் திகதி மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில், பல்வேறு கட்சிகளும், தமிழ்த்தேசிய அமைப்புகளும், தமிழின உரிமை அமைப்புகளும் பங்கேற்கின்றன.

2008, 2009 ஆண்டுகளில் ஒன்றரை இலட்சம் ஈழத்தமிழர்களை இலங்கை அரசு, இனப்படுகொலை செய்தது. இனப்படுகொலைக் குற்றவாளிகளாகவும், போர்க்குற்றவாளிகளாகவும் உள்ள கும்பலை த்ளைப்படுத்தி, பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்; போர் அழிவுக்குப் பிந்தைய காலத்தில், நடைபெற வேண்டிய துயர் துடைப்புப் பணிகள் இலங்கை அரசால் நடத்தப்படவில்லை.

ஐ.நா. மற்றும் பன்னாட்டுக் கண் காணிப்பின் கீழ் ஈழத்தில், துயர் துடைப்புப் பணிகளை செயற்படுத்தி எஞ்சியுள்ள தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டும். ராஜீவ் கொலை வழக்கில் பொய்யாகக் குற்றம்சாட்டப்பட்டு, மரண தண்டனை வழங்கப்பட்ட அப்பாவித் தமிழர்களான பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரை தூக்கிலிடத் துடிக்கும் இந்திய அரசின் தமிழினப் பகை முயற்சியை முறியடித்து, அந்த மூவரையும் காப்பாற்ற வேண்டும்.

மேற்கண்ட மூன்று கோரிக்கைகளை முன்வைத்து கோவை மாநாடு நடைபெறுகிறது. கைக்கு எட்டிய தொலைவில் இருந்தும் நம் இனம் இந்திய ஏகாதிபத்தியத்தின் துணையோடு இலங்கை அரசால், அழிக்கப்பட்டதை தடுக்க முடியவில்லையே என்ற குற்ற உணர்ச்சியும், ஆறாத காயமும் தமிழர்கள் நெஞ்சில் அப்படியே உள்ளன.

இப்பொழுது முழுவீச்சில் நாம் செயற்பட்டு, நம் இன மக்களை ஈழத்திலும், தூக்குக் கொட்டடியில் உள்ள தமிழர்களை இங்கும் பாதுகாக்க வேண்டிய கட்டாயக் கடமை நமக்கு உள்ளது. மரண தண்டனையை சட்டப் புத்தகத்திலிருந்து முற்றாக நீக்க வேண்டும் என்ற மனித உரிமைக் கடமையும் நம் முன் உள்ளது.

எனவே,தமிழின உணர்வாளர்கள், மனித உரிமையில் அக்கறையுள்ளோர் அனைவரும் கோவையில் பெருந்திரளாகக் கூட வேண்டும். எமது கோரிக்கைகளில் உள்ள நியாயம் அந்தக் கோரிக்கையை ஏந்தி நிற்கும் மக்கள் கூட்டத்தின் எண்ணிக்கைக்கு ஏற்பவே மதிக்கப்படும். எனவே, மாநாட்டுக்கு வாருங்கள் தமிழர்களே! இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## மீண்டும் நேரில் ஆஜராக வேண்டுமா?

### ஜெயலலிதா மேன்முறையீடு

சென்னை, நவ.3

சொத்துக் குவிப்பு வழக்கில் எதிர்வரும் 8 ஆம் திகதி மீண்டும் நேரில் ஆஜராக வேண்டும் என்று பெங்களூர் நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவுக்கு எதிராக தமிழக முதல்வர் ஜெயலலிதா உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

முன்னதாக சொத்துக்குவிப்பு வழக்கு தொடர்பாக பெங்களூர் நீதிமன்றத்தில் கடந்த 20 ஆம், 21 ஆம் திகதிகளில் ஜெயலலிதா நேரில் ஆஜராக வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அந்த உத்தரவுக்கேற்ப அவரும் பெங்களூர் நீதிமன்றத்தில் ஆஜராகி நீதிபதியின் கேள்விகளுக்கு பதிலளித்தார். எனினும் இன்னும் பல கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியிருப்பதால் மீண்டும் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆஜராகுமாறு ஜெயலலிதாவை பெங்களூர் நீதிமன்றம் கேட்டுக் கொண்டது. (வ)

# குழந்தைகள் மருத்துவமனையாக அண்ணா நூற்றாண்டு நூலகம்

### தமிழக அரசு அறிவிப்பு




சென்னை, நவ.3

சென்னை அண்ணாதுரை நூற்றாண்டு நூலகம், குழந்தைகள் மருத்துவமனையாக மாற்றப்பட உள்ளது. கோட்டூர்புரத்தில் உள்ள இந்த நூலகம் கல்லூரி வீதி, டி.பி.ஐ., வளாகத்திற்கு மாற்றப்பட உள்ளது என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

2011-2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சென்னை டி.பி.ஐ. வளாகத்தில் ஒருங்கிணைந்த அறிவுசார் பூங்கா அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையிலான முடிவுகள் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

இதனடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்து இயக்கங்கள், பயிற்சிமையம், கூட்டரங்குகள், பள்ளிக்குழந்தைகளுக்கான அறிவுசார் பட்டறைகள், விளையாட்டு வளாகம், கல்வி தொலைக்காட்சி படப்பதிவு நிலையம், இங்குபேஷன் சென்டர் மற்றும் நவீன மைய நூலகம் ஆகியவை இந்த ஒருங்கிணைந்த அறிவுசார் பூங்கா வளாகத்தில் அமையப் பெறும்.

ஒருங்கிணைந்த அறிவுசார் பூங்கா அமைய விருக்கும் டி.பி.ஐ. வளாகம், கன்னிமாரா மைய நூலகம் மற்றும் தேசிய வைப்பு நூலகத்திற்கு மிக அருகில் உள்ளதால் நவீன மைய நூலகத்தினை அறிவுசார் பூங்காவிலேயே அமைப்பது பொருத் தமாகவும், சிறந்ததாகவும் அமையும் என்று அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

எனவே, சென்னை கோட்டூர்புரத்தில் அமைக்கப்பட்டுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகம் புதிதாக சென்னை டி.பி.ஐ. வளாகத்தில் அமைக்கப்படவுள்ள நவீன மைய நூலகக் கட்டடத்துக்கு மாற்றம் செய்யப்படும்.இவ்வாறு அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ)

## மருத்துவமனை மாற்றம்: தன்மானமுள்ள மனிதன் தீர்மானிக்கட்டும்

### கருணாநிதி கருத்து

சென்னை, நவ.3

சென்னை கோட்டூர்புரத்தில் இயங்கிவந்த அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகக் கட்டடம் குழந்தைகள் நல சிறப்பு மருத்துவமனையாக மாற்றப்படுவது குறித்து தன்மானமுள்ள தமிழர்கள், தமிழறிஞர்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

இந்த மருத்துவமனை அண்மையில் அப்போதைய முதல்வர் கருணாநிதியால் திறந்துவைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே, கடந்த தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட மக்கள்நலத் திட்டங்கள், கட்டடங்களை தற்போதைய முதல்வர் மாற்றி வருகிறார் என்று தி.மு.க. தலைவர் அடிக்கடி குற்றம் சாட்டி வரும் நிலையில், நேற்றுமுன்தினம் இந்த அண்ணா நூலக மாற்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது.


இதற்கு கருத்து தெரிவித்த தி.மு.க. தலைவர் கருணாநிதி, தன்மானமுள்ள தமிழர்கள், தமிழறிஞர்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன் என்று கூறினார்.

## பத்மநாப கோயில் பொக்கிஷங்களை கணக்கெடுக்க புதிய அதிகாரி

திருவனந்தபுரம்,நவ.3

திருவனந்தபுரம் கோவில் பொக்கிஷங்களை கணக்கெடுக்க கேரள தொல்பொருள் துறை இயக்குநர் வேலாயுத நாயர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவிலில் 6 ரகசிய பாதாள நிலவறைகள் உள்ளன. இந்த அறைகளைத் திறந்து அங்கிருக்கும் பழங்கால பொக்கிஷங்களை மதிப்பிட உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. (வ)



அருணாசல் பிரதேச மாநில முதல்வர் நபம்துகிக்கு ஆளுநர் ஜே.ஜே. சிங் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

# கனிமொழி இன்று பிணையில் செல்ல அனுமதி கிடைக்குமா?



டில்லி, நவ.3

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் கைதாகி சிறையில் உள்ள தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியின் பிணை மனு மீது இன்று தீர்ப்பு வழங்கப்படவுள்ளது. இதையொட்டி தி.மு.க. மத்திய அமைச்சரான அழகிரி நேற்று டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றார். கட்சியின் பொருளாளர் ஸ்டாலினும் டில்லிக்குச் சென்றுள்ளார்.

இந்த பிணை மனு இறுதியாக கடந்த மாதம் 24 ஆம் திகதி டில்லி பாட்டியாலா சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, கனிமொழி, கலைஞர் தொலைக்காட்சி நிர்வாகி சரத்குமார் ரெட்டி, குசேகான் புரூட்ஸ் அண்ட் வெஜிடபிள்ஸ் நிறுவன நிர்வாக இயக்குநர்கள் ஆசிப் பல்வா, ராஜீவ் அகர்வால், சினியுக் பிலிம்ஸ் அதிபர் கரீம் மொரானி ஆகிய 5 பேருக்கு பிணை வழங்குவதை எதிர்க்கவில்லை என்று சிபிஐ தெரிவித்தது. இதையடுத்து இவர்களுக்கு பிணை கிடைக்கும் வாய்ப்புகள் பிரகாசமாகின.

ஆனாலும் இந்த வழக்கில் தீர்ப்பை இன்று (நவம்பர் 3 ஆம் திகதிக்கு) நீதிபதி ஒத்தி வைத்துவிட்டார். அதன்படி இன்று தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

இந்த நிலையில் கனிமொழி உள்பட 5 பேர் மனுக்களை எதிர்ப்பது இல்லை என்று எந்த அடிப்படையில் முடிவு செய்யப்பட்டது என்று சி.பி.ஐயிடம் உச்ச நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை கேள்வி எழுப்பியது.

இதற்கு சி.பி.ஐ. தந்த விளக்கத்தில், 5 பேருக்கு எதிரான அம்சங்களோ, பிணை வழங்குவதை பாதிக்கும் எதிரான கருத்தோ இல்லை என்று தெரிய வந்துள்ளது. எனவே கனிமொழி இன்று விடுதலை ஆவார் என்று தி.மு.க தரப்பு நம்பிக்கையுடன் உள்ளது. எனினும் ராசா மட்டும் இதுவரை பிணை கோரி விண்ணப்பிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

உதயன்
03 நவம்பர் 2011 வியாழக்கிழமை

# செல்வா சிலை உடைப்பு சொல்லும் செய்தி என்ன?

தமிழர்களுக்காகக் குரல் எழுப்பிய மாபெரும் தலைவரான தந்தை செல்வாவின் சிலை திருமலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இனம் தெரியாதோரால் சேதமாக்கப்பட்டது.

சாத்வீக வழியில் போராடிய தலைவர் தந்தை செல்வநாயகத்தின் சிலை சேதமாக்கப்பட்டமை தொடர்பாக அரசியல்வாதிகளிடம் நாம் கருத்துக் கேட்டோம்.

## தரம் கெட்ட இழிசெயல்

**லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன**

இழிவான, தரங்கெட்ட செயல் இது. இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இது தொடர்பாக முறையான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு குற்றவாளிகளைச் சட்டத்தின் முன்பாக நிறுத்துவார்கள்.

மீண்டும் தமிழ் - சிங்கள மக்களிடையே இனப்பிரச்சினையைத் தோற்றுவிப்பதற்கு இப்படியான குறுக்கு வழிகளைச் சிலர் கையாண்டுள்ளனரா என சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், பொறுப்புவாய்ந்த அரசு என்ற வகையில், இது தொடர்பாக அதிக கரிசனை செலுத்தி நடவடிக்கை எடுப்போம். என்று தெரிவித்தார் அமைச்சரவைப் பதில் பேச்சாளரும், பொருளாதார அபிவிருத்திப் பிரதிப் பேச்சாளருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன.

## இனப்பிளவை ஏற்படுத்தச் சதி

**முத்து சிவலிங்கம்**

இரு இனங்களுக்கிடையில் மீண்டும் பிளவை ஏற்படுத்துவதற்கான ஒரு சதியாக இதனைக் கருதுகிறோம்.

தந்தை செல்வா நாணயமான அரசியல் தலைவர். அரசியலில் சிறந்த கௌரவத்தைக் கொண்டவர்.

தனக்கென ஒரு வழியில் நடந்தவர். தமிழர்களாலும், சிங்களவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல்வாதி.

இப்படியான ஒருவரது உருவச் சிலையைச் சேதமாக்கிய விஷமிகள் மீது அரசு சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோருகிறோம்.

சிறந்த தமிழ்த் தலைவரை அவமானப்படுத்தும் போக்கிரித்தனமான இச்செயலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

யார் இதனைச் செய்திருந்தாலும் சரி, சட்டத்தின் முன்பாக குற்றவாளி இனங்காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

- என்று தெரிவித்தார் பொருளாதாரப் பிரதியமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான முத்து சிவலிங்கம்.

## மீண்டுமொரு அழிவுக்கு முயற்சி

**ஜோன் அமரதுங்க**

நிச்சயமாக நாம் இதனைக் கண்டிக்கின்றோம். இப்படியான சம்பவங்கள் இந்நாட்டுக்குள் இடம்பெறுவதையிட்டுக் கவலையடைகிறோம்.

சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பாக பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்ற நிலையில், இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும் பட்சத்தில் எவ்வாறு நல்லிணக்கத்தை ஏற்படுத்தமுடியும்? எவ்வாறு தீர்வை அடையமுடியும்?

யுத்தம் நிறைவடைந்துள்ளது. ஆனால், இனங்களுக்கு இடையில் பேதத்தை ஏற்படுத்தி அதன் மூலம் மீண்டுமொரு அழிவை உருவாக்குவதற்கான முயற்சியாகவே இதனை அறியமுடிகிறது.

யார் இதனைச் செய்திருந்தாலும் உடனடியாக விசாரணை நடத்தி தவறிழைத்தவர்களை அரசு சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம் என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

## இனவாதத்துக்கு வித்திடும்

**விஜித ஹேரத்**

இன ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் காட்டுமிராண்டித்தனச் செயலைச் செய்தவர்களை அரசு சட்டத்தின் முன்பாக நிறுத்த வேண்டும்.

இவ்வாறான செயல்கள் ஊடாக மீண்டும் நாட்டில் இனவாதப் பிளவுகளே ஏற்படும். திருகோணமலை நகரில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் தந்தை செல்வநாயகத்தின் சிலை சேதமாக்கப்பட்டுள்ளது. இதனை ஜே.வி.பி. வன்மையாகக் கண்டிக்கிறது.

அத்துடன், இச் செயல் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிற நிலையில், இச்செயலைப் புரிந்தவர்கள் உடன் கைதுசெய்யப்பட வேண்டும்.

இலங்கையில் இம்மாதிரியான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இச்சந்தர்ப்பங்களில் குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டு, தண்டிக்கப்பட்டிருந்தால் இன்றும் இந்நிலை தொடராது. எனினும், சட்டம் உரிய முறையில் செயற்படாமையால் குற்றவாளிகள் தைரியத்துடன் குற்றச்செயல்களிலும் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் முயற்சிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

- என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் எம்.பி.கூறினார்.

## தமிழர் உரிமையைப் பறிக்க முயற்சி

**விக்கிரமபாகு கருணாரத்ன**

அல்லும் பகலும் இராணுவத்தினர் உலாவித்திரியும் திருகோணமலை நகரில் இப்படியான காட்டுமிராண்டித்தனச் செயல் இராணுவத்தின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நிச்சயமாக இந்தச் செயலை இராணுவப்பலம் படைத்தவர்களே செய்திருக்கக்கூடும். தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வையும், உரிமைகளையும் பறிக்கும் ஒரு கீழ்த்தரமான முயற்சியாகவே இதனை நினைக்கின்றோம். அத்துடன், தமிழ் மக்கள் மனங்களில் மீண்டும் அச்சத்தை ஏற்படுத்த இம்முயற்சி மேற் கொள்ளப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் பாரத லக்ஷ்மன்பிரேமச்சந்திரவின் கொலையை அடுத்து தெற்கில் அரச தீவிரவாதம் ஆரம்பித்திருக்கிறது.

இன்று வடக்கு, கிழக்கிலும் அதே அரச தீவிரவாத செயற் பாடு பரவியுள்ளது. எனவே, அரசு உடன் நடவடிக்கை எடுக் கும் தருணம் வந்துள்ளதால் தாமதிப்பதில் அர்த்தம் இல்லை.- என்றார் நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

**ஒருங்கிணைப்புக் கூட்ட தீர்மான அறிக்கை**

# அடுத்த கூட்டம் இடம் பெறுவதற்கு முன்பாகவே நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட வேண்டும்

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் முன்வைக்கப்படும் விடயங்களும் தீர்மானிக்கப்பட்ட விடயங்களும் உள்ளடக்கப்பட்ட கூட்ட அறிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அடுத்த கூட்டம் நடைபெறுவதற்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று அரசாங்க அதிபருக்கும், அறிக்கையிடுவோருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்., கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் மேஜர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ்.சிறீதரன் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி நாடளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டின், யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோருடன் உதவி அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் மீள்குடியமர்வு, கண்ணிவெடியகற்றல், வீடமைப்பு, நீர்பாசனம், தண்ணீர் வழங்கல், சுகாதாரம், பாதை அபிவிருத்தி, கல்வி, சமுர்த்தி நிவாரணம், விவசாய அபிவிருத்தி, கமநல சேவைகள், தெங்கு அபிவிருத்தி, பனை அபிவிருத்தி, மின்சார வசதி, வடக்கின் வசந்தம், கிராமிய எழுச்சி ஆகிய விடயங்கள் தனித்தனியாக பரிசீலனை செய்யப்பட்டன.

கடந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பான அறிக்கை கூட்டம் ஆரம்பமான போதே நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

கடந்த கூட்ட அறிக்கையை வாசித்து அறியவோ, அல்லது உள்ளடக்கம் பற்றி விளக்கம் கேட்கவோ அவகாசம் இல்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ். சிறீதரன் ஆகியோர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினர்.

கூட்டம் ஆரம்பிக்கும்போது கடந்த கூட்ட அறிக்கை சபையில் வாசிக்கப்பட்டு சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னரே கூட்ட நிகழ்வுகள் தொடரப்பட வேண்டும்.

ஆனால் இங்கு அந்த முறை கடைப்பிடிக்கப்படுவதில்லை. எம்மால் கூறப்பட்ட பல விடயங்கள் அறிக்கையில் உள்ளடக்கப்படவும் இல்லை.

அதே வேளை, கடந்த கூட்ட அறிக்கையும் இப்பொழுதுதான் எமக்கு வழக்கப்பட்டது. அதனை வாசித்து கருத்துகளைக் கூறவும் கால அவகாசம் இல்லை.

எனவே இனி வரும் காலங்களில் கடந்த கூட்ட அறிக்கை அடுத்த கூட்டம் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னதாக வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்தக் கூற்றை ஏற்றுக் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்த உறுப்பினர்களின் கூற்று நியாயமானது தான்.

எனவே இனிவரும் கூட்டங்களின்போது இவ்வாறான குற்றச் சாட்டுகளுக்கு இடமளிக்கக் கூடாது. ஒவ்வொரு கூட்ட அறிக்கையும் அடுத்த கூட்டம் நடைபெறுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் .- என்றார்.

இதனைக் கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி அரச அதிபரையும் கேட்டுக் கொண்டார். (ம-22)

# மூளை நரம்பு பாதித்த குழந்தைகள் பிறப்பது தொடர்பாக ஆராய்வு

யாழ்ப்பாணம்,நவ.3

இலங்கையில் குழந்தைகள் சிலவற்றுக்கு மூளைநரம்பு பாதிக்கப்பட்ட நிலையில் பிறப்பது தொடர்பான சுகாதார அமைச்சின் போசாக்குத் திணைக்களத்தின் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு கண்காணித்துள்ளது.

இது தொடர்பாக நாட்டில் உள்ள அனைத்து வைத்திய சாலைகளில் முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை பிறக்கும் குழந்தைகளில் மூளைநரம்பு பாதிப்பு ஏற்பட்டுள்ள குழந்தைகளின் விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

ஒருமாத காலத்தில் பிறக்கும் குழந்தைகளில் பாதிப்பு ஏற்படும் குழந்தைகளின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு சுகாதார அமைச்சின் பணிப்பாளர் சகல வைத்திய சாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பெறப்பட்ட புள்ளி விவரங்களின்படி பிறக்கும் 10 ஆயிரம் குழந்தைகளில் 13.2 சத வீதமான குழந்தைகள் மூளை நரம்பு பாதிப்பு ஏற்பட்ட நிலையில் பிறந்துள்ளது.

இவற்றில் பெரும்பான்மையாக அனுராதபுரம் மாவட்டத்தில் பிறந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் குழந்தைகள் பிறப்பதற்கான காரணத்தைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவே விவரங்கள் திரட்டப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரும்பாலான கர்ப்பிணிகள் கர்ப்பகாலத்தில் கிளினிக்குகளில் வழங்கப்படும் சத்துள்ள மாத்திரைகள் பாவிக்காதது ஒரு காரணமாக அமையலாமெனவும் ஊகிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.(ம-207)

# இரண்டுகண் மதகுகள் அமைப்பு

கொடிகாமம், நவ.3

வரணிப் பிரதேசத்தில் கரம்பைக் குறிச்சி, நாவற்காடு ஆகிய இடங்களில் இரண்டுகண் மதகுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கரம்பைக் குறிச்சி, நாவற்காடு பிரதான வீதியில் ஆழ்வார் மடம் கோயிலுக்கு அருகிலும் நாவற்காடு அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் உள்ள குறுக்கு வீதியிலும் இந்த மதகுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் இவை அமைக் கப்படுவதாகக் கூறப்பட்டது. கரம்பைக் குறிச்சி பிரதேச கிராமிய நிறுவனம் ஒன்று ஒப்பந்த சேவைகளைச் செய்து வருகின்றது. (ம-122)

# லிபியாவில் நேட்டோ இராணுவப் பணி நிறைவு

திரிபோலி, நவ. 03

லிபியாவில் ஐ.நாவின் தீர்மானத்தை நிறைவேற்ற ஏழு மாதங்கள் செயலாற்றிய 'நேட்டோ', திங்கட்கிழமை நள்ளிரவோடு தனது இராணுவப் பணியை முடித்துக்கொண்டது.

லிபியாவின் புதிய இடைக்கால பிரதமராக அப்துர்ரகீம்அல்கைப் நியமிக்கப்பட்டுள்ளார். லிபியாவில் முஅம்மர் கடாபி ஆட்சிக்கு எதிராக கடந்த பெப்ரவரியில் மக்கள் போர்க்கொடி தூக்கினர்.

கடாபி இராணுவம் மக்கள் மீது இராணுவ வன்முறை நிகழ்த்தியது. லிபிய மக்களைக் காப்பதற்காக, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**'நேட்டோ' நுழைந்தது**

லிபியா மீது 'விமானங்கள் பறக்கத் தடை' விதிக்கப்பட்டது. மார்ச் 31ஆம் திகதி முதல், 'நேட்டோ' வான்வழிக் கண்காணிப்பில் ஈடுபட்டது. கடாபியின் இராணுவ இலக்குகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியது.

மொத்தம், 26 ஆயிரம் தடவைகள் நடந்த தாக்குதலில், 9 ஆயிரத்து 600 தடவைகள் வான் வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. 5 ஆயிரத்து 900 இலக்குகள் அழிக்கப்பட்டன. அவற்றில் 600 கவச வாகனங்கள், 400 பீரங்கிகள், ரொக்கெட் லோஞ்சர்கள் ஆகியவை அடங்கும்.

**அபாயகரமான ஆயுதங்கள்**

கடாபி ஆட்சியில் வாங்கிக் குவிக்கப்பட்ட பயங்கர ஆயுதங்கள் 'நேட்டோ'வின் இராணுவ நடவடிக்கையில் அழிக்கப்பட்டுவிட்டன. எனினும், இன்னும் பல ஆயுதங்கள் குறிப்பாக, சிப்பாய்கள் தங்கள் தோளில் தாங்கி ஏவுகணைகளை ஏவக்கூடிய ஆயுதங்கள் லிபியாவில் இருக்கின்றன என 'நேட்டோ' கவலை தெரிவித்தது. இந்த ஏவுகணைகள் மூலம், பயணிகள் விமானத்தையே ஒருவர் தரையில் இருந்தபடி தாக்க முடியும்.

**ஐ.நா. தீர்மானம்**

இதனால், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இதுகுறித்து ரஷ்யா ஒரு தீர்மானம் கொண்டு வந்தது. அதில், ''இந்த ஆயுதங்கள் அல்-குவைதா உள்ளிட்ட தீவிரவாதிகளின் கைகளில் சிக்கி விடாமல் இருக்க லிபிய அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்'' எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

(ம)



குவைத் வந்திருந்த பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸை, குவைத் எரிசக்தித்துறை அமைச்சர் ஓசுலிவான், குவைத் நகர் சர்வதேச விமானநிலையத்தில் வரவேற்கிறார்.

# ஒபாமாவுக்கு வயது 50 ஆகிவிட்டது புகைப்பதை நிறுத்தினார் அடியோடு!

வாஷிங்டன், நவ. 03

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு சிகரெட் பிடிக்கும் பழக்கம் இருந்தது. அவர் அதிகளவில் சிகரெட் பிடித்து வந்தார்.

கடந்த 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் டாக்டர் ஜெப்ரி குல்மான் அவருக்கு உடல்நல பரிசோதனை நடத்தினார். அப்போது, அதிகளவில் சிகரெட் பிடிப்பது அவரது உடல் நலத்துக்கு உகந்தது அல்ல. எனவே, சிகரெட் பிடிப்பதைக் குறைக்கவேண்டும் என ஆலோசனைகளை வழங்கினார்.

ஆனால், ஒபாமா அந்தப் பழக்கத்தை விடவில்லை. இதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு (2010) பெப்ரவரியில் மீண்டும் உடல் பரிசோதனை நடத்தினார். அப்போதும் இதையே வலியுறுத்தினர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் அவர் தனது 50ஆவது பிறந்த நாளை கொண்டாடினார். இதைத் தொடர்ந்து அவரது நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட்டது. தனது உடல் நலத்தில் அக்கறை எடுத்துக்கொண்டார். சிகரெட் பிடிப்பதை நிறுத்தி விட்டார். இந்தத் தகவலை அவரது டாக்டர் ஜெப்ரி குல்கான் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ஒபாமாவுக்கு உடல் பரிசோதனை செய்தேன். தற்போது அவர் 95 சதவீதம் சிகரெட் பிடிப்பதை நிறுத்தி விட்டார். சத்தான உணவு வகைகளைச் சாப்பிடுகிறார். வயதுக்குத் தகுந்த உடல் எடை உள்ளது. தினசரி உடற்பயிற்சி செய்வதால் அதிக அளவில் இருந்த கொழுப்புச் சத்து குறைந்துள்ளது.

மொத்தத்தில் அமெரிக்காவின் ஜனாதிபதி பணியைச் செய்யும் முழு தகுதியுடன் அவர் இருக்கிறார் என்று நற்சான்றிதழ் அளித்துள்ளார்.

அவரது உடல் நலம் குறித்த 2 பக்க அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார். ஒபாமா சிகரெட் பிடிப்பதை நிறுத்தியமை குறித்து வெள்ளை மாளிகையிலிருந்து எந்தவித கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

# ஹிலாரியின் தாயார் ஹோவல் காலமானார்

வாஷிங்டன், நவ. 03

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டனின் தாயார் டோரோதி ஹோவல் ரோதம் (வயது - 92) மரணமடைந்தார்.

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் கடந்த 1919ஆம் ஆண்டு ஜூன்மாதம் 4ஆம் திகதி ரோதம் பிறந்தார். கடந்த சில மாதங்களாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர் தனது 92ஆவது வயதில் மரணமடைந்தார்.

தாயார் மரணமடைந்த செய்தியை அறிந்த அவரது மகளும், அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சருமான ஹிலாரி கிளிண்டன் தனது பிரிட்டன் மற்றும் துருக்கி பயணத்தை இரத்துச் செய்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக கிளிண்டன் பதவி வகித்தபோது ரோதம் 1998ஆம் ஆண்டில் சீனாவிலும், 2000 ஆண்டில் இந்தியாவிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானுக்கு அறிவுறுத்தல்

ஹக்கானி பயங்கரவாத அமைப்புக்கு பாகிஸ்தானின் உளவுத் தகவல் கிடைக்கிறது எனத் தெரியவந்துள்ளது. இது ஆபத்தானது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமைதியை நிலைநாட்ட அமெரிக்கா தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால், இந்த அமைதி நடவடிக்கையை சீர்குலைப்பதில் ஹக்கானி பயங்கரவாத அமைப்பினர் முனைப்புக் காட்டுகின்றனர்.

இந்த அமைப்பை ஒடுக்க அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கைக்குப் பாகிஸ்தான் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும். இதுவே அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் செய்யும் கைமாறாக இருக்கும் என்றும் அமெரிக்க உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# 700 கோடியாவது குழந்தையை உறுதிப்படுத்த முடியவில்லையாம்

நியூயோர்க், நவ. 03

''உலகின் 700 கோடியாவது குழந்தை, எந்த நாட்டில் எந்த ஊரில் பிறந்தது என்பதை ஐ.நாவால் உறுதிப்படுத்த முடியவில்லை'' என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஐ.நா. செயலாளர் நாயகம் திங்கட்கிழமை அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸில் இருந்து வந்த குழந்தை பிறப்பு குறித்த அறிக்கைகளை நான் கண்டேன். எனினும், எந்த நாட்டில், எந்த ஊரில் 700 கோடியாவது குழந்தை பிறந்தது என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. அதைத் தெளிவாகச் சொல்லும் நிலையில் நான் இல்லை. - இவ்வாறு பான் கீ-மூன் தெரிவித்தார்.

# விண்ணில் சீனாவின் ஆளில்லா விண்கலம்

பீஜிங், நவ. 03

சர்வதேச விண்வெளி நிலையத்தை உருவாக்கும் முயற்சியில் இரண்டாம் கட்டமாக, சீனா செவ்வாய்க்கிழமை ஆளில்லா விண்கலம் ஒன்றை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.

அமெரிக்காவும், ரஷ்யாவும் இணைந்து செயல்படுத்திவரும், 'மிர்' சர்வதேச விண்வெளி நிலையத்திற்குப் போட்டியாக, சீனா தனக்கான ஒரு விண்வெளி நிலையத்தை 2020 இற்குள் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக, கடந்த செப்டம்பர் 29ஆம் திகதி 'லொங் மார்ச் 2எவ்./ஜி' என்ற ஏவுகணை மூலம், 'தியான்காங்-1' அல்லது 'விண்ணுலக சொர்க்கம்' என்ற விண்வெளி ஆய்வுக் கூடம் வெற்றிகரமாக விண்ணில் நிறுவப்பட்டது.

**புதிய விண்கலம்:**

இரண்டாம் கட்டமாக செவ்வாய்க்கிழமை 'ஷென் ஷாவூ-8' என்ற ஆளில்லா விண்கலம், 'லொங் மார்ச் - 2 எவ்' என்ற ஏவுகணை மூலம் விண்ணில் ஏவப்பட்டது. 9 மீற்றர் நீளமும், 2.8 மீற்றர் விட்டமும், 8 தொன் எடையும் கொண்ட இந்த விண்கலம், பல தடவைகள் திருத்தி வடிவமைக்கப்பட்டு, பின் ஏவப்பட்டுள்ளது. இது பூமியிலிருந்து வானில், 343 கி.மீற்றர் உயரத்தில் சுற்றிவரும்.

**180 நாள்கள் இணைவு:**

சீனாவின் கோபி பாலைவனத்திலுள்ள ஜியூக்குவான் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை காலையில் ஏவப்பட்ட இந்த விண்கலம், இன்னும் ஓரிரு நாள்களில், 'தியான்காங்குடன்' இணையும். இந்த இணைவு 180 நாள்கள் நீடிக்கும்.

இந்த இணைவு வெற்றிகரமாக நிகழ்ந்துவிட்டால், சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான விண்வெளித்துறை ஒன்றை நிறுவும் முயற்சியை சீனா தொடரும். அதற்காக, ''ஷென்ஷோவூ-9 மற்றும் 10' ஆகிய விண்கலங்கள் 2012இற்குள் ஏவப்படும்.

விண்வெளித்துறை உருவாகிவிட்டால், 60 தொன் எடை கொண்டதும், மனிதர்கள் பணியாற்றக்கூடியதுமான சர்வதேச விண்வெளி நிலையத்தை 2020இற்குள் சீனா வெற்றிகரமாக உருவாக்கிவிடும்.

# கிர்கிஸ்தானில் அமெரிக்க இராணுவத்தளம் மூடப்படும்

## புதிய ஜனாதிபதி அறிவிப்பு

பிஷ்வாக், நவ. 03

கிர்கிஸ்தானில் அமெரிக்க இராணுவத்தளம் மூடப்படும் என புதிய ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

சோவியத் ரஷ்யாவிலிருந்து பிரிந்த கிர்கிஸ்தானில் சமீபத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. அதில் போட்டியிட்ட முன்னாள் பிரதமர் அல்மாஷ்பெக் அதாம்யேவ் வெற்றிபெற்றார். இதைத்தொடர்ந்து அவர் பிஷ்கெக் நகரில் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியவை வருமாறு:-

கிர்கிஸ்தானில், மனாஸ் விமானநிலையத்தில் அமெரிக்க இராணுவத்தளம் மூடப்படும். ஏனெனில், தற்போது ஈராக், ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவம் உள்ளது. அதனால் எங்கு பதற்றம் நிலவுகிறது.

அதேபோன்று அமெரிக்காவால் அண்டை நாடான ஈரானிலும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. அதுபோன்ற சூழ்நிலை ஒரு நாள் கிர்கிஸ்தானிலும் ஏற்படும். அதனால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும். ஆகவேதான் அமெரிக்க இராணுவத்தளத்தை மூட திட்டமிட்டுள்ளோம்.

மனாஸில் அமெரிக்க இராணுவத்தளம் செயல்பட 2014 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தம் நீடிக்கப்படமாட்டாது என்று தெரிவித்தார்.

சோவியத் ரஷ்யாவிலிருந்து பிரிந்த கிர்கிஸ்தான் பொருளாதார நீதியில் மிகவும் பாதிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து கடந்த 2009ஆம் ஆண்டு மனாஸ் விமானநிலையத்தில் இராணுவத்தளம் அமைக்க அப்போதைய ஜனாதிபதி குர்மான் பெக் எஸ். பாகியேவ் அனுமதி அளித்தார். அதற்காக ஆண்டு தோறும் ரூ.200 கோடி வாடகையாகப் பெறப்பட்டது.

இதற்கு கிர்கிஸ்தானில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. ரஷ்யாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும் என்றும் கருதப்பட்டது. எனவே, அமெரிக்க இராணுவத்தளம் மூடப்படும் எனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கிர்கிஸ்தானில் இயங்கும் ரஷ்ய இராணுவத்தளம் குறித்து எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

உதயன்
03 நவம்பர் 2011 வியாழக்கிழமை

# உடுவில் கோட்ட உதைபந்தில் வெற்றியீட்டிய அணிகள்

வலி.வடக்கு, நவ.3

உடுவில் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியின் முடிவுகள் வருமாறு:

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்துக்கும் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 03:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சுன்னாகம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்துக்கும் சுன்னாகம் மயிலணி மகாஜன சைவ வித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் தமிழ்க் கந்தையா வித்தியாலயம் 03:00 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இணுவில் மத்திய கல்லூரிக்கும் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இணுவில் மத்திய கல்லூரி 02:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதேவேளை -13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றுக் கொண்டது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

போட்டியில் இரு அணிகளும் சமநிலையில் காணப்பட்டாலும் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 03:01 என்ற கோல் கணக்கில் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் வலய மட்டத்தில் விளையாடவும் தகுதி பெற்றுள்ளது. (ம-86)

# பொன். அணிகளின் போரில் வென்றது யாழ்ப்பாணக் கல்லூரி

வலி.வடக்கு, நவ.3

பொன். அணிகள் போர் என்று வர்ணிக்கப்படும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் சம வலிமையுடன் காணப்பட்டன.

இந்த இரு கல்லூரிகளும் மோதும்போது கூடிய உத்வேகத்துடன் இருந்தன.

இந்த வகையில் இரு அணிகளும் சிறுவர்களைக் கொண்ட அணிகளாக இருந்த போதும் தமக்கே உரியது என்ற துடிப்புடன் விளையாடியமை விளையாட்டு ரசிகர்களை மிகவும் உற்சாகப்படுத்தியது.

ஆட்ட நிறைவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 01:00 என்ற கோல்கணக்கில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை வெற்றி பெற்றது. (ம-86)

ஆஸ்திரேலியாவில் முத்தரப்பு ஹொக்கித் தொடர்

# இறுதியாட்டத்துக்கான வாய்ப்பை கோட்டை விட்டது இந்தியா!



பர்ன்புரி, நவ்.03

ஆஸ்திரேலியாவில் நடக்கும் முத்தரப்பு ஹொக்கி தொடரின் இறுதியாட்டத்துக்கு முன்னேறும் வாய்ப்பை இந்திய அணி இழந்தது. நேற்று முன்தினம் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி லீக் போட்டியை 1-1 என சமநிலை செய்தது.

ஆஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் முத்தரப்பு ஹொக்கி தொடர் ஆஸ்திரேலியாவில் நடக்கிறது.

சொந்த மண்ணில் அபாரமாக ஆடிய ஆஸ்திரேலிய அணி, இந்தியா, பாகிஸ்தான் அணிகளை தலா இரண்டு முறை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது லீக் போட்டியை 3-3 என சமநிலை செய்த இந்திய அணி, மீண்டும் பாகிஸ்தானை சந்தித்தது. இதில் கட்டாய வெற்றியை நோக்கி களமிறங்கிய இந்திய அணிக்கு யுவராஜ் வால்மிகி ஆறுதல் அளிக்க, 1-1 என மீண்டும் சமநிலை செய்தது.

இதனால் லீக் சுற்றின் முடிவில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் தலா 2 புள்ளிகளுடன் இருந்தன. இருப்பினும் கோல் அடிப்படையில் பாகிஸ்தான் அணி, இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. (ம-15)

# இந்திய அணியில் இளம் வீரர்கள் சரியான நேரம் வந்து கைகூடியது

## முன்னாள் தேர்வுக்குழுத் தலைவர் திலீப் வெங்சர்க்கார்



ஐதராபாத், நவ.03

''இந்திய அணியில், இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்க சரியான நேரம் வந்துவிட்டது,'' என்று, முன்னாள் தேர்வுக்குழுத் தலைவர் திலீப் வெங்சர்க்கார் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் ஆஸ்திரேலிய சுற்றுப் பயணம் செய்யவுள்ள இந்திய அணி, நான்கு டெஸ்ட், இரண்டு சர்வதேச "டுவெண்டி-20' மற்றும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. இந்தத் தொடருக்கு முன், இந்திய அணி, வெஸ்ட் இண்டீசுக்கு எதிராக மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் வரும் 6ஆம் திகதி டில்லியில் துவங்குகிறது. இந்தப் போட்டிக்கான இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இதில் அஷ்வின், அஜின்கியா ரகானே, உமேஷ் யாதவ், வருண் ஆரோன், ராகுல் சர்மா உள்ளிட்டோர் அறிமுக வீரர்களாக இடம்பெற்றுள்ளனர்.

இதுகுறித்து முன்னாள் இந்தியத் தலைவர் திலீப் வெங்சர்க்கார் கூறியதாவது,

இந்திய அணியின் தலைவர் பொறுப்பில், தோனி சிறப்பாக செயல்படுகிறார். ஒவ்வொரு தொடரிலும், தான் ஒரு சிறந்த தலைவர் என்பதை நிரூபித்து வருகிறார். போட்டியில், சூழ்நிலைக்கேற்ப தனது ஆட்டத்தை மாற்றிக் கொள்ளும் திறமை இவரிடம் அதிகம் உள்ளது.

டெஸ்ட், ஒருநாள், "டுவெண்டி-20'' என அனைத்துவிதமான கிரிக்கெட் போட்டியிலும் அசத்தி வருவது சிறப்பம்சம்.

''தலைவர் கூல்' என அழைக்கப்படும் இவர், சமீபத்தில் இங்கிலாந்து மண்ணில் கண்ட மோசமான தோல்வியின் போது கூட பதட்டப்படவில்லை. இந்தத் தொடரின் போது முன்னணி வீரர்களுக்கு ஏற்பட்ட காயம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை சமாளித்து, வெற்றிக்காக போராடிய விதம் பாராட்டுக்குரியது.

தற்போது சொந்த மண்ணில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடர் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்கு வித்திட்டார். இதன்மூலம் இளம் வீரர்களுக்கு சிறந்த பாடமாக விளங்கினார்.

இந்திய அணியில் இளம் வீரர்களுக்கு அதிகளவு வாய்ப்பு அளிக்கக்கூடிய நேரம் வந்துவிட்டது. ஏனெனில் சமீபகாலமாக முன்னணி வீரர்கள் காயம், மோசமான கட்டுப்பாடுகள் உடற்தகுதி உள்ளிட்ட பிரச்சினைகளால் போட்டியில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இவர்களது இடத்தை பூர்த்தி செய்ய இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான முதல் டெஸ்டில் விளையாட ஐந்து இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளித்திருப்பது வரவேற் கத்தக்கது.

இதேபோல இனிவரும் நாள்களில் தேர்வுக்குழு உறுப்பினர்கள், இளம் வீரர்களை கருத்தில் கொண்டு அணியை தேர்வு செய்ய வேண்டும்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் இந்திய வீரர்களுக்கு சவாலாக இருக்கும். ஏனெனில் ஆஸ்திரேலிய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது எளிதான காரியமல்ல. ஆஸ்திரேலிய தொடரில் சாதிக்க, அங்குள்ள தட்பவெப்பநிலை, மைதானத்தின் தன்மைக்கேற்ப ஆட்டத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.

வெஸ்ட் இண்டீசுக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் இளம் வீரர்களை ஆஸ்திரேலிய தொடருக்கு தேர்வு செய்ய வேண்டும்.

தவிர, ஏற்கனவே அங்கு விளையாடிய உயர்தர வீரர்களும் தேர்வு செய்யப்பட வேண்டும்.

இதன்மூலம் திறமையான இளம் வீரர்களுடன், அனுபவ வீரர்கள் இணைந்து ஆஸ்திரேலிய மண்ணில் ஜொலிக்கலாம்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-15)

# ஆஸி. கிரிக்கெட் வீரர் காடிச் அணியில் இருந்து திடீர் நீக்கம்



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தொடக்க வீரரான சைமன் காடிச் திடீரென அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

பொண்டிங் கப்டனாக இருந்த போது காடிச்சுக்கும், தற்போதைய கப்டன் கிளார்க்குக்கும் இடையே நடந்த மோதல்தான் இதற்கு காரணம் என கூறப்பட்டது.

அப்போது கிளார்க்கின் கழுத்தைப் பிடித்து காடிச் நெரித்ததாகவும், இந்த பிரச்சினை விஸ்வரூபமாகி காடிச் நீக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதுகுறித்து பேட்டி அளித்த காடிச் தனது நீக்கத்துக்கு கப்டன் கிளார்க்கும் காரணம் எனத் தெரிவித்தார்.


வீரர்கள் தேர்வு குறித்து காடிச் வெளிப்படையாக கூறியதால் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் ஒழுங்கு நடவடிக்கை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இதை எதிர்கொள்ள சட்ட ஆலோசனை பெற இருப்பதாக காடிச்சின் மனேஜர் ரோபர்ட் ஜோஸ் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதேசமயம் வீரர்கள் அனைவரும் கிளார்க்கின் பின் அணிவகுத்து நிற்பதாக முன்னணி துடுப்பாட்ட வீரர் மைக் கேல்ஹசி தெரிவித்துள்ளார். (ம-15)

# லெப்டினன்ட் கேணல் டோனி



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனி, துப்பாக்கி சுடுதல் வீரர் அபனவ் பந்த்ரா ஆகியோருக்கு இந்திய இராணுவத்தில் கௌரவ பதவி வழங்கப்பட்டுள்ளது.

டோனி தலைமையிலான இந்திய அணி உலகக் கிண்ணத்தை 28 ஆண்டுகளுக்குப்பிறகு வென்று சாதனை படைத்தது. இதே போல் ஒலிம்பிக்கில் தனிநபர் பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற மகத்தான பெருமைக்குரியவர் அபனவ் பந்த்ரா.

விளையாட்டுத்துறையில் இவர்கள் இருவரின் சாதனைகளையும் அர்ப்பணிப்பு, பங்களிப்பு, கடின உழைப்பு ஆகியவற்றையும் பாராட்டி இந்தக் கௌரவம் அளிக்கப்பட்டிருக்கிறது. டெல்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியின் போது அவர்களுக்கு, இராணுவத்தில் லெப்டினன்ட் கேணல் அந்தஸ்தினை இராணுவ தலைமை ஜெனரல் வி.கே.சிங் வழங்கிக் கௌரவித்தார்.

அவர்கள் இருவரும் இனி இந்திய இராணுவத்திற்கு வலு சேர்க்கும் வகையில் அதன் தூதராக செயல்படுவார்கள். கிரிக்கெட் வீரர்களில் ஏற்கனவே கபில் தேவுக்கு இராணுவத்தில் கௌரவ பொறுப்பும், சச்சின் டெண்டுல்கருக்கு விமானப் படையில் 'குரூப் ஒப் கப்டன்' அந்தஸ்தும் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (15)



# சிறந்த வீரர் யார் ?

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் 2011 ஆம் ஆண்டின் சிறந்த கால்பந்து வீரர் விருதுக்கு ஆர்ஜென்டீனாவின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி உள்ளிட்ட 23 வீரர்களின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான சிறந்த கால்பந்து வீரர் விருதுக்கு உறுதி செய்யப்பட்டுள்ள 23 வீரர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளது சர்வதேச கால்பந்து சம்மேளனம்.

இதில் ஐரோப்பிய சம்பியனான பார்சிலோனா கிளப் கால்பந்து அணியில் மெஸ்ஸி உள்ளிட்ட 8 வீரர்கள், பார்சிலோனாவின் பரம வைரியான ரியல் மாட்ரிட் அணியைச் சேர்ந்த 5 வீரர்கள், மான்செஸ்டர் யுனைடெட் அணி சம்பியன் பட்டம் வெல்லவும், சம்பியன்ஸ் லீக் இறுதிச்சுற்றுக்கு முன்னேறவும் முக்கிய பங்கு வகித்த இங்கிலாந்தின் வேயன் ரூனி உள்ளிட்டோர் பெயர் இடம்பெற்றுள்ளது.

சிறந்த பயிற்சியாளர் விருதுக்கான பட்டியலில் ஸ்பெயின் பயிற்சியாளர் விசென்டிடெல் போஸ்கியு உள்ளிட்ட 10 பேரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இதில் ஒவ்வொரு பட்டியலிலும் சிறந்த மூன்று பேரின் பெயர்கள் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் டிசெம்பர் 5 ஆம் திகதி அறிவிக்கப்படும். வெற்றி பெற்றவரின் பெயர் ஜனவரி 9 ஆம் திகதி ஜூரிஜில் அறிவிக்கப்படும்.

### சிறந்த வீரர்கள் பட்டியல்

எரிக் அபதால் (பிரான்ஸ்), செர்ஜியோ அகியுரோ (ஆர்ஜென்டீனா), கரிம் பென்ஸீமா (பிரான்ஸ்), இகர் காசில்லஸ் (ஸ்பெயின்), கிறிஸ்டியானோ ரொனால்டோ (போர்த்துகல்), டேனி அல்வெஸ் (பிரேசில்), சாமுவேல் எட்டோ (கேமரூன்), பேப்ரிகேஸ் (ஸ்பெயின்), டீகோ போர்லான் (உருகுவே), அன்ட்ரேஸ் இனியெஸ்டா (ஸ்பெயின்), லியோனல் மெஸ்ஸி (ஆர்ஜென்டீனா), தாமஸ் முல்லர் (ஜேர்மனி), நானி (போர்த்துகல்), நெய்மர் (பிரேசில்), மெசுத் ஒஸில் (ஜேர்மனி), ஜெரார்டு பக்யு (ஸ்பெயின்), வேயன் ரூனி (இங்கிலாந்து), பேஸ்டியன் ஸ்வெயின்ஸ்டீகர் (ஜேர்மனி), வெஸ்லே ஸ்நீஜ்டர் (நெதர்லாந்து), லூயிஸ் சுரேஜ் (உருகுவே), டேவிட் வில்லா (ஸ்பெயின்), ஷாப அலோன்ஸ் (ஸ்பெயின்), ஷேவி (ஸ்பெயின்). (15)

# பங்களாதேஷ் பரிதாபத் தோல்வி
# மேற்கிந்தியத்தீவுகள் அபார வெற்றி

பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 229 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணியை அதன் சொந்த மண்ணில் நேற்று வீழ்த்தியது. சகல துறைகளிலும் பிரகாசித்த மேற்கிந்தியத் தீவுகள் இந்த இலகு வெற்றியைப் பதிவு செய்தது.

பங்களாதேஷுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் மிர்பூரில் வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்த நிலையிலேயே இந்த ஆட்டம் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் சமி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் சகல இலக்குகளையும் இழந்து 355 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கிரிக் எட்வேட்ஸ் 121, கெரன் பவல் 72, பறத்வெய்ட் 50, சாமுவேல்ஸ் 48 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சகிப் அல் ஹசன் 5, நசர் ஹொசைன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி சகல இலக்குகளையும் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது. பங்களாதேஷ் சார்பில் சகிப் அல் ஹசன் 73, நமீம் ஸ்லாம் 45, நசர் ஹொசைன் 42 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். மேற்கிந்தியத் தீவுகளின் சார்பில் பந்து வீச்சில் படல் எட்வேட்ஸ் 5 இலக்குகளையும், பஷ்ஷு 3 இலக்குகளையும் வீழ்த்தினர். இதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி பெற்றுக்கொண்ட ஓட்ட எண்ணிக்கையை விட 124 ஓட்டங்கள் பின்தங்கியிருந்தது.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை தொட்ங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 இலக்குகள் இழந்து 383 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் தனது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. மேற்கிந்தியத்தீவுகளின் சார்பில் டரன் பராவோ 195, கிரிக் எட்வேட்ஸ் 86, சந்திரபோல் ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பங்களாதேஷ் சார்பில் சுவோ 3, சகிப் அல் ஹசன் ஒரு இலக்கினையும் வீழ்தினர்.

508 என்ற ஓட்ட இலக்கை வெற்றியிலக்காகக் கொண்டு நேற்று முன்தினம் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது பங்களாதேஷ் அணி. நேற்று முன்தினம் ஆட்ட நேரமுடிவில் பங்களாதேஷ் அணி 3 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய ரமிம் இக்பால் 82, முஷ்பகுர் ரகிம் 33 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய ஆட்டம் ஆரம்பமானவுடனேயே நான்காவது இலக்கு வீழ்த்தப்பட்டது. சிறப்பாக ஆடிய ரமிம் இக்பால் 83 ஓட்டங்களுடன் வெளியேறினார். அணித் தலைவர் முஷ்பகுர் ரகிம் மற்றும் முன்னாள் அணித்தலைவர் சகிப் அல் ஹசன் இருவரும் இணைந்து 5 ஆவது இலக்குக்காக சிறப்பாக ஓட்டங்களைச் சேர்த்தனர். மேலதிக இலக்கு வீழ்வதை தவிர்ப்பதற்கு இருவரும் இணைந்து கடுமையாகப் போராடினர். இருப்பினும் 88 ஓட்டங்களை 5 ஆவது இலக்குக்காகப் பகிர்ந்த நிலையில் சகிப் அல் ஹசன் 55 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து மறுமுனையில் சிறப்பாக ஆடிய முஷ்பகுர் ரகிம் 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பங்களாதேஷின் தோல்வி உறுதியானது.

பின்வரிசையில் களம்புகுந்த வீரர்கள் ஒற்றை ஓட்டங்களுடன் வெளியேற பங்களாதேஷின் இரண்டாவது இன்னிங்ஸ் 278 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. இதன் மூலம் 508 ஓட்டங்களுக்குப் பதிலளித்து ஆடிய பங்களாதேஷ் 229 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் சார்பில் பஷ்ஷு 5, சமி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக் எட்வேட்ஸ், தொடர் ஆட்டநாயகனாக பங்களாதேஷின் சகிப் அல் ஹசனும் தெரிவானார்கள். இந்த வெற்றியின் மூலம் இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரை மேற்கிந்தியத்தீவுகள் அணி 1 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. (15)

# மீண்டும் உயிர்த்தெழ விரும்புகின்றேன்

மேற்கிந்தியத்தீவுகள், ஆஸ்திரேலிய அணிகளுக்கு எதிரான, டெஸ்ட் ஆட்டங்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, இந்த வகையான போட்டியில் மீண்டும் உயிர்த்தெழ விரும்புகிறேன், என்கிறார் யுவராஜ் சிங்.

இந்திய அணியின் நட்சத்திர வீரர் யுவராஜ் சிங். கடந்த 11 ஆண்டுகளாக, 274 ஒரு நாள் போட்டியில் பங்கேற்றுள்ள இவர், 35 டெஸ்டில் மட்டுமே விளையாடியுள்ளார். ஏனெனில் மத்தியவரிசையில் சச்சின், டிராவிட், லக்ஸ்மன் மற்றும் கங்குலி ஆகியோர் நிலையான இடத்தைப் பிடித்து இருந்தனர். கங்குலி ஓய்வுக்குப் பின்னர் கிடைத்த வாய்ப்பையும் வீணடித்தார்.

பின்னர் இலங்கை தொடரில் (2010) மீண்டும் வாய்ப்பு வந்தது. இரண்டாவது டெஸ்டின் போது காய்ச்சல் ஏற்பட, ரெய்னா அறிமுகமானார். இதில் ரெய்னா சதம் அடிக்க, மீண்டும் டெஸ்ட் அணியில் இருந்து ஒதுக்கப்பட்டார். கடந்த உலகக் கிண்ணத் தொடரில், கைப்பற்றிய தொடர் நாயகன் விருது காரணமாக, தேடிவந்த மேற்கிந்தியத்தீவுகளுக்கு (நுரையீரல் தொற்று), இங்கிலாந்துக்கு (கைவிரல் எலும்பு முறிவு) எதிரான டெஸ்ட் அணியில், காயம் காரணமாக பங்கேற்கவில்லை.

தற்போது டிராவிட், லக்ஸ்மன், சச்சின் ஆகியோர் விரைவில் ஓய்வு பெறவுள்ள நிலையில், இந்த முறை சொந்த மண்ணில் மேற்கிந்தியத்தீவுகளுக்கு அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளார்.

இதுகுறித்து யுவராஜ் சிங் கூறியதாவது:

டெஸ்ட் போட்டியில் களத்தில் இறங்கும் போதெல்லாம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று தான் விரும்புவேன். ஆனால் துரதிருஷ்டவசமாக காயம் வந்து தொல்லை படுத்திவிடுகிறது. பெரும்பாலும் காயத்தால் அவதிப்பட்டு கொண்டுதான் உள்ளேன். காயமில்லாமல் இருந்த ஆண்டு என்பதே அபூர்வமானது. மொத்தத்தில் எனக்கான சிறந்த ஆண்டு இன்னும் வரவில்லை. இங்கிலாந்து தொடரில் இருந்து பாதியில் திரும்பிய பின், கடுமையான பயிற்சி செய்து மீண்டுள்ளேன்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் கவனம் செலுத்த சரியான நேரம் இப்போது வந்துள்ளது. இந்த வகையான போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்ற பெயர் பெற விரும்புகிறேன். அடுத்து வரவுள்ள மேற்கிந்தியத்தீவுகள், ஆஸ்திரேலிய அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடர்களில், அதிக ஓட்டங்களை அடிக்க ஆர்வமாக உள்ளேன். இதன் மூலம் டெஸ்ட் வாழ்க்கையில் மீண்டும் உயிர்த்தெழ விரும்புகிறேன் என்று யுவராஜ் சிங் தெரிவித்தார்.

# அழைப்பு

## பால் நிலை கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 2011

பிரதம அதிதி
திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள்
அரச அதிபர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

இடம்:
கைலாசபதி கலையரங்கு, யாழ். பல்கலைக்கழகம்

காலம்:
நவம்பர் 5 ஆம் திகதி சனிக்கிழமை

நேரம்:
காலை 9.00 மணி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்**
யாழ். மாவட்டக்கிளை.
இல.23, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 021 222 9866

**நிகழ்ச்சி நிரல்**

* மங்கல விளக்கேற்றல்
* 'யுகங்களின் மௌனக் கலைப்பு' பயிலுநர்களின் குழுப்பாடல் இசைப்பு
* வரவேற்புரை: செல்வி பே.பிரபாஜினி (பயிலுநர்)
* தலைமையுரை: திரு.கு.கௌதமன் (பயிலுநர்)
* சிறப்புரை: திருமதி சாந்தி சச்சிதானந்தம் (பிரதம நிறைவேற்று அலுவலர், விழுது)
* சான்றிதழ் வழங்குதல்
* விழுது - பயிலுநர்களின் மலர் வெளியீடு
* வெளியீட்டுரை
* சிறு வயதுத் திருமணங்களின் சமூகத் தாக்கம் - ஆய்வு நூல் வெளியீடு
* ஆய்வு அறிமுக உரை: திரு.எஸ்.ஹரிகரதாமோதரன் (ஆய்வு உத்தியோகத்தர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்)
* பிரதம விருந்தினர் உரை: திருமதி இமெல்டா சுகுமார் (அரச அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)
* கலை நிகழ்ச்சி: நாடக அரங்காற்றுகை
* நன்றியுரை: திரு.ஆ.சான் பொனற் (பயிலுநர்)

*உலகினை மாற்றுவதற்கு சிந்திக்கின்றதொரு சிறியகுழு மனிதர்களே போதும் உண்மையில் இதுவரையில் அப்படித்தான் நடந்திருக்கின்றது.*

# கண்ணீர் அஞ்சலி



அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில் பரிபாலன சபைத்தலைவர்

**தர்மையா தர்மலிங்கம்**
(இளைப்பாறிய தபாலதிபர்)

அவர்கள் திடீரென எம்மை விட்டுப் பிரிந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.
அன்னாருக்கு எமது நெஞ்சம் உருகும் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் பிரிவால் வாடி நிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது இரங்கலைத் துயரத்துடன் தெரிவித்துக் கொள்வதோடு.
அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வைரவப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை,
அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில்.

# தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் (வ-து)

## பாரஊர்திகள் விற்பனைக்கான கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் கீழ்வரும் விவரப்படியான 02 [இரண்டு] பார ஊர்திகள் விற்பனை செய்யப்படவுள்ளன. இவற்றினை கொள்வனவு செய்ய விரும்புவோர் கூறுவிலையின் இரகசியத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அடையாளமிட்டு தமது மூடிய கூறுவிலைகளை 18.11.2011 ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம், தெல்லிப்பழை என்னும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கூறுவிலை கோரல் - பார ஊர்தி விற்பனை" என எழுதப்பட்டு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| பாரஊர்தி இலக்கம் | மூடுதி |
|---|---|
| * 24/4556 | இசுசு |
| * 24/9878 | பென்ஸ் |

குறிப்பு:-
01] பார ஊர்தியின் செயற்படு தன்மையை காரியாலய நேரத்தில் பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.
02] நேரடியாக ஒப்படைக்கப்படும் கூறுவிலைகள் தலைமைக் காரியாலயத்திலுள்ள மூடிய பெட்டியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
03] கூறுவிலை திறக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

01.11.2011 பொதுமுகாமையாளர்.

## கூட்டமைப்புக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் அமெரிக்காவில் வைத்து ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனைச் சந்திப்பர் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்பு முதலாம் திகதி நிச்சயம் நடைபெறும் என்றும் உறுதியாகக் கூறப்பட்டிருந்தது.

ஆனால், பான் கீ முன் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கிடையிலான சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டது.

இதுதொடர்பாக உதயனுக்குத் கருத்துத தெரிவித்த சவேந்திர சில்வா மேலும் கூறியவை வருமாறு-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஐ.நா.செயலாளர் பான் கீ- மூனை சந்திக்கப் போவதாக அங்கும் இங்கும் பெருமைக் கூறித் திரிந்தனர். ஆனால், வீரவசனம் பேசிய அவர்களால் ஐ.நா. செயலர் பான் கீ முனை சந்திக்க முடியாமல் போனது. இது அவர்களுக்குச் சர்வதேச ரீதியில் ஏற்பட்ட தோல்வியாகும். இனியும் பெருமைக் கூறித் திரியாது தோல்வியை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

பான் கீ- மூனைச் சந்திக்கவுளோம் என அனல் பறக்கும் வசனங்களை அள்ளிவீசிய கூட்டமைப்பினர் குறைந்தளவு அந்தஸ்துள்ள அதிகாரியொருவரையே சந்தித்துள்ளனர். இந்தச் சந்திப்பால் எவ்வித மாற்றமும் நிகழப்போவதில்லை. அதிகாரமில்லாத அதிகாரியை சந்திப்பதால் ஏற்படப்போகும் மாற்றம்தான் என்ன?

ஐ.நா. செயலரைச் சந்தித்துக் கூறுவோம், சர்வதேசத்திடம் சொல்வோம் என உள்நாட்டில் கோஷமிட்டு மிரட்டித்திரியும் நடவடிக்கைகளை இனியாவது கூட்டமைப்பினர் கைவிட வேண்டும்.

அண்மையில் நான் உங்களிடம் (உதயனிடம்) கூறினேன். இந்தச் சந்திப்பு இடம்பெறாது என்று இன்று அவ்வாறு நடந்ததல்லவா?

- இப்படி அவர் தெரிவித்தார்.

## பஸில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்று வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின்படி இலவச மின்சார இணைப்புகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன.

மீளக்குடியேறிய மக்களுக்கு அவர்களது வீடுகளுக்கு இலவச மின்விநியோகம் வழங்கக்கூடாது. அத்துடன் அவர்களுக்கு இனி ஒரு வருடத்துக்கு இலவச மின்சாரம் வழங்கப்படமாட்டாது. மேலும் பாடசாலைகள் உட்பட அரச நிர்வாக அலுவலகங்களுக்கும் இனி இலவச மின்சார விநியோகம் இல்லை. இவையனைத்தும் சுற்றறிக்கை அனுப்பட்டதிலிருந்து நடைமுறைக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலமாக வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட இலவச மின்சார விநியோகமும் இலவச மின்னிணைப்பும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வன்னி மாவட்டத்தின் பல பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்தவுடன் இலவச மின்னிணைப்புக்காக விண்ணப்பித்தும் அதற்கான பொருள்கள் இல்லாததால் வழங்கப்படாமல் காலதாமதம் செய்யப்பட்டது. தற்போது அந்த மக்களும் இந்தப் புதிய சுற்றறிக்கை ஊடாக பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-15)

## பாடசாலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரமாகும். இந்த நிலையில், மாணவர்களின் நன்மை கருதி பாடசாலை நேரத்தை 3 மணிவரை அதிகரிக்க அமைச்சு பேச்சுகளை முன்னெடுத்தது.

எனினும், அது தொடர்பாக இன்னும் உறுதியான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. விரைவில் அது குறித்தான இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும். நாட்டின் சில பகுதிகளிலுள்ள அரச பாடசாலைகள் பிற்பகல் 3 மணிவரை திறந்திருக்கின்றன. 3 மணிவரை மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

அதேபோன்று மாணவர்களின் நன்மை கருதி பாடசாலை கல்வி நேரத்தை மாலை 5 மணிவரையிலும் அதிகரிப்பதற்கான அதிகாரம் அதிபர்களுக்கு உண்டு.

பாடசாலை அதிபர்கள் விரும்பினால், மாலை 5 மணிவரை பாடசாலையை திறந்துவைத்திருந்து மாணவர்களுக்குக் கற்பித்துக் கொடுக்கமுடியும். இவை அனைத்தும் மாணவர்களின் நன்மைக்கே - என்றார் அமைச்சர்.

(ஓ-சி)


# தேவை

தரம் 01 இல் இருந்து க.பொ.த. சா/த வரையான சகல பாடங்களும் தமிழ் (Tamil), ஆங்கிலம் (English) மொழிகளில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை.
தகுதியானவர்களும் ஆர்வமுடையோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.
இல. 111, பேட்விக் வீதி, யாழ்ப்பாணம்.
**T.P.: 0778175902**
தொடர்பு கொள்ளவேண்டிய நேரம்:
(8.30 a.m) (4.30 p.m.)

# கார்காலக் கோலங்கள்

**Rainco**

மழைகாலத்தை முன்னிட்டு நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
★ றெயின்கோட்
★ ஜீன்ஸ் கோட் ★ யக்கட்
★ சிறுவர்களுக்கான கோட் வகைகள்
★ சகலவிதமான குடைகள்
★ நுளம்பு வலைகள்
★ சுவற்றர் வகைகள்
அனைத்தும் கொழும்பு விலையிலும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்



**வாணி றெக்ஸ்**
இல.81, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5578


# மரண அறிவித்தல்

## பொன்னையா சதானந்தம்

(இளைப்பாறிய அதிபர், யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்)



மினைக்கெட்டான் வேம்படி, கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் சோளெழு, கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சதானந்தம் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா- தங்கம்மா தம்பதியரின் இளையமகனும், காலஞ்சென்ற ஆறுமுகம்- இரத்தினம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும், பாலகிருஸ்ணன்(விவசாயப் போதனாசிரியர், விவசாய விரிவாக்க நிலையம், புத்தூர்), காலஞ்சென்ற காந்தரூபன் மற்றும் கெங்காதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாநிதி (ஆசிரியர், யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, சோதிப்பிள்ளை, சுப்பையா (சீவரத்தினம்), கந்தையா (கணகையா), மங்கையர்க்கரசி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மற்றும் மதுரிக்கா (யா/ இந்து ஆரம்பப் பாடசாலை), பபிஷாணந் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான நல்லையா, இராசமணி மற்றும் தியாகராசா சோதிமலர், நல்லைநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2011) வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு இராசவீதி, கோப்பாய் வடக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச.பாலகிருஷ்ணன் (மகன்) (விவசாய போதனாசிரியர், புத்தூர்.)

இராசவீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

## முருகேசு சுப்பிரமணியம்



நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் இல.116 ஸ்கந்த புரத்தை வதிவிடமாகவும் தற்சமயம் ஆனந்தபுரத்தில் வசித்து வந்தவருமான முருகேசு சுப்பிரமணியம் 02.11.2011 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - வேலாசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை, கோபாலபிள்ளை, பாக்கியலட்சுமி, திருநாவுக்கரசு மற்றும் கணபதிப்பிள்ளை, குமாரசாமி, புவனேஸ்வரி, சபாரத்தினம், குணநாயகி, ஆகியோரின் பாசமிகு தந்தையும் சற்குணதேவி, அன்னமேரி, விஜயராணி, நிர்மலன், கமலேஸ்வரி, சிவசோதி ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சிவகாமிப்பிள்ளை, இராமநாதர், தில்லையம்பலம், தம்பையா மற்றும் நாகமுத்து மருதையினார், பார்வதிப்பிள்ளை, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2011) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் ஆனந்தபுரம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.168, வன்னியசிங்கம் வீதி,
வலயக்கல்விப் பணிமனை முன்பாக,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை ஈஸ்வரலிங்கபெருமாள்



ஊரிக்காடு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஈஸ்வரலிங்கபெருமாள் நேற்று முன்தினம் (01.11.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை தம்பதியரின் அன்பு மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2011) வியாழக்கிழமை அவரின் பாசமிகு மகன் ஈஸ்வரலிங்க பெருமாள் பைதாகரசுலிங்கன் அவர்களின் இல.6, உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் சுதந்திரபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பாபுஜி (மகன்),
E.B.N. மல்ரி சொப்
உரிமையாளர்,
ஏ-9 வீதி, கிளிநொச்சி.

E.B.N. மல்ரி சொப்
உடையார்கட்டு.

## சின்னவன் சங்கரப்பிள்ளை



வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும், 9ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் சங்கரப்பிள்ளை நேற்று (02.11.2011) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பவளநாயகியின் அன்புக் கணவரும், வல்லிபுரம் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் முருகையா, கனகம்மா, தவறாணி, சரஸ்வதி, சக்திவேல், ரவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (06.11.2011) ஞாயிற்றுக்கிழமை வரணி இயற்றாலையில் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு ஊத்தல் கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி, இயற்றாலை,
வரணி.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி குமாரசாமி பவளம்மா



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், புகையிரத நிலைய ஒழுங்கை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி பவளம்மா நேற்று (02.11.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குமாரசாமியின் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) பாசமிகு மனைவியும், முத்தையா, பூபாலசிங்கம், செல்வநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பவளகுமாரி (ராஜி- ஜேர்மனி), மங்களகுமாரி(சிவாஜி, ஆசிரியர்), வசந்தகுமாரி(றசினி, கனடா), ஈஸ்வரகுமாரி (மாலா, ஜேர்மனி), நித்தியகுமாரி (நித்தியா, லண்டன்), அரசகுமாரி(ஜேந்தி, ஜேர்மனி), ஞானரூபன் (ரூபன், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், கிருஸ்ணமூர்த்தி, சிவபாலசுந்தரம் (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்), சந்திரசேகரம், அருளானந்தம்(அருள்), கிருபாகுகன்(குகன்), நிமலன், மெலனி ஆகியோரின் அன்பு மாமியும், தீபா, கௌரீசன், சோபனா, சந்திரமோகன் (லண்டன்), துஷா, ஜயந்தன், பிரசாந்த், அகிலன், அஜந்த், கிரிஸாந்த், சுதர்சனா, கிரிஜயந்த், கிறிஸ்ரா, அனோஜா, நிரூபா, நிவேதா, நிருசா, நிலோஜன், நிலானி, ஜேம்ஸ், லில்லிதீபா ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும், தேனுஹர்ஷன், டனுசிகன், நர்மதா, நந்திதா, ஜொஸ்னா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.11.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய ஒழுங்கை,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## வடக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவகாசம் கோரிய நிலையில் இவ்வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரன் சட்டத்தரணி மோகன் பாலேந்திரா ஊடாக இம்மனுவை தாக்கல் செய்திருந்தார்.

காணி ஆணையாளர் திணைக்களத்தின் சுற்றறிக்கையானது குரோத மனப்பாங்குடன் சட்டவிரோதமான வகையில், வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கு அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் புறக்கணிக்கும் வகையில் உள்ளதாக மனுதாரரான சுமந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

தமக்குச் சொந்தமான காணிகள் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ளன எனவும் இந்தச் சுற்றறிக்கையினால் தான் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சுற்றறிக்கையை இரத்துச் செய்யுமாறும் உத்தரவிடுமாறு கோரியும் தமது மனு தொடர்பான வழக்கு விசாரணை முடியும் வரை சுற்றறிக்கையின்படி செயற்படுவதை இடைநிறுத்துமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடக்கோரியும் மனுதாரரான எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். (ஒ-சி)

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புவதற்கும் ஏதுவான அடித்தளத்தை இந்நிறுவனம் அமைத்துக்கொடுக்கும்.

- இவ்வாறு நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் நோர்வே தூதுவர் ஹில்டி ஹெரல்ட் ஸ்டெட் பேசுகையில் தெரிவித்தார்.

கொழும்பு நோர்வே தூதரகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நோர்வே தூதுவர் ஹில்டி ஹெரல்ட் ஸ்டெட்டும், குடியேற்றத் திட்ட நிறுவனத் தலைவர் ரிச்சார்ட் டென்ஜிக்கரும் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டனர்.

முன்னாள் தமிழீழ விடுதலைப் போராளிகளைக் குடியேற்றுவதற்கும், சமூக ஒருமைப்பாட்டில் அவர்கள் சங்கமிப்பதற்கும் உதவுவதை நோக்காகக் கொண்ட சர்வதேச முயற்சிப் பணிகளில் நோர்வேயும் இணைந்துள்ளது.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் இந்த நோக்கத்துக்காகக் குடியேற்றத்துக்கான சர்வதேச நிறுவனத்திடம் அந்நாட்டு நாணயப்படி 3 மில்லியன் (இலங்கை நாணயப்படி ஏறக்குறைய ரூபா 57 மில்லியன்) நன்கொடையாக வழங்கியுள்ளது.

பாரதூரமான குற்றச்சாட்டுகளுக்கு உட்படாத முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் அரசால் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகிறார்கள். கடந்த வாரம் 400 முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

முன்னாள் புலிப் போராளிகளுக்குச் சமூக மட்டத்தில் மறுவாழ்வு அளிப்பதும், அவர்களை குடியேற்றுவதும் ஒரு சுலபமான காரியமல்ல. பூர்வாங்கக் கணிப்பீடுகளின்படி முன்னாள் புலிப் போராளிகளை உள்வாங்குவதில் சமூகம் அதிக ஆர்வமோ, அக்கறையோ செலுத்தவில்லை. முன்னாள் போராளிகளில் அநேகர் வீட்டுச் சூழலில் வாழ்ந்தவர்களும் அல்லர்.

இதை உணர்ந்தே இந்தியா, நோர்வே ஆகிய நாடுகள் உட்பட அநேக நாடுகள் யுத்தத்தால் சின்னாபின்னமாகச் சிதைவுற்ற சமூகத்தை இயல்புநிலைக்குக் கட்டியெழுப்புவதற்கு உதவ முன்வந்துள்ளன. சுயதொழில் முயற்சியில் ஈடுபடும் மகளிர் குழுக்களை உருவாக்குவதில் இந்தியா ஈடுபட்டுள்ளது. அதற்கான தொழிற்பயிற்சிக்கூடங்களை அது நிறுவி வருகிறது. இவற்றை உள்ளூர் நிர்வாகங்களே நிர்வகிக்கின்றன.

முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளைக் குடியேற்றுவதற்கான திட்ட நிறுவனம் 2009ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. முன்னாள் போராளிகளைக் குடியேற்றுவதற்கு ஏதுவாக பொருளாதார, சமூக ரீதியாக உதவுவதை இந்நிறுவனம் குறிக்கோளாகக்கொண்டுள்ளது. தனி மனிதரினதும், சமூகத்தினதும் சமாதானம், மனிதநேய பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இது ஒத்துழைப்பு நல்குகிறது.

குடியேற்றத் திட்ட நிறுவனம் ஏற்கனவே மூவாயிரத்துக்கு மேற்பட்ட முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளுக்கு நேரடி உதவிகளை வழங்கியுள்ளது. அவர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை மேற்கொள்வதற்காக பயிற்சி, தொழிற்கருவிகள், சிறுதொகை மானியம், தொழில் இடங்கள் ஆகியவை அளிக்கப்பட்டுள்ளன. (ஒ-சி)

## லண்டன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு ஆதரவாளர்கள் விமான நிலையத்திற்குச் சென்று வரவேற்பர்.

அன்று மாலை கூட்டமைப்பின் பிரிட்டன் கிளை உறுப்பினர்களுடனான சந்திப்பு இடம்பெறும். தொடர்ந்து 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 முதல் மாலை 4 மணிவரை விருந்துபசாரக் கூட்டம் நடைபெறும்.

இக்கூட்டத்தில், இன்றைய இலங்கை அரசியல் நிலையும் கூட்டமைப்பின் செயற்பாடும் பற்றி தலைவர்கள் விளக்கிக் கூறுவர்.

தொடர்ந்து 7 ஆம் திகதி முற்பகல் 10 மணியிலிருந்து பிரிட்டன் அரச அதிகாரிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரை சந்தித்து கூட்டமைப்பினர் உரையாடவுள்ளனர். அன்று மாலை 5 மணிக்கு ஊடகவியலாளருடனான ஒன்றும் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதையடுத்து, அன்று இரவே தமிழ்க் கூட்டமைப்பினர் கொழும்பு திரும்பவுள்ளனர்.

(ஒ-சி)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர் சி. துரைராசா அவர்களின்
அன்புத் தந்தையார்

**மாணிக்கம் சின்னையா**

அவர்கள் 31.10.2011 அன்று சிவபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைகிறோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
கிளி/உ மையாள்புரம் அ.த.க. பாடசாலை,
பரந்தன்.

## கண்ணீர் அஞ்சலி



யா/உரும்பிராய் சைவத்தமிழ்
வித்தியாலய வணிக பாட ஆசிரியர்
தர்மலிங்கம் நவீந்திரன் அவர்களின் அன்புத்
தந்தையார்

**அமரர் தம்பையா தர்மலிங்கம்**

[ஓய்வு பெற்ற தபாலதிபர்]

அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களின் துயரில் நாங்களும் பங்கு கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினர்
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

## இதய அஞ்சலி



**தம்பையா தர்மலிங்கம்**

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

ஆன்மிக மேம்பாட்டுக்காக அரும்பாடுபட்டவரும், அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் கோயில் பரிபாலனசபைத் தலைவரும் அருணோதயா சனசமூக நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினரும். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை பழைய மாணவர் சங்க பொருளாளராகவும் நேர்மையுடன் விளங்கிய அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு. எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ்ப்பாணம்.
காவேரி சில்க்ஸ், ஸ்ரைல்பார்க்,
நிர்வாகியும், ஊழியர்களும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நினைவஞ்சலியும்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 22 | 03 |
| * | * |
| 05 | 10 |
| * | * |
| 1922 | 2011 |



**அமரர் வல்லிபுரம் தம்பிராசா**

தந்தையே எம்ம வாழ்வித்த தெய்வமே
எம் மனக் கண்ணில் நின்றாடும் எந்தையே
எமக்கு நல் வழிகாட்டியே சென்றீர்
நன்றிகள் பலவாய் தந்தனம் உமக்கே

கடந்த 03.10.2011 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை 04.11.2011 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலாவோடை,
இணுவில் மேற்கு.

குடும்பத்தினர்.

# ஊழல் நிறைந்த அரசிடமிருந்து நாட்டைக் காக்க எதிர்க்கட்சிகள் இணைந்து போராட வேண்டும்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

'ஊழல், மோசடி தலைவிரித்தாடும் இந்த ஆட்சி பீடத்திலிருந்து நாட்டைக் பாதுகாப்பதற்கு பிரதான எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்று கோரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

கட்சிக்குள் நிலவும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி,ஜே.வி.பி ஆகிய எதிர்க்கட்சிகள் மோசடி மிக்க ஆட்சிப் பீடத்துக்கு எதிராகப் போராடவேண்டும் என்றும், எதிர்க்கட்சிகள் இணைந்து மாபெரும் சக்தியாக உருவெடுக்காவிட்டால், நாட்டு வளங்களை சூறையாடி அரசியல் பிழைப்பு நடத்துபவர்கள் நாட்டை படுபாதாளத்தில் தள்ளிவிடுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்து வரும் சரத் பொன்சேகா மருத்துவப் பரிசோதனைக்காக நேற்று தனியார் வைத்தியசாலையொன்றுக்கு அழைத்துவரப்பட்டார். சிகிச்சை முடிந்தப் பின்னர் வைத்தியசாலையிலிருந்து சிறைச்சாலைக்கு மீண்டும் திருப்பும் வழியில் வெளியிட்டப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (சி)

# இலங்கை மீனவர் ஐவர் விடுதலை

இந்தியாவுக்குச் சொந்தமான அந்தமான் தீவுகளில் கைது செய்யப்பட்ட ஐந்து இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் எதிர்வரும் சில தினங்களில் விமானத்தின் ஊடாக நாட்டிற்கு அழைத்துவர தீர்மானிக்கப்பட்டுள்ளது என கடற்தொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ரொஷான் புத்தா 1 என்ற படகில் மீன்பிடி நடவடிக்கைகளுக்காகக் கடலுக்குச் சென்றிருந்தபோது கைதுசெய்யப்பட்ட மீனவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்களை சென்னைக்கு அழைத்துச் செல்வதற்காக சென்னையில் உள்ள இலங்கைப் பிரதி தூதரகத்தின் உயரதிகாரி ஒருவர் அந்தமான் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளார்.

ஏனைய இலங்கை மீனவர்களை விடுவிப்பது தொடர்பில் அந்தமான் தீவுகளின் பிரதான செயலாளருடன் குறித்த உயரதிகாரி கலந்துரையாடவுள்ளார் எனவும் கடற்தொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிப்பதே இதன் முக்கிய நோக்கம் என அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

**நோயாளியைப் பராமரிக்க ஆள் தேவை**

கொழும்பில் வசிக்கும் தமிழ்க் குடும்பம் ஒன்றின் நோயாளர் (ஆண்) ஒருவரைக் கவனிப்பதற்கு அனுபவமுள்ள ஒருவர் தேவை. ஆண் தாதி. சென். ஜோன்ஸ் அன்புலன்ஸ் பிரிவைச் சேர்ந்தவர், செஞ்சிலுவைச் சங்கத்தில் சேவையாற்றியவர்கள் தொடர்புகொள்ளவும்.
(சாப்பாட்டுடன் தங்குமிட வசதியும் நல்ல சம்பளமும் வழுங்கப்படும்)
தொடர்புக்கு: 071 8695695

## தனியார் பஸ் சங்கம் இரு வார காலக்கெடு

தேசிய போக்குவரத்துக் கொள்கையை உரிய முறையில் அமுல்படுத்தல் உள்ளிட்ட 3 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அரசுக்கு 2 வார காலக்கெடு விதித்துள்ளது.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடின் எதிர்வரும் 15ஆம் திகதி மாபெரும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் போக்குவரத்துக் கட்டணத்தை அதிகரிக்க முடியாதுள்ளது. எதிர்வரும் வருடத்தில் போக்குவரத்துக் கட்டணங்கள் மறுபரிசீலனை செய்யப்படும் தினம் வரை நிவாரண அடிப்படையில் பழைய விலைக்கு எரிபொருளை வழங்க அரசு முன்வர வேண்டும் என்றார்.

## விமான நிலையத்தில் இருவர் கைது

சட்டவிரோதமாக ஒரு தொகை வெளிநாட்டு நாணயங்களை கடத்திச் செல்ல முற்பட்ட இலங்கையர் ஒருவர் விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

30 இலட்சத்து 94 ஆயிரம் ரூபா பெறுமதியான ஜப்பானிய யென்களை சந்தேகநபர் பயணப் பொதியில் மறைத்து வைத்து வெளிநாட்டிற்குக் கடத்திச் செல்ல முற்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சுமார் 11 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை இந்தியாவிற்கு கடத்த முற்பட்ட ஒருவர் விமான நிலைய சுங்கப்பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் 50 ஆயிரம் ரூபா அபராதத் தொகையுடன் விடுதலை செய்யப்பட் டுள்ளார். அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கம் அரசுடமையாக்கப்பட்டுள்ளது.

**விற்பனைக்கு**



செங்கல், கருங்கல், சீமெந்து கல், அத்திவார கற்கள், சல்லி கற்கள், நிலப்பதிப்புக் கற்கள், பூவடிவ கற்கள், கொங்கிறிட் கதிரை செட் கருங்கல் தூள்
**பிரணவன் என்ரபிறைசஸ்**
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சங்கிலியன் சிலைக்கு முன்)
077 3818799

**அலுவலகத்துக்கு இடம் தேவை**

வவுனியா நகரப் பகுதியில் 'உதயன்' பத்திரிகையின் விளம்பர அலுவலகத்துக்கு ஓர் இடம் தேவை.
தொடர்புகளுக்கு: தலைமைக் காரியாலயம், 'உதயன்' பணிமனை, இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 5677602

கல்வியில் புதிய சகாப்தம் படைப்போம்
**சங்கானை றோயல் அக்கடமி**
A/L 2012,13 கலை, வர்த்தகப் பிரிவுகள்
கலைப் பிரிவுகள் ஆரம்பம் 05 Nov 2011
- தமிழ் பத்மநாதன்
- புவியியல் பாபு
- இந்துநாகரிகம் ஸ்ரீஸ்
- நாட. அரங்கியலும் நமேஸ்
- பொருளியல் வரதராஜன்
- அளவையியல் E.S.பவன்
- அரசியல் சுகாஷ்
- வரலாறு R.S.சந்திரன்

வர்த்தகப்பிரிவுகள் நடைபெறுகின்றன
- பொருளியல் வரதராஜன்
- வணிகக்கல்வி முரளி
- கணக்கீடு பகீரதன்
- ஆங்கிலம் மதன்

**கார் வாடகைக்கு**

திருமண வைபவங்களுக்கான A/C கார் வாடகைக்கு உண்டு. (குறைந்த பெறுமதியில் பெற்றுக் கொள்ளலாம்)
தொடர்புகளுக்கு: S.மதன் 0777283283

A/L 2012 & Day | கணக்கீடு திரு.பாலகஜன் H.N.Dip in ACC | A/L 2013
New Economics College NEC
மணிக்கூட்டு வீதி (பெருமாள் கோயில் அருகில்) ஆனைப்பந்தி
யாழ்.நகரில் இக்கல்வி நிலையங்களில் மட்டுமே எமது வகுப்புகள் நடைபெறுகின்றன. அனைத்துப் பிரிவுகளுக்கும் ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்

**புதியபொருளியல் கல்லூரி**
மணிக்கூட்டு வீதி, யாழ் நகர். (பெருமாள் கோயிலுக்கு அருகில்)
ஆரம்பம்:- 05.11.2011 சனி, காலை 8 மணி
**A/L 2013, A/L 2012**
கலை, வர்த்தகப் பிரிவுகள்
**வர்த்தகப் பிரிவு**
கணக்கீடு-K. பாலகஜன்
வணிகக்கல்வி- S.K. பாலசபேஷ், S. யசோ
பொருளியல்-N.B கஜீதரன்
**கலைப்பிரிவு**
தமிழ்-A.Kசுரேந்திரஜன் | அளவையியல்-P.கால்
பொருளியல்-N.B கஜீதரன் | இந்துநாகரீகம்-T.ஸ்ரீஸ்
வரலாறு-R.R..ஆனந்தன் | அரசியல்-A.K.றொபின்சன்
புவியியல்-S.Rபாலா | நாட.அரங்கியல்-S.R.மோஸ்
கிறிஸ்தவம்-S.கஸ்ரோல் | விவசாயம்-R.கிரி
சித்திரம்-R.R.ராஜ் | ஆங்கிலம்-S.ஜைசன்
புள்ளிவிவரவியல்/ இலகு கணிதம்-S.சாந்தன்
★ தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்.
★புதிய பிரிவுகள் ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
★தனியார் கல்வி நிறுவன வரலாற்றில் யாழ். நகரில் நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒன்றிணைந்த வழிகாட்டலில் வகுப்புகள் இடம்பெறும்.
A/L DAY CLASS கலை,வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்:- 07.11.2011 திங், காலை 8 மணி

**SAAMSON ENGLISH** 3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி
இது வரை காலமும் நீங்கள் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கருதி புத்தகத்தைப் படித்தும், கொப்பியில் எழுதியும், இலக்கணத்தைக் கற்றதாலுமே அது உங்களுக்கு கடினமாக இருந்தது.
எமது பழக்கப்படுத்தல் மூலமான ஆங்கிலப் பயிற்சியானது ஒரு மனிதன் தன் தாய்மொழியை எவ்வாறு பழகிக் கொண்டானோ அதனை அடிப்படையாகக் கொண்டதாகும்.
முற்று முழுதாக ஆங்கிலம் பேசப்படுகின்ற சூழலில், ஆங்கிலம் பேசுபவர்களுடன் இணைந்து நீங்களும் 3 மாதத்தில் தமிழைப்போல ஆங்கிலம் பேச வேண்டுமா?
புதிய பயிற்சிப்பட்டறை ஆரம்பம்: 05.11.2011
(ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்)
சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 09-11 பிரிவு III 02-04
பிரிவு II 11-01 பிரிவு IV 04-06
3 மாத கட்டணம் 3000/=
SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 077 621 4567

**கனடா செல்ல விரும்புகிறீர்களா?**
மார்ச் மாதம் செல்லக்கூடிய வாய்ப்புண்டு.
அத்தோடு..... மிகுதியை நேரில் பின்வரும் முகவரியில் சனி அல்லது ஞாயிறு பேசிக் கொள்வோமா?
**திசைகாட்டி**
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். நகரில் இருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்த உடன் வலதுபுறமாக வரும் ஒழுங்கை)
T.P. 021 491 4527, 021 222 9016


**3 ஆவது ஆண்டு நினைவு தினம்**



அமரர் அருணாசலிங்கம் சுகிர்தாமலர்

மடத்துக்கடவையில் மாண்புடனே
வாழ்ந்தவளே எங்கள் அம்மாவே
சுற்றமெல்லாம் சூழ்ந்து நின்று கிளி அம்மா என்றழைக்க
கிளிப் பேச்சு நீ பேசி வாழ்ந்த காலமெல்லாம்
எம் வசந்த காலம் அம்மா
பாசந்தனை பொழிந்து பக்குவமாய் வளர்த்தீரே எம்மை
இப்போ பரிகாரம் செய்வதற்கு தேடுகின்றோம் உம்மை
விரைந்து நீங்கள் வருவீரா?

தோற்றம்: 11.03.1942
மறைவு: 03.11.2008

மடத்துக்கடவை, அல்வாய் வட..மேற்கு, அல்வாய். குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.